ஓம் பரப்ரஹ்மணே நம !

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலாவிலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.)

 [REGISTERED

கமலம்-5.	சென்னை : பிரமோதூத௵ வைகாசி௴ 1௳	இதழ்-50.
Vol. 5.	1930-ம்௵ மே௴ 14௳	No. 50.

ஆநந்த தரிசனம்

அண்டகோடிகள் படைத்தேயவை யசைவறச் செய்தின்னும்
பிண்ட மாதிகளுக்கெல்லாம் பிராணனா யிருந்துலாவிப்
பண்டை நான்மறைக்கு மெட்டாப் பகவ நின்னடிதனக்கே
தொண்டுநான் புரிந்தேனின்னைத் தொழுதுய்யும் வரமளிப்பாய்.

" அன்பருக்குளன்பராய் நின்ற ஆதிநாயன் " யார் உலகத்தைப் படைத்தவரோ, உலகத்தை யறிந்தவரோ, ஆன்மாக்களுக்குக் காரணரோ, ஞானமுள்ளவரோ, காலத்திற்குத் தலைவரோ, குணத்தை யுடையவரோ, யாவற்றையும் அறிந்தவரோ, ஸம்ஸாரத்தினது நிலைக்கும்—பந்த மோக்ஷங்களுக்கும் யார் காரணமானவரோ— அவரது பாத பத்மங்களைத் தியானிக்கின்றேன்.

ஃ

" மண்டலங்கள் மூன்றினோடு மன்னுகின்ற மாயன் " அவர் ஞானஸ்வரூபி, அழிவற்றவர், யாவற்றிற்கும் தலைவரானவர், எல்லா இடத்திற்கும் போகிறவர், இவ்வுலகின் பரிபாலகர், யார் இவ் வுலகத்தை எப்பொழுதும் நியமத்தில் வைத்திருக்கிறாரோ, அவர் தவிர இவ்வுலக நியமத்திற்கு வேறு காரணரில்லை. நான் முமுக்ஷுவாகி, ஆத்மபுத்திப் பிரகாசனாகிய அப்பரமேச்வரனைச் சரணடைகின்றேன்.

ஃ

ஒரு சக்தியுள்ளவர்கள் அந்த சக்தியில்லாதவர்களைப் பழித்துக் கேவலம் செய்கிறார்கள் தாங்களும் அந்த சக்தியை இழக்குங் காலத்தில் முன்பு பழித்த அக்கிரமத்திற்கு இரங்கி மனமுருகுவர். அந்த ஏக்கமும் பிறகு உணர்வர்.

"புண்டரீக மத்தியி லுதித்தெழுந்த சோதி" யாரால் இப்பிரபஞ்சம் சுழன்றுகொண்டிருக்கின்றதோ; அவர்—உலகம், காலம், உருவமுடைய பொருள்கள் இவை எல்லாவற்றையும் விடச் சிறந்தவர், வேறானவர். அவர் தருமத்திற்கு மூலமானவர்; பாபத்தைப் போக்குகிறவர்; செல்வத்திற்குத் தலைவர்; அவர் எல்லா உயிர்களுக்கும் உள்ளேயிருப்பவர்; அழிவற்றவர்; உல கத்திற்கு ஆதாரமானவர்; அவர் நன்மையே வடிவாக உடையவர்; உலகத் தைச் சூழ்ந்திருக்கிறவர்; அவரை யறிந்து உயிர்கள் மிகச் சாந்தி பெறுகின்றன என்று உலகம் தோன்றியபோதே பாடியிருக்கின்றார்கள்—அந்தப் பரம புரு ஷனைத் துதிக்கின்றேன்.

ஃ

"காட்சிக் கெளியான்காண், கண்டாலுங் காணான்காண்" கடவுள் கண்ணால் காணப்படாதவர், கருமேந்திரியங்களால் கவரப்படாதவர், வியவ ஹரிக்கப்படக் கூடாதவர், கருத்தி லடங்காதவர், சொல்லி முடியாதவர், ஸம் ஸார தர்மத்தைக் கடந்தவர், சாந்தமானவர், மங்கள ஸ்வரூபி—அவர் பாத மலரைப் போற்றுகின்றேன்.

ஃ

"ஆனமுத லெறும்புகடைக் கழதளித்துக் காக்கு மொருவன்" அவர் யார்? அவரே பரமாத்மா. சரீரத்தில் சிறந்த இடத்தில் இருவர் இருக்கிறார் கள். அவர்களில் ஒருவர் தமது செய்கைகளுக்குரிய பயனை யனுபவிக்கிறார். மற்றொருவரோ பலனைக் கொடுக்கிறார். இரண்டு அழகான பறவைகள் எது? அவை ஜீவாத்மாவும் பரமாத்மாவுமாம். இவை இரட்டையாகவும் தோழமை யுடனும் குடியிருக்கின்றன. அவைகளில் ஒன்று செய்கைகளின் பயன்களை யநுபவிக்கின்றது. மற்றொன்று பார்க்காமல் அனுபவித்துக்கொண்டு மாத் திரம் இருக்கின்றது. பரமாத்மாவே ஜீவாத்மாவுக்குச் சிறந்த பதவி. பர மாத்மாவே ஜீவாத்மாவுக்குச் சிறந்த செல்வம். பரமாத்மாவே ஜீவாத்மாவுக்குச் சிறந்த உலகம். பரமாத்மாவே ஜீவாத்மாவுக்குச் சிறந்த ஆநந்தம். அந்தப் பர மாத்மாவை ஹிருதய பூர்வமாய் வணங்குகின்றேன்.

ஃ

"தேவ னெம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமோ?" எல் லாப் பிரபுக்களுக்கும் சிறந்த பிரபுவும், எல்லாத் தேவதைகளுக்கும் சிறந்த தேவ தையும், எல்லாத் தலைவர்களுக்கும் சிறந்த தலைவரும், சிறந்த எல்லாவற்றிலும் சிறந்தவரும், தானாக விளங்குகிறவரும், உலகங்களுக்கு ஈசனும், துதிக்கப்படத் தக்கவனுமானவனை என் மனமே நீ பின்பற்றக்கடவாய்.

ஃ

"எந்த நிறைபொருளை யெண்ணிப் பணிவாயேல், தங்கும் பரகதி யில் சந்ததஞ் சாருவையே." எந்தப்பூரண புருஷர், எல்லா உயிர்களும் உறங்கிக் கொண்டிருக்கையிலும் தாம் விழித்துக்கொண்டிருந்து அவைகளுக்கு வேண் டிய யாவற்றையும் படைத்துக்கொண்டிருக்கின்றாரோ அவர் சுத்தர், அவர் ப்ரஹ்மம், அவர் அழிவற்றவர் என்று சொல்லப்படுகின்றார். அவருக்குக் கையில்லை, ஆயினும் கிரஹிக்கின்றார்; அவருக்குக் கால் இல்லை, ஆயினும் நடக்

வீட்டுப் பாடம் இல்லாவிடில் பள்ளிப் பாடம் சுகப்படாது. பள்ளிப் பாடம் இல்லாமல் வீட்டுப் பாடம் உருப்படாது. இரண்டிடத்திலும் பயிலுக.

கிறார்; அவருக்குக் கண்ணில்லை, ஆயினும் பார்க்கிறார்; அவர்—அறியத்தக்க யாவற்றையும் அறிகிறார்; ஆனால், அவரை முற்றும் அறிந்தவரில்லை. அவர் ஒன்றிலிருந்து உண்டாவதில்லை, ஒன்றாவதுமில்லை. அவர் நிர்மலமானவர்; ஆகாயத்தை விட சூக்ஷ்மமானவர். பிறப்பற்றவர், பரமாத்மா, பெரியவர், நித்யமானவர்—அவரைக் காய மனோ வாக்காற் பணிகின்றேன்.

ஃ

"கண்ணினுண்மணியைக் கற்பகத்தைக் காஞ்சனத்தை" பேசரிய முப் பொருளை, விண்ணின் அமுதை, விளக்கொளியை, வெங்கதிரைத் தண் ணளியை யுள்ளில் வைத்து மனமே, நீ தியானிப்பாயாக. அவர் அசைகிறார், அசையவில்லை; அவர் தூரத்தி லிருக்கிறார், அவர் ஸமீபத்திலு மிருக்கிறார்; அவர் இந்த யாவற்றிற்கும் உள்ளே யிருக்கிறார்; அவர் இந்த யாவற்றிற்கும் வெளியே யிருக்கிறார். எதனிடத்திலிருந்து பொருள்கள் உண்டாகின்றன வோ,—உண்டானவை எதனால் நிலைபெற்றிருக்கின்றனவோ,—முடிவில் எதை நோக்கிச் சென்று அடைகின்றனவோ—அதை விசேஷமாய் அறிய விரும்புங்கள். யார் ஜ்ஞானேந்த்ரியங்களுக்கு விஷயரோ, கர்மேந்த்ரியங் களுக் கதீதரோ, வர்ணமற்றவரோ, எல்லாப் பொருள்களுக்கும் பிறப்பிடமான வரோ அவரை ஆத்மஞானிகள் எங்கும் பார்க்கின்றனர்.

ஃ

"தேவனுதவியன்றித் தேர்ந்திடில் வேறென்றில்லை." கடவுளுடைய பெயர் இன்னதென்றும், கடவுளை நம்புவோன் இன்னவனென்றும், கடவுளை நம்பாதவன் இன்னவனென்றும் யாராகிலும் துணிந்து சொல்லக் கூடுமோ? கடவுளைச் சரியாய்க் காண்பது கஷ்டம். பிறருக்கு அவருடைய பிரதாபத் தைச் சரியாய் வர்ணித்தல் அஸாத்யம். லோக ரட்சகரான அந்தப் பராபர வஸ்து தாம் படைத்த ஸகலத்திற்கும் இடையில் இராஜாதி ராஜனாக வீற் றிருக்கின்றார்.

ஃ

"நினைப்பதொன்று கண்டிலே னீயலாது வேறிலை" என்று ஞானிகள் பகவானைப் போற்றுகிறார்கள். யாரெப்படி யாசரிக்கிறாரோ அவரப்படியாகிறார். தர்ம காரியங்களைச் செய்வதினால் ஆன்மா பரிசுத்தமுள்ளதாகிறது. ஒரு பெரிய கடியாரத்தின் வெளிப்பாகத்தில் பார்க்கும்போது மணியையும், நிமிஷங் காட்டும் முள்ளுகளின் இருப்பையும் மாத்திரம் அறிகிறோம். பிறகு ஒருவித மான "டிக் டிக்" என்னும் சப்தமும் கேட்கின்றது. வெளியிலிருந்தும் அறிவது இவ்வளவே. மேல் தகட்டை நீக்கி உள்ளே பார்ப்போமாயின் அற் புதமான சக்கரங்களையும் வில்லுகளையும் அவற்றின் அமைப்பினது பெருமை யும், நியமிப்பினது அருமையான அறிவும் பிரத்தியக்ஷமாகின்றது. மேலும், அந்தக் கடியாரத்திற்கு ஒரு நியமனம் "உண்டு உண்டு" என்று சொல்லும் பாவனையாக பெண்டுலம் ஆடியும் கோஷிக்கின்றது. அதேவிதமாகவே, மானவ ஜாதியின் கையிலாடும் நாடிகளைத் தொட்டுப் பார்த்தாலும், ஒரு நியந்தாவின் நியமனம் உண்டு உண்டு என்றே கோஷிக்கின்றன. அந்நாடிக ளிருக்கப்பட்ட இடத்தை யறுத்துப் பார்த்தால் அப்போது மாத்திரம் அவற்றின் நியமனம்

சில சமயங்களில் அவசரத்தில் முக்கிய இடம் தெரியாமல் தடமாடிப் போக வேண்டி வருகிறதாம். பிறகு தான் நிதானித்து அறிய முடிகிறதாம்,

அற்புதமாகத் தோன்றும். கடியாரத்தின் அருமை பெருமைகளை மேல் தகடு மூடிக்கொண்டிருப்பதைப் போலவும், நாடிகளின் அருமை பெருமைகளை நரம்பு, தசை, தோல் மூடிக்கொண்டிருப்பதைப் போலவும், சில மனுஷர்களுடைய அகக் கண்ணை அஞ்ஞானமாகிய போர்வை மூடிக்கொண்டிருக்கிறது. அப்போர்வையை நீக்கிப் பார்த்தால் நியமனத்தின் அருமையும் பெருமையும் பிரத்தியக்ஷமாகும். இந்த நியந்தாவைத்தான் கடவுளென்றும் கர்த்தாவென்றும் எத்தேசத்தாரும் எக்காலத்தாரும் கொண்டாடிவருகிறார்கள்.

ஃ

"பலபலவாய்ச் சொல்லப்படுமொரு பொருள்" ஆன்மகோடிகள் உண்டாவதற்கும், அவைகள் அற்புதமாக ஜ்வலிப்பதற்கும் ஓர் ஆதிகாரண வஸ்து இருந்திருக்க வேண்டுமென்று நமது சாதாரணமான ஞானம் நமக்கு அறிவிக்கின்றது. அந்த ஸஹஜமான ஞானத்தால் அறியப்படும் வஸ்துவைத்தான்—பரமாத்மாவென்றும், பரப்ப்ரஹ்மமென்றும், பராபரவஸ்துவென்றும், விஷ்ணுவென்றும், சிவனென்றும், அச்சுதனென்றும், அமலனென்றும், ஆதியென்றும், இறையோனென்றும், ஈச்வரனென்றும், எல்லாம் வல்லோனென்றும், ஏகனென்றும், ஐயனென்றும், கர்த்தாவென்றும், சச்சிதானந்தனென்றும், தேவனென்றும், நாதனென்றும், நாயகனென்றும், நாராயணனென்றும், பகவானென்றும், பரமபிதாவென்றும், பிரானென்றும், பூரணனென்றும், மகேசனென்றும், மூவுலகேந்தி யென்றும், அகிலநாதனென்றும், இரக்ஷகனென்றும், இராமனென்றும், வித்தகனென்றும், விமலனென்றும், வீரனென்றும், வேந்தனென்றும், வெய்யோனென்றும், வேதனென்றும், வேதாந்தனென்றும், கடவுளென்றும், காட் (God) என்றும், அல்லா (Ahalla) என்றும், ஜிஹோவா (Jehova) என்றும், திபேல் (Thebale) என்றும், தியோஸ் (Theos) என்றும், கிஸ்டு (Giest) என்றும், எல் (El) என்றும், பரமார்த்தம் (Matter) என்றும், செருணு அகரணு (Zeruna Akerana) என்றும், ஆர்மஸ்டு (Ormuzed) என்றும், பதா (Patha) என்றும், நாக் பா நாக் (Nak Pa Nak) என்றும், பிதல் (Bethel) என்றும், இலோஹியம் (Elelohim) என்றும், ஆத்மா (Spirit) என்றும், சிருஷ்டி கர்த்தா (Natura Naturata) என்றும் இன்னும் பற்பலவிதமான பெயர்களால் எக்காலத்திலும், எத்தேசங்களிலும் கொண்டாடிவருகிறார்கள். அவ்வொரு தனிப் பரம்பொருளை மன மொழி மெய்களால் என்றும் துதித்து உய்யக்கடவோம்.

ஒருவனு யெங்குந் தோன்றி யோங்கிய உலகந் தன்னைத்
தருந்தொழில் தானே பூண்டு தயவுட னுத்மகோடி
விரும்பிய வின்ப மெல்லாம் விவிதமா யளித்துக் காக்கும்
பரம்பொரு ளான ஏக பரமனூர் பதங்கள் போற்றி.

வானந் தராதலம் வாரிதி வன்னி வளிமுதலின்
ஞனந்த மாதியி லானெள்ளி லெண்ணே யெனவகன்றுன்
ஆனந்த மாக்கட லாடும் பிரானடி யார்களுறும்
ஈனந் தவிர்த்திடு வான்கழ லென்று மிறைஞ்சுவமே.

அமிர்தகுணபோதினி

பிரமோதூதஸு வைகாசிமீ 1உ

தொழில் முறையில் காருண்ணியம்.

ஆதரித்திடும் கருணையில் ஒப்பற்றதோர் புதிய இன்பம் உளது. தன் பாடுகளைச் சொல்ல வந்தவர் இந்தக் காருண்ணிய தரிசனம் பெறின் எத்துணையோ மன ஆறுதல். பிறரது கஷ்டங்களைக் கேட்டு, தான் உதவக்கூடியதை உடனே புரிந்து ஆதரித்தல் எவ்வளவோ காலசகாயம். ஆதரிக்கும் காருண்ணியம் ஓர் அமிர்த குணம். அது அன்பு, தயை, இரக்கம்—இவற்றினின்றும் தோன்றிய ஒரு சுடரொளி. தான் பிறரை ஆதரிக்குங்காலையில் தன்னைக் கடவுளும் ஆதரிக்கின்றாரென்பது உண்மை. "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்பது பழமொழி. ஆதரிக்கப்பட்டோர் நன்றியுணர்த்துகின்றனரா வெனும் ஆராய்ச்சியே நமக்கு வேண்டாம். நாம் ஆதரித்ததில் நமக்குள் எழும் திருப்தியும் உத்ஸாகமும் பூரிப்புமே நமக்குப் பெரிய ஸன்மானம். உலகில் உள்ளவரையில் பிறரது நன்மைக்காகவே நாம் வாழக்கடவோம். நல்லதையே நாளும் நாளும் நடத்தி நமது கணக்கை இறைவனிடம் ஒப்புவிப்பதென்னும் உறுதி ஏற்றல் எல்லாச் சிறப்புக்கும் வழி. நல்லதைச் செய்வதில் நமது மனமும் நல்வழியினதாகிப் பரிசுத்தப்படுகின்றது. நமது எண்ணங்கள் நல்லதாக இருப்பின் நமக்கும் பிறருக்கும் அது நலமே தருகின்றது. நல்லதைச் செய்து கெட்டவரில்லை. ஒரு சமயம் காலகதி விபரீதமாகிக் கெட வைப்பினும், நல்லது செய்தாரை நாவினால் துதிக்க நால்வர் எங்கெங்கும் இருப்பர். நம்மால் இயன்றவரை நல்லதையே செய்துகொண்டு சென்றிடுவோம் நமது ஞால வாழ்விலே.

ஃ

ஆதரிக்குங் காருண்யச் செய்கை யுடையவனாதல் எவ்வாறு? தொழில் அற்றவனிடத்தில் தொழிலிலுள்ளோன் இரங்கி உதவ

எடுத்ததும் ஒன்றை உடனே வாசிப்பதை விட்டு, அந்தக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பிறகு படிக்கும்படியாகக் காலமும் வந்ததே தேவா!

வேண்டும். தன்னைப்போல் அவனும் ஜீவித்து வாழ ஏதேனும் ஒரு வழி திறந்து காட்டவேண்டும். தமக்கு வேலை கிடைத்துவிட்ட தென்ற மமதையில், மற்றவர்களைப் பிழைக்க வழி தெரியாதவர்க ளென்று இகழல் தகாது. அது, தான் இருக்கும் வேலையைக்கூட இழந்துவிட வைக்கும் ஒரு பாவமூட்டையாம். தங்களின் உத்தி யோகம் சாசுவதமென்று நம்பியவர்களில் எத்தனையோ பெயர் வேலை இழந்து தடுமாறியுள்ளார். தானே புத்திசாலி, மற்றவர்கள் மூடர் என்று கருதும் அலக்ஷிய சிந்தை என்றும் நன்மையைத் தரா. அது அகம்பாவத்தில் முடிந்து, காருண்யத்தைக் கொன்றுவிடுகின் றது. தாம் உயர்ந்துவிட்ட தன்மையில், உயராதாரை இகழ்தல் தெய்வஸம்மதமாகாது. ஒருவனுக்குக் கடவுள் உயர்வையும், பிழைக்கும் வழியையும் காட்டியதின் கருத்து—அவன் மற்றவர்க ளுக்கு உபகாரகுணமுள்ளவனாய் இருக்கவேதான். வேலை கிடைக் கப்பெற்றவர்கள் வேலை கிடைக்காது தவிப்பவர்க்குத் தங்களாலான மட்டில் சிரமப்பட்டு உபகாரிகளாதல் காருண்யச் செய்கையாம். அச் செய்கைக்குக் கடவுள் பெரிதும் சந்தோஷிக்கின்றார்.

ஃ

ஒவ்வொருவருக்கும் ஒரு தொழில் எவ்விதமோ கிடைத்து விடுகின்றது. அத்தொழில் முறையில் எவ்வளவுக்குத் தாம் பிற ருக்கு உபகாரிகளாய்க் காருண்யம் காட்டுதல் கூடுமோ, அவ்வளவுக் கும் முயன்று நடந்துகொள்தலே இறைவனின் அருளைப் பெற வழியாம். ஒரு கடையில் ஒரு வஸ்துவைப் பெற்றுச் சென்றவர், பிறகு அது பழுதுள்ளதென்றோ, தமக்குப் பிடிக்கவில்லையென்றோ திருப்பிக் கொண்டுவந்து தருகையில் அதை ஒப்புக்கொள்ளக் கடைக்காரர் மறுத்துவிடுவதே எங்குமுள்ள வழக்கம். மறுப்பது சுலபம்; அது எளிதில் செய்யக்கூடியது. அதில் பெருமை யில்லை. மறுக்காது கடைக்காரர் அந்தப் பொருளை ஏற்றுக்கொள்வதில் தான் அதிக மதிப்பும், கடவுளின் அருளும், தன் மனோ பரிசுத்த மும், வியாபார ஒழுங்கும், சத்தியகுணமும் அடங்கியிருக்கின்றது. எது செய்வதற்குக் கஷ்டமோ அதை மனமுவந்து முயன்று செய்வ தில்தான் விசேஷித்த பக்குவமும் உயர்ச்சியும் இருக்கின்றது.

ஃ

தமது உத்தியோக பதவியில் ஒருகாசு செலவுமின்றித் தமது காருண்ணியச் செய்கையால் பிறருக்கு உதவக்கூடிய சந்தர்ப்பங்கள் எவ்வளவோ நேரும். அதை உபயோகித்துக்கொண்டு இறைவனின் கருணைக்கு உரியவராதலில்தான் சாமர்த்தியம் இருக்கின்றது.

தியாகம், ஊக்கம் என்பது ஜனங்களிடை உண்டாவதல்ல. ஒரு தலைவ ரிடம் அது முதலில் உண்டாகிப் பிறகு ஜனங்களிடையே பரவி, அப்பால் அனைவரையும் ஊக்கமும் தியாகமும் உள்ளவர்களாகச் செய்துவிடுகின்றது.

உதாஸீனத்துடன் அலக்ஷியம் செய்தலும், தனது உத்தியோக கர்வத்தின் சின்ன புத்தியால் ஒவ்வொன்றுக்கும் குறை கூறி மறுத்துவிடுதலும் அதி சுலபம். அந்தச் சுலப காரியத்தைச் செய்வதற்காகக் கடவுள் தனக்கு உத்தியோக பதவியைத் தரவில்லை. கஷ்டமாகத் தோன்றுகிற காருண்யத்தை எந்த வேளையிலும் காட்டுதற்கே நம்மை இத்துணை நல்ல நிலைமையில் இறைவன் வைத்துள்ளார்.

ஃ

ஒரு தபால் அதிகாரி ஒன்றைச் செய்துதர நேரமாய்விட்டதென்று மறுத்துவிடலாம். அன்றைய தபாலுக்குச் சேரும்படி கொண்டுவந்த ஒரு அவசர கடிதத்தையோ, ஒரு மணியார்டரையோ குறித்தகாலம் மிஞ்சிவிட்டதென்று ஒப்புக்கொள்ளாது போய்விடலாம். இது சுலபம். தபால் விதிகளும் இதற்கு உதவிசெய்யும். ஆயினும், காருண்யத்துடன் பிறர் தவிப்பையும் அவசரத்தையும் கவனித்து, தமக்குக் கஷ்டமாயிருப்பினும் அவர்கள் கெஞ்சி வேண்டியதை நிறைவேற்றிவிடுவதில் எவ்வளவோ மேன்மையும், கடவுளுக்குப் பிரீதியான செய்கையும் அடங்கியிருக்கின்றது. பிறரைத் தவிக்கவைப்பதற்கு நாம் பிறக்கவில்லை. அந்தத் தவிப்பை நிவர்த்திக்கவே நம்மைக் கடவுள் இங்கு அனுப்பியிருக்கிறார்.

ஃ

தமது உத்தியோக ஆரவாரத்தில் தாம் மறுக்குந் தன்மையால் மற்றொரு ஆத்மா துன்ப மடைவதன்றி வேறு பயன் ஏதே? தமது காருண்யத்தை ஒவ்வொரு செயலிலும் உணர்த்தி, புண்ணியத்தைக் கொள்ளையிடுதற்குக் கிடைக்கும் சமயங்களை யெல்லாம் வாரிக் கொள்பவர்களே மகா பாக்கியசாலிகள். அவர்களே கடவுளால் ஆசீர்வதிக்கப்படுபவராவர். பிறருக்குக் காருண்யத்துடன் உதவப் பாக்கியம் கிடைக்கும்போது, அந்த அரிய சந்தர்ப்பத்தை விட்டுவிடுவது எத்துணைத் துர்ப்பாக்கியம்? பிறரது அவசரத்திற்குத் தான் உபகாரியாவதை விடப் பெரிய பாக்கியம் உலகினில் உண்டா?

ஃ

ஒரு ரயில்வே உத்தியோகஸ்தர் பிரயாணிகளின் சௌகரியங்களை அலக்ஷியம் செய்வதைவிட்டு, தம் மனத்தைக் காருண்ய வழியில் திருப்பி எவ்வளவோ உபகாரங்கள் செய்யலாம். அதுவே கடவுளின் அன்புக்குப் பாத்திரமாவதற்கு வழி. ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர், ஒரு முனிசிபல் உத்தியோகஸ்தர், வரிவசூலிப்போர், இன்னும் பலவகையான உத்தியோக பதவியிலுள்ளவர்களும் தமது தொழில்

நீ ஒருவனுக்கு நல்லதைச் செய்துவிடு. அதற்கு நன்றி விசுவாசம் காட்டுகிறானா என்று எதிர்பாராதே. துரோக நினைவும் அவன் கொள்ளலாம். அதைக் கவனியாமல் உன் கடமையைச் செய்து அவ்வளவில் திருப்திகொள்.

முறையில் தாம் காருண்யம் காட்டுதற்கு நேரிடும் சந்தர்ப்பங்களை இழந்துவிடாமல் எவ்வித பணச்செலவுமின்றியே வேண்டிய புண்ணியத்தைக் கொள்ளையிடலாம். கடவுளுக்குப் பிரார்த்தனைகள் செலுத்தியும், கோயிலில் தீபங்கட்கு நெய் ஊற்றியும், கற்பூரம் கொளுத்தியும்தான் கடவுளைப் பூஜிக்கவேண்டு மென்பதில்லை. தனது தொழில் முறையில்தான் உலகினருக்குக் காருண்யமுள்ளவனாகி நடந்துகொள்வதே கடவுளுக்குப் பிரியமான மானஸிக பூஜையாம். அதுவே அவரை வழிபடுதற்கு ஏற்ற முறையாம். காருண்யத்தால் உண்டாகும் மனதின் பரிசுத்தத்தில் ஒவ்வொரு உபகாரச் செய்கையும் ஒவ்வொரு பாரிஜாத மலராகி இறைவனின் பாதபத்மங்களில் போய் விழுகின்றது. பிறகு அது ஒன்றுகூடிப் பெரிய புஷ்ப மாலையாகிப் பகவானது கழுத்தில் விழுந்து அவருக்கு அழகு தருகின்றது.

ஃ

எஜமானன்—வேலையாள் என்ற முறையிலும், குடும்பத்திலுள்ளவர்கள்—குடும்பத் தலைவன் என்ற முறையிலும், மனைவி—கணவன் என்ற முறையிலும், மாமி—மருகி என்ற முறையிலும், பெண் கொள்பவர் — கொடுப்பவர் என்ற முறையிலும், பந்தத்துவம்—நேசம் என்ற முறையிலும், ஆசிரியர்—மாணவன், குரு—சிஷ்யன் என்ற முறையிலும், இவ்விதமே ஆயிரம் வகையான முறைகளிலும் நமது காருண்ய ஆதரிப்பைக் காட்டுதற்குக் கிடைக்கும் வேளைகளை ஆவலோடும் பொறுக்கி எடுத்துப் பயன்படுத்திக் கொள்வது பாக்கியமான செய்கையாகும். இந்தப் பாக்கியத்தில் எவ்வளவு யோக்கியமுள்ளவராவதற்குக் கூடுகின்றதோ, அவ்வளவுக்கும் நமக்குப் பிறவிப்பிணி நிவர்த்தியும் ஜன்ம ஈடேற்றமும் உண்டு.

ஃ

ஒரு வேலையைச் செய்வதற்குக் கொடுத்தோன், தானே அதைச் செய்துகொள்ளும் பயிற்சி இல்லாதவன். அந்த வேலையைச் செய்து முடிக்க ஒப்புக்கொண்டவனே அதில் தேர்ந்தவனாயிருப்பான். தான் அதற்குப் பெறுங் கூலியில் தன் வேலையை எவ்வித குறைவுமின்றி முடித்துக் கொடுத்தலில் காருண்யம் காட்டச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. தான் செய்துகொடுத்த ஒன்று நெடுங்காலம் உபயோகப்படட்டுமென்ற காருண்யத்துடன் அதைச் செய்வானாகில் கடவுளின் ஆசியை அவன் பெறுவோனாகிறான். சத்தியத்தின் பாதையிலே அவன் சித்தம் சென்று அதில் ஒரு சுவையையும் கண்டுகொண்டுவிடுகின்றது. வேலை கொடுத்தவன் அருகி லிருக்கும்போது அதைச் செய்தலும், அவன் அப்பாற் சென்றபோது அதை

கக்கூஸுக்குள் போய் உட்கார்ந்தோர் பரமானந்தமாய் வெகு நேரம் தூங்கிவிட, வெளியில் சொம்புடன் நிற்பவர்களோ எப்போது அந்த சொர்க்க வாசலின் கதவு திறக்கப்படுமோவெனத் தத்தளித்துப் போய்விடுகின்றனர்.

மெதுவாகச் செய்தலும், வேலையைப் பெற்றுக்கொண்டு பல தினங்கட்கு வேலை கொடுத்தவரை அலைய வைப்பதும் காருண்யமற்றனச் செயல்களாம். அக்கிரமத்தில் தேடிய லாபம்—சொத்து—இவைகள் அடுத்த தலைமுறையில் நிற்காததும், அவை விபசாரிகள் படும்பாடு படுவதும், சின்னபின்னமாவதும் ஒருபெரிய அநுபவமாம்.

ஃ

நாவிதன்—அவனும் தன் தொழிலில் காருண்யமுடையவனாய்த் தன்னிடம் வந்தவரை மனஸ்பூர்வமாய்த் திருப்தி செய்ய வேண்டும். வண்ணானும் உடைகளை நன்கு துவைத்து அவர்கள் நன்றாய் உடுத்திக் கௌரவம் பெறட்டுமென்ற காருண்யத்துடன் தொழில் செய்யவேண்டும். ஒரு பண்டத்தின் விலை காலணாவாக, அதற்கு அரையணாவை ஒருவன் தந்துவிடுகையில், உண்மையையுரைத்து அதிகப்பட்ட காலணாவைத் திருப்பிக் கொடுத்துவிடும் காருண்யத்தை வியாபாரிகள் கொள்ளவேண்டும். தான் விற்கும் பொருள்கள் சுத்தமாய் நன்றாயிருக்கின்றனவாவென்று கவனித்தலும் கடைக்காரர்களின் காருண்யமாகும். இவ்விதமே, ஒவ்வொரு தொழிலாளியும் ஸத்தியவந்தனாயிருந்து தன் தொழில்முறையில் காருண்ய முள்ளவனாகில் பிறாது நம்பிக்கைக்குப் பாத்திரவானாவதுடன் கடவுளின் அருள் அவன்மீது வீசக் கேட்கவும் வேண்டுமோ?

ஃ

வைத்தியத்தொழில், வழக்கறிஞர்தொழில் இன்னும் பலவகைத் தொழில்முறையிலும் தம்மையே கதியாய் நம்பினவனிடத்துக் காருண்ய முள்ளோராகி, அவனது தவிப்பையும் துன்பத்தையும் நிவர்த்திக்க இயன்றளவு முயல்வாராகில், அவர்களின் ஹிருதயமும் பரிசுத்தம் கொள்வதுடன், கடவுளின் கிருபாநோக்கத்திற்கும் பாத்திர ராவர். தமக்குத் தொழில்முறையில் கிடைத்த சந்தர்ப்பங்களைக் காருண்யங் காட்டுதற்குக் கடவுள் மனமுவந்து அநுக்கிரகித்த தருணங்களாகக் கொண்டு மனஸ்பூர்வமாய்ப் பிறருக்கு உபகாரிக ளாவதே ஈசுவரத் தன்மையைப் பெறுதற்கு வழியாம். அகப்பட்டுக் கொண்டவர்களை ஹிம்ஸிப்பது மிருகத்தன்மை.

ஃ

தொழில் இல்லாத மாந்தர்கள் உலகில் அருமை. ஏதுவோ ஒவ்வொரு தொழில் அவரவர்க்கு உண்டு. அவரவர் தொழிலின் இடையிலும் காருண்யம் காட்டுவதற்குக் கணக்கற்ற தருணங்கள் கிடைத்துக்கொண்டே யிருக்கும். அத்தருணங்களை யெல்லாம் இயன்றவரை தான் ஏற்றுக்கொண்டு பிறருக்கு உபகாரியாகிப்

சில உபாத்தியாயர்கள் சுறுசுறுப்புள்ள பையன்களை மேல் வகுப்புக்கு மாற்ற முடியா தென்கிறார்கள். இந்த உபாத்தியாயர்களையும் மேல் பதவிக்கு மாற்ற முடியாதென அவர்களுக்கு மேல் குந்தியிருப்போர் கூறுகிறார்கள்.

பயன்படுவதில் விசேஷித்த சுகிர்தமும் சத்தியத்தின் பரிசுத்தமும் அடங்கியிருக்கின்றது. தான் தேகபாதையைத் தீர்த்துக்கொள்வதிலும் பிறருக்கு அசங்கிதத்தை விளைக்காதிருக்கும் காருண்யத்துடன் ஒரு மறைந்த இடத்தில் அதை முடித்துக்கொள்ள வேண்டும். தன் தேகபாதையை நிவர்த்தித்துக்கொண்டதும், அந்த அசுத்தத்தைப் பிறர் காணாதவாறு மண்ணால் மூடிவிடும் காருண்யச்செய்கை நாயினிடம் இருக்கின்றது. நன்றிக்கு நாய், விருந்துக்குக் காகம்—இவ்விதமே காருண்யச்செய்கை பிராணிகளிடமும் பக்ஷிகளிடமும் இருக்கின்றது. ஆலயத்தில் இறைவனை வணங்குகையிலும் பிறாது பகவத் தரிசனத்திற்குத் தாம் இடையூறாக இருந்து மறைக்கிறோமே என்று நினைத்துப் பிறருக்குத் தான் தடையாய் இல்லாதபடி காருண்யச்செய்கை கொள்ளவேண்டும். கடன் தந்தவனும் கெடுத் தவறியதற்குக் காருண்யம் காட்ட, கடன் பெற்றோனும் எவ்விதமும் கடன் தொகையைத் திருப்பிக்கொடுத்து அவன் ஏமாறாதபடி செய்யவேண்டுமென்ற காருண்யஉள்ளம் வகிக்கவேண்டும். குடிக்கூலிக்கு இருப்போரிடத்து வீட்டின் சொந்தக்காரர்களும், வாடகை தவறாது தருவதில் குடியிருப்போரும் காருண்யமுடையவராதல் வேண்டும்.

ஃ

உலகமே ஒரு தொழிற்சாலை. செய்வன—உண்பன—உடுப்பன—இசைவன—கலப்பன—உதவுவன—யாவும் தொழிலே. ஒவ்வொரு சிறு காரியமும் தொழில் வகுப்பே. ஒரு நற்றாய் தன் குழந்தைக்குப் பால் ஊட்டும் தொழிலில் எத்துணைக் காருண்யமுள்ளவளா யிருக்கின்றாளோ, அவ்வளவு காருண்யத்தையும் நமது உலகத் தொழில்முறைகளில் நாம் காண்பித்துக்கொண்டு, நம்மை உயர்ந்த குணசீலர்களாக்கிக் கடவுளுக்குச் சமீபத்தில் நெருங்கிக் கொண்டுசெல்வதே—இவ்வுலகில் நாம் தேடக்கூடிய சம்பத்துகளில் பெரிய சம்பத்தாகும். இந்தக் காருண்ய சம்பத்தை நாம் தேடிக் கொண்டால், கடவுளும் நம்மை மேன்மையான நிலையில் வைத்துக் காத்தருளுவார். ஆகவே, நாம் கடவுளின் அருளைப் பெறுதற்குச் சுலபமான மார்க்கமாகிய—தொழில்முறையில் காருண்யமுடையவரா யிருத்தலைக் கைக்கொள்ளக்கடவோம். ஸத்தியத்தின் பாதையிலே நித்தியத்திற்குச் செல்லும் வழியும், அவ்வழியோரத்தில் காருண்ய மாளிகையும் இருக்கின்றது. அந்தக் காருண்ய மாளிகையில் நாம் புகக்கடவோம். கடவுளின் ஆசி நம்மை என்றும் நிழல் போல் தொடர்வதாக. குளிர்ந்த இடத்தில்தான் அதிக மழையுண்டு; காருண்யமுள்ள இடத்தில்தான் கடவுளின் கிருபையும் நிலவும்.

"இவ்விதம் திண்ணையில் உட்கார்ந்து கால்நீட்டி அதிகாரம் செய்யவா இந்தப் படுபாவியின் சம்பந்தம் கொண்டேன்? வீட்டுக்காரனை என்னைக் கண்டும் காலை மடக்கவில்லையே! எவ்வளவு திமிர்! ஹா! மோசம் போனேனே!!"



அகப்பையின் கதை.

1. ஒரு காட்டில் ஒரு அகப்பை இருந்தது. அந்தப் பக்கம் வந்தவர்கள் கட்டுச்சாதம் தின்ற பிறகு, அந்த அகப்பையை மறந்து போட்டுவிட்டுப் போனார்கள். அதுமுதல் அந்த அகப்பைக்கு சோறு இல்லாமல் வாடி வெயிலில் காய்ந்தது.

2. அந்த வழியாக ஒருவன் வந்தான். அவன் அகப்பையைப் பார்த்து வீட்டுக்குக் கொண்டுபோனான். சாதம் குழம்பு ஆக்கும் சட்டிகளின் பக்கம் அதை வைத்தான்.

3. அகப்பை சட்டியைப் பார்த்து அக்கா அக்கா என்று கூப்பிட்டது. அதற்கு சட்டி அகப்பையே என்ன சங்கதி என்று கேட்டது. அகப்பை, அக்கா, நான் உன்னிடம் இருக்கிறேன்; எனக்கு நீ சோறு போடுவாயா என்று கேட்டது.

4. அதற்கு சட்டி, அப்படியே என்னிடம் இரு. எனக்குத் துணையாகவும் இருக்கும். நீ இருந்தால் என்னைத் தூக்கிக் குழம்பை ஊற்றமாட்டார்கள். ஒவ்வொருவருக்கும் நானே போய்க் குழம்பு ஊற்றவேண்டியதாய் இருக்கிறது. அதனால் என் உடம்பு எல்லாம் வலிக்கிறது என்று சொல்லிற்று.

5. அதற்கு அகப்பை, அக்கா, நீ இனி எழுந்திருக்க வேண்டாம். நீ இருக்கிற இடத்திலேயே இரு. நான் உன்னிடமுள்ள குழம்பு, சோறு எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்து எல்லோருக்கும் போடுகிறேன் என்றது.

6. சட்டி அதைக் கேட்டு சந்தோஷத்துடன், அகப்பையே! நீயே முதலில் சோறு குழம்பு எல்லாம் தின்னு. அதற்குப் பிறகு மற்றவர்களுக்குப் போடலாம் என்று சொல்லிற்று.

7. அகப்பை சந்தோஷத்துடன், சட்டியக்கா, குழம்பு சாதம் சுடுமே. அதைத் கொட்டால் என் உடம்பு புண்ணாகுமே என்று கேட்டது. அதற்கு சட்டி, எவ்வளவு சூடாக இருந்தாலும் உன்னையும் என்னையும் அந்தச்சூடு துன்பப்படுத்தாது; உடம்பு புண்ணாகாது; ஏன் இப்படிப் பயப்படுகிறாய் என்று கேட்டது.

ஜீவராசிகளின் உடலில் ஆகாரம் ஜலம் இவை ஏற்றுமதி; மலம் சிறுநீர் கழிவுகள் இறக்குமதி. கர்ப்பம்—ஏற்றுமதி; பிரஸவம்—இறக்குமதி.

8. சட்டியக்கா, நான் குளிர்ந்த இடத்திலே பிறந்தேன். தேங்காய் நீருடனே இருந்தேன். ஆனதால் சாதம் குழம்பு சூடு தாங்குவேனு என்று கேட்டேன் என்று அகப்பை சொல்லிற்று.

9. அகப்பைத் தங்கையே! இன்று குழம்பு சோறு சமைப் பார்கள். நீ அதைத் தொட்டுப் பார். உனக்கு அந்த சூடு ஒரு துன்பமும் பண்ணுது ஆனுல், பலமாக என்னைத் தட்டாதே. அப் படித் தட்டினுல் நான் உடைந்து ஓட்டையாகி, குழம்பு எல்லாம் கீழே கொட்டுண்டுபோகும் என்று சட்டியக்கா சொல்லிற்று.

10. அன்று சாதம் அடுப்பில் இருக்கும்போதே அகப்பை கொதிக்கிற பானையில் நுழைந்தது. பத்து சாதம் எடுத்துப் பதம் பார்த்தது. அதற்கு சுடவேயில்லை. பிறகு குழம்பிலும் கை வைத் துப் பார்த்தது. குழம்பும் சுடவேயில்லை. அகப்பை வெகு சந்தோ ஷப்பட்டது.

11. அன்றுமுதல் அகப்பை தினமும் சோறு குழம்புகளை முதலில் தான் தின்றது. பிறகே மற்றவர்களுக்குப் போட்டது. அகப்பை இருந்ததால் சட்டியை யாரும் தூக்கவில்லை. சட்டிக்கும் அது சந்தோஷத்தைக் கொடுத்தது.

12. சட்டியக்காவும் அகப்பைத் தங்கையும் சுகமாகத் தின்று வாழ்ந்து வந்தனர். இரண்டு பேராக இருந்தால் எந்த வேலைக்கும் சௌகரியமே. ஒருவருக்கொருவர் துணையாகவும் இருக்கலாம்.

ஒரே வெட்டில் ஆட்டின் தலை அந்த சாமி (?)க்கு முன்னுல் இரு துண்டாய் விழ வேண்டுமாம். அவ்விதமின்றிப் பாதி மட்டில் வெட்டுண்டு தொங்கினுல், சாமிக்கு ஏதோ குறை செய்திருப்பதாக அதற்கு அர்த்தமென்று பூசாரி கூறுகிறுன்! துடி துடிக்க அந்த ஆடு கதறிப் பிராணனை விடுவது இறைவனுக்குச் சம்மதியா? என்னே அறியாமை!

உள்ளத்தினின்று எழும் கட்டளையை ஆண்டவனின் கட்டளையாகவும் கொள்ளலாம். பேயின் கட்டளையாகவும் கொள்ளலாம். ஏனென்றுல், இரண்டு அமிஸங்களும் மனிதனுடைய ஹிருதயத்தில் ஸதா போராடிக்கொண் டிருக்கின்றன. உள்ளத்துக் கட்டளையின் நன்மை தீமைகளை நாம் செய்யும் காரியங்கள் நிச்சயிக்கின்றன.

மயங்குவது என்பது தழுவில்லல—அது அந்த எண்ணுத சமயத்தையும் கிடைத்த நேர சந்தர்ப்பங்களையும் பொறுத்த ஒரு எதிர்பாராத சங்கதியாம்.

வாழ்நாளில் உன்னத நிலை.

உன் வாழ்நாளை எப்படி உன்னத நிலைக்குக் கொண்டுவர முடியும்?

ஒருவன் தன்னுடைய வாழ்நாளை உன்னத நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்று விருப்பம் கொள்வானானால், அவன் முதன் முதலில் கவனிக்கவேண்டிய விஷயம் "பழக்கம்" என்பதையே. "பழக்கம்" என்பதற்கு இங்கு பொருள்—மனிதசத்துவமும், குணமும், அவைகளிடமாகத் தென்படும் குற்றங் குறைகளுமேயாம். அந்த மனித சத்துவமும், குணமும் ஒருவன் பிறக்கும்போதே அவனுடனேயே பிறந்து வளர்ச்சியடைந்து பிறகு அவனையே அடக்கியாளப் பார்க்கின்றது. ஆகையினாலே நீ உன்னுடைய பழக்க, ஒழுக்க, சத்துவ குணத்தை நன்றாக ஆராய்ந்து அதை ஒரு ஒழுங்கான முறையில் திருப்பிக்கொண்டு வர முயற்சி செய்யாவிட்டால் எப்போதும் என்றைக்காவது துன்ப சாகரத்தில் மூழ்கச் செய்துவிடும்.

ஃ

ஒருவனுடன் கலந்து வளர்ச்சியடைந்த 'பழக்க' குணங்களை அறவே ஒழித்திட முடியாது. ஆனால், தப்பான வழியில் சென்ற அதைத் தடுத்து நேரானவழியில் திருப்பி ஒரு ஒழுங்குபடுத்த முடியும். இந்த ஒரு காரியத்திற்கே தான் உனக்கு ஆராயும் சக்தியை ஆண்டவன் தந்திருக்கிறார். ஒருவன் தன்னுடைய சித்த விருத்தியை அடக்குவது கடினமென்று தன் மனப்போக்குக்கு முழு சுதந்திரமும் தந்து கண்டபடி அலைய விடக்கூடாது. நன்மை தீமை என்கிற இந்த இரண்டுவித மார்க்கங்களின் நடுவிலே உன்னுடைய பொது அறிவின்—அல்லது பகுத்தறிவின் கோட்டினால் வரையறுக்கவேண்டும்.

ஃ

வாழ்நாளில் எல்லோரும் உன்னை நேசிக்க விருப்பம் கொண்டால், உன்னுடைய உறவினர்களேயன்றி அன்னியரும் உன்னை விரும்பும்படி நடந்துகொள்ளவேண்டும். அப்படி நடப்பது கடினம்தான். ஆனால், நீ அவர்களுடனே கலந்து ஒன்றுபட்டு அன்புடன் நடந்தால், அவர்கள் உன்னிடம் வைத்த அருவருப்பையும் பகையையும் விட்டுக் கண்டிப்பாக உன்னை நேசிக்க நெருங்குவர். எப்போதும் சந்தோஷமாக இருக்க ஆசைப்படின் இந்த ஒரு தன்மையை நீ கைபிடிக்கவேண்டும்.

ஃ

உன்னுடன் நெருங்கிய பழக்கம் கொள்ளுபவருடைய குணத்தின் தன்

ஐயோ! எப்படியோ பாழும் பொடி போடக் கற்றுக்கொண்டு கையில் ஒரு மூக்குத் தண்டுடனும் பொடி டப்பியுடனும் எந்தக் காலத்திலும் மூக்குச் சிந்தியவாறு கிடக்கும்படியாக என் தலைவிதி நேர்ந்ததே என்கிறார் ஒருவர்.

மையை ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்த்து சந்தேகம் உண்டானதும் விலகிவிடவேண்டும். என்றைக்கும் சந்தேகமுள்ளவனாய் விடக்கூடாது. சந்தேகம் சந்தேகத்தையே உண்டாக்கும். எப்பொழுதும் சந்தேகம் கொள்ளுபவன் நன்மையை யடையவேமாட்டான். "சந்தேகப் பேர்வழி அழிவான்" என்று நீதை சொல்லுகிறது.

ஃ

"முன் யோசனை" என்பது ஒரு வித்தை. அதைப் பயிற்சி செய்து கொள்வது முக்கியத்திலும் முக்கியம். ஆனால், எதற்கும் எப்போதும் வெகுவாக முன்யோசனை செய்யவும் கூடாது. அளவு மீறிய முன்யோசனை பயங்காளித்தன்மையை யுண்டாக்கி விடும்; தைரியத்தை நாசம் செய்யும்; துணிந்த காரியத்தைத் தடுக்கும்.

ஃ

நமது வாழ்வின் மார்க்கத்திற்கு "தேகப்பயிற்சி" ஒரு வழிகாட்டி மரமாகும். உன்னுடைய குணங்களில் இதையும் ஒன்றாகச் சேர்த்தால் சாந்த குணமும் தயாளத்தன்மையும் உதயமாகி வளர்ச்சி யடையும். கட்டுப்பாடான தேகம் இல்லாவிட்டால் நீ சம்பாதித்துச் சேர்த்துவைக்கும் அவ்வளவு தனத்தையும் ஒரு தம்பிடி கூட அனுபவிக்க முடியாது. தேக—பொக்கிஷசாலைக்கு நீ தினந்தோறும் சரீரப்பயிற்சியால் உண்டாகும் பயனைச் சேர்த்துவைக்கவேண்டும். இந்தப் பொக்கிஷத்தைத் தினமும் விருத்தி செய்துகொண்டே யிரு.

ஃ

உன் ஜீவனார்த்தத்திற்கு வேண்டிய ஒரு வழியைக் கண்டு அவ்வழி செல்லும்போதுதான் உன் குணம் வெளிப்படும். வாலிபத் துடுக்கையும் சேஷ்டையையும் விட்டுவிட்டு, இன்பச் சொல்லும், இனிய முகமும், சாந்த குணமும், கைபிடிக்க வேண்டும். உனது ஜீவனார்த்தவழி இவைகளையெல்லாம் விருத்தி செய்யும்படி இருக்கவேண்டும். உன் தொழிலை அடக்கி உன் வழிபோல் நடக்க விடவேண்டும். உன்னுடைய வேலையை ஒழுங்காக நீ செய். அதிலேதான் மதிப்பும் மரியாதையும் கீர்த்தியும் பொதிந்திருக்கிறது. நீ மனஸ்பூர்வமாக உன் வேலையை நேசித்துப் பொறுமையுடனும் நிதானித்துச் செய்தாலொழிய, உன்னுடைய வேலையை நீ சரிவரச் செய்யமாட்டாய்.

ஃ

நீ எப்பொழுது சம்பாதிக்கத் தலைப்பட்டாயோ அது முதற் கொண்டு செட்டாக இருக்கவேண்டும். வீணாக ஒரு தம்பிடிகூடச் செலவழிக்காதே. அனாவசியமாகப் பிறர் பொருளில் ஆசையும் வைக்காதே. உன்னுடைய வீடு நன்றாகவும், உன் உடை அழகாகவும் இருக்கவேண்டுமென்று சொன்னால், அதற்குப் பல வகை விலையுயர்ந்த பொருளினால் உன்னுடைய வீட்டை அலங்கரித்து, உயரிய ஆடைகளை நீ உடுத்தவேண்டுமென்று அர்த்த மில்லை. சுத்தமாக வைத்து, சுத்தமாக இருக்கவேண்டுமென்பதுதான் அதன் உட்பொருள்.

(மறு ஸஞ்சிகையில் முடிவு)

P. G. குலசேகரன்.

"நானும் தலைவன்" என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களும் தலைவர் என்ற பெயரைக்கொண்டு அந்தப் பிரக்யாதியினால் எவ்வளவு பணம்—புகழ்—வருமானம் திரட்ட வேண்டுமோ அவ்வளவும் திரட்டிவிட்டார்கள். இப்போது ஓய்வெடுத்துக் கொள்கின்றனர்,

சிறுமணித்திரள்

655. ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு குறைகள் நேர்ந்துவிடுவது சாமான்யமாய் ஏற்படும் ஸம்பவமாகும். அந்தச் சமயங்களில் முணுமுணுப்பது முதலான புகார்கள் செய்யும் வழக்கம் இல்லாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

656. அமைதியான வாழ்வின் சிறிய விஷயங்களில்தான் யோக்கியதையும் பொறுமையும் காட்டப்படுகின்றன. மனதின் மேன்மை பொதுமேடையிலோ, விசேஷ ஆடம்பரத்திலோ வெளிப்படுவதில்லை.

657. பள்ளிக்கூடத்தில் 5-வருஷமும், ஹைஸ்கூலில் 6-வருஷமுமாக 11-வருஷங்களை நாம் கல்வியில் வீணுக்குகிறோம்.**11-வருஷ காலமும் மூளை மாத்திரம் உபயோகிக்கப் படுகிறது. சரீரப் பயிற்சி யில்லை.

658. அன்னிய தேசங்களில் நீண்ட தூரம் யாத்திரை செய்த பிறகுதான் (மேனாட்டில்) கல்வி பூர்த்தியாகிறது. பிரயாணம் செய்வதால் நமது மனோபாவம் விசாலமாகிறது.

659. ஹிந்துக்களின் வாழ்வு லக்ஷியம் மேல் நாட்டாருடையதிலிருந்து மாறுபட்டது. மேல் நாட்டினர் பிறருக்குப் பாதகம் விளைத்தாவது பணம் சேகரிப்பதிலேயே ஸதா முனைந்திருப்பர். ஆத்மார்த்திக வாழ்வு சம்பந்தமாக ஹிந்துக்கள் கொண்டுள்ள லக்ஷ்யமே உலகத்தில் நிகரற்றது. ஒவ்வொருவரும் வாழ்வின் உண்மையான நோக்கத்தைத் தெரிந்துகொள்ள முயலவேண்டும். பரிசுத்தமாயும், ஆடம்பரமின்றியும், கடவுளிடமும் பக்தர்களிடமும் பக்தியுடன் தொண்டு செய்துகொண்டும் வாழவேண்டும்.

660. நேற்று நம்மோடு சமானமாயிருந்தவருக்கு இன்று நம்மை விடப் பதின்மடங்கு அதிக சம்பத்துண்டானால், அதென்னவோ ஒரு குருட்டு அதிர்ஷ்டமென்று சொல்லவேண்டுமே யொழிய, அவர் சாமர்த்தியத்துக்கேற்ற பலனென்று எப்படி ஒப்புக்கொள்ளக் கூடும்?—என்பதாக இப்படியெல்லாம் பொறாமை என்னும் பேய் நம்மைப் பிதற்றவிடுகிறது.

661. அது காணாமற் போயிற்றா? அதற்கு நீ அதிகம் வருந்தாதே, புதியது வாங்கினாயா? சந்தோஷப்படு.

வீட்டுக்காரனுடைய அஜாக்கிரதையும், அதனால் விளக்கு சிமிழ் உடைந்து விட்ட நஷ்டமும் கடைக்காரனுக்கு லாபமாகிறது. ஊராரின் பிணி வைத்தியனுக்கு ஒரு வரும்படியாகிறது. வீட்டுக் கலகம் மற்றவர்கட்கு லாபமாகிறது.

வயிற்றுப்பாட்டிற்கு இல்லாவிடினும் கல்யாணத்துக்கு ஆசைவைத்து அலைவதற்குக் கல்யாணப் பைத்தியம் என்று பெயர். குணத்தில் சிறந்த கட்டழகி வீட்டிலிருக்க, அவலக்ஷண மூதேவியோடு ஆசைவைத்து அவளைத் தங்கக் கட்டியாய் நினைத்தழுவதற்குக் குருட்டுப் பைத்தியம் என்று பெயர்,



பெரிய பெண்டாட்டி!

சின்ன புருஷன்!



ஏழுநூறு ரூபாய்க்கு அவசரத்தின் நிமித்தம் அடகு வைத்த வீடு திருப்பப்படவில்லை. திடீரென்று வீட்டுக்காரர் கண் மூடிவிட்டார். அவர் போய் மூன்று வருஷங்களாயின. பணத்தைக் கொடு, அல்லது வீட்டை விடு என்று கடன்காரன் தொந்தரை செய்யத் தொடங்கினான். ஒரு ரூபாய்க்கே திண்டாட்டமான நிலையில் எழுநூறு ரூபாயை எங்கிருந்து கொடுப்பது? வீட்டுக்காரிக்குக் கதியில்லை யென்று தெரிந்த கடன்காரன் 2000-ரூபாய் பெறுமானமுள்ள வீட்டை அப்படியே விழுங்கிவிட ஆவல் கொண்டான். ஏழ்மைப்பட்டுவிட்ட காலத்தில் நூறு ரூபாய் வைர மூக்குத்தியும் முப்பது ரூபாய்க்குத் தானே போகும். மீட்க வழியில்லை யென்று தெரிந்த மற்றவர்களும் ஆயிரம் ரூபாய்க்கு மேல் அந்த வீட்டை மதிப்புப் போடவில்லை. "கடன்காரன் 750-ரூபாய்க்கு விழுங்கப் போகிறானே, நான் அதற்கு மேல் 300-ரூபாய் அதிகம் கொடுக்கும்போது அது உனக்கு லாபமல்லவா" என்று வீட்டுக்காரியை மற்றவர்கள் கேட்கத் தொடங்கினர். வீட்டுக்காரிக்கும் ஆயிரத்துக்கு விற்றுக் கடன் எழுநூறைத் தீர்த்து மிச்சப்படும் முன்னூறு ரூபாயைத் தான் எடுத்துக்கொள்ளலாமென்று தோன்றிற்று. வீடோ இப்போது இரண்டாயிரமும், இன்னும் சில வருஷங்கள் சென்றால் நாலாயிரமுங் கூடப் பெறும். என்ன செய்யலாம்! ஆண்திக்கு இல்லையே! ஒண்டிக்காரியான பெண். இரண்டு சிறு குழந்தைகளை வைத்துக்கொண்டு ஜீவனத்திற்கே தத்தளிக்கிறாள். நன்றாக வாழ்ந்தவள். திடீரென்று கணவன் ஒரு இராஜப் பிளவை வந்து கண் மூடிவிட்டான். வெளியிலிருந்து வர வேண்டிய பணமும் எவ்வளவோ பாக்கியிருந்தது. அதற்கு எந்த ஆதாரவையும் வீட்டில் காணோம். புருஷன் கண்மூடிப்போன பின்பு வீடு உள்ள நிலை இது.

ஃ

வீட்டை ஆயிரத்துக்கு விற்று விட ஏற்பாடு செய்துவிட்டாள். பத்திரமும் எழுதி ஆனது. இனி ரிஜிஸ்தரார் ஆபீசில் ரிஜிஸ்தர் செய்ய வேண்டியதும் பணம் பெறவேண்டியதுமே

மதத்தின் பெயரைக் காட்டிப் பணத்தைத் திரட்டுவோருக்கு முதலில் வேண்டியது பணம்—இரண்டாவதே மதம். பண ஆசையே மதத்தின் பேரைச் சொல்லவிட்டுப் பாசாங்கு செய்கிறது.

பாக்கி. ரிஜிஸ்தாரிடமும் பத்திரம் கொடுக்கப்பட்டுவிட்டது. அவர் நாளையதினம் வரும்படி சொன்னார்.

ஃ

இரவு தமது வீட்டில் ரிஜிஸ்தரார் கச்சேரியின் காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் இரண்டு வயதுள்ள அவரது ஆண் குழந்தை உட்கார்ந்திருந்தது. ரிஜிஸ்தார் இந்த ஆயிரம் ரூபாய் வீட்டைப் பற்றிய பத்திரத்தை எடுத்து வாசித்து விட்டு அதற்கு முந்திய பத்திரத்தையும் படித்தார். அந்த வீடு வாங்கும் பொழுதே இரண்டாயிரத்துக்கு வாங்கியதாக இருக்க, இந்த மூடப் பெண் எதற்காக ஆயிரம் ரூபாய்க்கு விற்கிறாள் என்று தானே வாய்விட்டுச் சொன்னார். பக்கத்திலிருந்த குழந்தை அப்பா! அந்தப் பத்திரத்தை இன்னொரு தரம் வாசித்துக் காட்டு என்றது. இதைக் கேட்டதும் ரிஜிஸ்தார் திடுக்கிட்டார். ஆச்சரியத்துடன் அக்குழந்தைக்கு வாசித்துக் காண்பித்தார்.

ஃ

குழந்தை அதைக் கவனமாகக் கேட்டு விட்டு, "அப்பா! இது என் சொந்த வீடு, வெகு பாடுபட்டு இரண்டாயிரம் ரூபாய்க்கு வாங்கினேன். எனக்கு வெளியில் ஏழாயிரம் ரூபாய் வரவேண்டிய பாக்கியிருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் பத்திரம் எழுதி வாங்கியிருக்கிறேன். சில தொகைகள் நோட்டா பாண்டின்மீதும் கொடுத்திருக்கிறேன். ரொக்கமாய் ஐயாயிரம் ரூபாயும் அந்த வீட்டிலேயே பத்திரப் படுத்தி வைத்திருக்கிறேன். வீட்டை ரிப்பேர் செய்வதற்காகவே எழுநூறு ரூபாய் கடன் வாங்கினேன். இந்தக் கடன் என் சுண்டுவிரலுக்குச்சமானம். ஆனால், நான் இராஜப் பிளவை கண்டு திடீரென்று இறந்துவிடவும், வீட்டை இந்த அலங்கோலத்தில் என் மனைவி கொண்டுவந்து விட்டாள். என் பாக்கிக்காரர்களும் தங்கள் கடன் தொகையை ஏப்பம் விட்டு விட்டனர். எல்லாரும் படுமோசக்காரப் பாவிகள். என் இரு ஆண் குழந்தைகளையும் எவ்வளவோ செல்வமாக வளர்த்தேன். இப்பொழுது அவைகள் ஒரு பிடி யன்னத்திற்கே கஷ்டப்படுகின்றன. இவ்வளவுக்கும் காரணம் நானே. எந்த விஷயத்தையும் என் மனைவியிடம் தெரிவிப்பதேயில்லை. நானே எல்லாவற்றையும் செய்து எனக்குள் ரகசியமாக வைத்துக்கொண்டதில், எனக்குப் பிறகு என் மனைவி எதுவும் அறியாதவளாய் இவ்வளவு கேவலத்திற்கு வந்துவிட்டாள். நான் அவளுக்குப் போட்ட நகைகளை விற்று வயிறு வளர்த்திருக்கிறாளென்று தோன்றுகிறது. அப்பா! இந்தப் பத்திரத்துக்காரியை உடனே தருவிக்கவேண்டும் என்று சொல்லித் தேம்பித் தேம்பி அழுதான்.

ஃ

ரிஜிஸ்தரார் மிக்க வியப்படைந்தவராய் தன் மனைவியை யழைத்துக் குழந்தை கூறிய சங்கதிகளைச் சொன்னார். அவருடைய ஏராளமான ஐச்வரியத்துக்கு இது ஒரே ஆண் குழந்தை. தாயார் அக் குழந்தையைத் தூக்கி முத்தமிட்டாள். அக் குழந்தை தன் தாயைப் பார்த்து, அம்மா! நான் சொல்வது பொய் என்று எண்ணாதே. நான் பூர்வத்

நல்ல மருந்துகளையும், நல்ல நூல்களையும், நன்கு உழைத்தெழுதும் ஆசிரியர்களையும் ஜனங்கள் அறிவதில்லை. ஆசிரியர்களைப் பட்டினி போட்டுக் கொல்கிறார்கள். போலி நூல்களுக்கும் போலி மருந்துகளுக்கும், பணத்தைச் செலவிடுகிறார்கள். அநியாய சரக்குக்காரனே கைநிரம்பப் பணம் வாருகிறான்.

தில் இந்தப் பத்திரம் எழுதிய பெண்ணை விவாகம் செய்துகொண்டிருந்தது உண்மை. எனக்குப் பூர்வ ஞாபகம் சரியாய் இருக்கிறது. ஒவ்வொரு கடன்காரனையும் நன்றாக அடையாளம் காட்டுவேன். முதலில் என் மனைவியைத் தருவிக்கவேண்டும் என்று கெஞ்சிக் கேட்டது.

ஃ

உடனே வீட்டுக்காரி தருவிக்கப் பட்டாள். அவளைப் பார்த்து,

குழந்தை :—உன் பெயர் கோமளமல்லவா? உன் புருஷன் பெயர் ராமநாதனல்லவா? அவன் இராஜப் பிளவையால் மடிந்துபோகவில்லையா?

வீட்டுக்காரி :—ஆமப்பா! எல்லாம் உண்மையே. இது உனக்கு எப்படித் தெரியும்?

குழந்தை :—என்னை அப்பா என்று சொல்லாதே. மரியாதையாகப் பேசு. நான் தான் ராமநாதன். உன் புருஷன் நானே (என்று சொல்லிச் சிரித்தது.)

வீட்டுக்காரி :—நீயா என் புருஷன். என் கண்ணே! எல்லாம் தெரிந்தது போல் பேசுகிறாயே. உனக்கு எவ்வளவு பெரிய பெண்டாட்டி! (என்று அக் குழந்தையைத் தன் மடியில் எடுத்து வைத்துக்கொண்டு முத்தமிட்டாள்.)

குழந்தை :—வீட்டை நீ விற்கப்போகும் பத்திரத்தை அப்பா வாசித்தார். அதைக் கேட்டதும் என் வயிறு எரிந்தது. வீட்டை என்றைக்கும் விற்காதே. வீட்டில் சந்தனக்கல் அரைக்கும் மாடம் ஒன்று கட்டியிருக்கிறேனே அது உனக்குத் தெரியுமா?

வீட்டுக்காரி :—(வியப்புடன்) ஆம்.

குழந்தை :—அதற்குள் சிறிய பெட்டியொன்று வைத்திருக்கிறேன். அதில் ஐயாயிரம் முழு ரூபாய்களை வைத்திருக்கிறேன். அதை எடுத்து வந்து என்னிடம் கொடு. கடன்காரனுக்குத் தரவேண்டிய எழுநூறையும் கொடுத்துவிட்டுப் பாக்கியைப் பாங்கியில் போட்டுவிடலாம். படுக்கையறையில் வைத்திருந்த என் பெட்டியின் அடியில் ஒரு பலகை போட்டு ஆணிகளால் முறுக்கியிருக்கிறேன். ஆணிகளை நீக்கினால் பலகையை எடுத்துவிடலாம். அதற்குள் வெளியிலிருந்து எனக்கு வரவேண்டிய ஏழாயிரம் ரூபாய்களுக்குக் கடன் பத்திரங்களும் பாண்டுகளும் வைத்திருக்கிறேன். அதையும் எடுத்து வா. நீ பிரியப்பட்டால் அப்பாவும் நானும் கூட வருகிறோம். நான் எல்லா இடமும் காட்டுகிறேன். என் வீடு எனக்குத் தெரியாதா? ஆனால், இப்போது எல்லாம் உன் சொத்துதான்

ஃ

கோமளம் பிரமித்துப்போனாள். குழந்தை சொல்லியபடியே வீட்டில் சந்தனக்கல் மாடம் ஒன்றிருப்பது அவளுக்குத் தெரியும். படுக்கை அறையில் பெரிய பெட்டி இருப்பதும், தன் கணவன் அதை வைத்திருந்ததும் நினைத்து வியப்புடன் அக் குழந்தையை நமஸ்கரித்து அழுதாள். பின் ரிஜிஸ்தாரும் அக் குழந்தையும் அக் குழந்தையின் தாயும் கோமளத்துடன் அவள் வீட்டிற்குச் சென்றனர். குழந்தை சொன்னதுபோல் சந்தனக் கல் மாடத்தை இடித்துப் பார்த்ததில் அதற்குள் பணப்பெட்டி யிருந்தது.

மனைவியிடம் புருஷன் கடன் கேட்கலாம். திருப்பியும் அவளுக்குத் தரலாம். ஆனால், புருஷனிடம் மனைவி கடன் கேட்பதில்லை. கடன் தரினும் வரா. அவன் ஆசைப்பெருக்குடன் தருகிற ஒரு முத்தம் அந்தக் கடன் தொகைக்குச் சரியாகிவிடலாம். இவனும் அவளைக் கேட்கமாட்டான்,

அதில் ஐயாயிரம் ரூபாய்கள் எண்ணி வைத்ததுபோல் இருந்தன. படுக்கை யறையிலிருந்த பெட்டியின் அடிப் பலகையை நீக்கியதும் கடன் பத்திரங்கள் அகப்பட்டன. கோமளம் குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஆயிரம் முத்தங்க ளிட்டாள். குழந்தையும் தன் குழந்தைகளைக் கண்டு ஆநந்த மடைந்தான்.

ஃ

ஸப் ரிஜிஸ்தர் பகவானை ஸ்தோத்தரித்தவராய், இந்தச் சங்கதியை வெளிக்கு விடாமல் மறைத்துவிட்டார். எழுநூறு ரூபாய் கொடுத்து மறுநாள் வீடு மீட்கப்பட்டுவிட்டது. ஆயிரம் ரூபாய் விக்கிரய பத்திரம் மறுக்கப்பட்டுவிட்டது. வீட்டை ஆயிரம் ரூபாய்க்கு வாயில் போட்டுக்கொள்ள இருந்தவன் ஏமாறினான். ஸப் ரிஜிஸ்தரார் கோமளத்துக்கு உதவி செய்ததாக எண்ணிக்கொண்டான். ஊராரும் அப்படியே நினைத்தனர். வரவேண்டிய பாக்கிகளை ரிஜிஸ்தரார் வசூலிக்க ஆரம்பித்தார். சந்தோஷமாயிருந்தவர்கள் தாங்கள் எழுதிக்கொடுத்த கடன் பத்திரங்களைக் காணவே வயிறு எரிந்தனர். எழாயிரம் ரூபாய் வட்டியுடன் ஒன்பதினாயிரமாக வசூலாயிற்று. நயமான விலைக்கு நன்செய் நிலங்கள் வரவே, ரிஜிஸ்தரார் பதின்மூவாயிரம் ரூபாய்க்குக் கோமளத்தின் பேருக்கு வாங்கிவிட்டார்.

ஃ

திக்கற்ற கோமளத்திற்கு வீடும் நிலங்களும் உண்டாய்விட்டன. புருஷனும் கிடைத்துவிட்டான். அவளுடைய இரு ஆண் குழந்தைகளுக்கும் இனி என்ன குறைவு? கோமளம் வீட்டை வாடகைக்கு விட்டு விட்டு ரிஜிஸ்தராரின் வீட்டுக்கே போய்விட்டாள். குழந்தையான தன் கணவனை விட்டுப் பிரிய மனம் வராமல் அங்கேயே இருந்து குழந்தையை வளர்ப்பதானாள். ரிஜிஸ்தரார் தன் குழந்தையோடும், பெரிய மருமகளோடும், பெரிய பேரப்பிள்ளைகளோடும் சுகமே வாழ்ந்தார். இவ்விதமே கணவனை இழந்த பெண்கட்கு அவர்களின் பர்த்தா திரும்பி வந்து அவர்களுக்கு ஒரு "ஏற்பாடு" செய்வதாயிருந்தால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்? அந்தப் பாக்கியம் சுலபத்தில் கிடைக்கக்கூடியதா?

நரம்புகளினிடமே உயிரும் அறிவும் குடி கொண்டிருப்பதால் ஒருவனை அடித்த அல்லது இடித்த இடத்திலேயே, நரம்பறிவு அதை அக்கணமே உணருதல் கூடும். நரம்பு அறிவு நோயை யறிந்து மூளைக்குத் தந்தி பேசுகிறது. மூளையறிவு உடனே தனது கவனத்தை அந்த இடத்துக்குச் செலுத்துகிறது. தந்திக்கம்பி, கம்பியில்லாத் தந்தி யாவும் இவ் உடலில் உண்டு.

மிக்க பலசாலியான ஒருவர் காலரா சந்தர்ப்பத்தில் தனக்கு வந்த மலோபாதையை அடக்கி விடுவதற்காக ஆசனத்தில் கடப்பாரையின் மேல் பாகத்தை வைத்து அழுத்திக்கொண்டு மலம் வெளியில் வரட்டும்" பார்ப்போம் என்றார். மறு நிமிஷத்தில் மலம் வாயின் வழியே வேகமாகக் கொட்டப்பட்டுக் கீழே விழுந்தார். அன்று மாலையில் அவர் மரணம்! என்னே பலசாலியின் முடிவு!

நிலம் வாங்குவதின் அநுபவம்.



மிருதுவான தூய மலர் போன்ற கதரைக் கட்டுவதற்கு—"அது கனம்"—எனக் கூறி மறுக்கும் இக்காலத்தவர்க்கு விவசாயம் ஏற்றதாமா? அன்றி, வியாபாரந்தான் அவர்களால் ஆகக் கூடியதா? எனவே, தேக உழைப்பின்றியும் வியர்வை சிந்தாமலும் இருந்து பொருள் குவிக்க உத்தியோகமே தக்கதெனக் கொண்டனர். அதிலும் உன்னத பதவி வகிப்பவர் அபூர்வம். சிறிது சம்பளத்தில் பெரிதும் உழைப்பவரே மிகுதி.

ஃ

"எத்தனை நாள் இந்த அடிமைத் தொழில் புரிவது? உள்ள பணத்தைக் கொண்டு சிறிது நிலம் வாங்கிப் பயிர்த் தொழில் செய்வதோடு எதுவும் ஈடாகாது. குடித்தனமோ துரைத்தனமோ என்பது அதற்குத்தான் தகும்" என வாயூறி நினைக்கின்றனர். இவர்களுக்கு விவசாயத்திலுள்ள பாடுகள் தெரியாது. பண்டைக் காலத்தில் நம் முன்னோர் எவ்வகைத் துயருமின்றி வாழ்ந்ததற்கு எதுகரம் அவர்கள் கொண்ட விவசாயமும் வியாபாரமுமேயாகும். அது அந்தக் காலத்துச் சங்கதி!

ஃ

தற்கால விவசாய நிலைமையோ, "உருட்சிக்கு நீட்சி, புளிப்புக்கு அதன் அப்பன்" என்பது போலவும் "இக்கரைக்கு அக்கரை பச்சை" என்பதுபோலவும் இருக்கிறது. பருவ மழையோ படுமோசம்! கூலியாட்களோ இலங்கை-சிங்கப்பூர் ஏற்றுமதி! நிலவரியோ முன்னிலும் பலமடங்கு! அரசாங்க 'அமுல்' விவசாயிகளிடமே! அகவிலையோ மிகவிலை!

ஃ

முன் காலத்தில் நல்ல மழை பெய்தது. குறைந்த விலையில் கொழுத்த எருதுகள் வாங்க முடிந்தது. உடுக்கத் துணிகள், உழவு முதலியவற்றிற்கு வேண்டிய இரும்பு சாமான்கள் எளிய விலைக்குக் கிடைத்தன. நிலத்திற்கு வேண்டிய எருவும் தழையும் பெறுவது எளிதாயிருந்தது. மாடுகளுக்கு மேய்ச்சல் தரை ஏராளம். இந்நிலையில் அரசாங்கத்தின் "அமுலும்" குறைவு. இப்பொழுதோ அவை யாவும் தலைகீழாக மாறிவிட்டன. ஆற்றுப்பாசன வசதி யில்லாத நாட்டுப்புறங்களில் அவ்வப்பொழுது பெய்யும் மழை நீரை வீண் போகாது பயிர்த் தொழிற்குப் பயன்படும் வண்ணம் நம் மூதாதையரால் கட்டிய ஏரிகளிற் பெரும்பாலன மண்மேடாய் விட்டன. சில ஏரிகள் சிறிது நீரே கொள்ளத் தகுந்தனவாயுள்ளன. இவற்றைச் செம்மைப் படுத்துமாறு பலமுறை விண்ணப்பஞ் செய்யினும் "இது சமயம் முடியாது" என்ற பதிலே பெரும்பாலும் அதிகாரிகளிடத்தினின்று கிடைக்கிறது. இந்நிலையில் ஏரிகளில்லாமல் மழை நீர் வீணாகப் போகு

திருக்குரான் தமிழ் மொழி பெயர்ப்பு ஸம்பூர்ணமாக எழுதி வைக்கப்பட்டுள்ளதென்றும், அதை அச்சிட 5000-ரூபாய் போல் வேண்டியிருக்குமென்றும், அதனால் தாமதமென்றும் ஒரு அன்பர் கூறுகிறார்.

மிடங்களில் புதிதாக ஏரிகள் கட்டி உதவி புரியுமாறு கேட்பின் அது முடியக்கூடியதா ?

ஃ

நிலங்களில் இருவகை நாட்டுப்புறங்களில் உண்டு. ஊற்றுப்பாசன மென்றால் கோடை காலத்தும் வற்றாமல் மலையினின்று வரும் ஊற்று அன்று; ஏரி நிறைந்துள்ளபொழுது, அதன் பள்ளத்தாக்கில் கசியும் நீரை அங்கங்கே அணைபோட்டு நிலங்களுக்குப் பாய்ச்சுவதே ஊற்றுப் பாசனமென்று பெயர். ஏரிகள் நிறைந்து பெருகுவதென்பது பல வருடங்களாக இல்லை. ஏரிகள் நிறையாமற் போகவே ஊற்றுப்பாசன நிலங்களுக்குப் பாசன வசதி உண்டு என்னும் அடையாளமும் மறையும் தருவாயில் உளது. ஏழை விவசாயிகள் அங்கங்கே கிணறுகள் தோண்டி, முன்பு 50,60-ரூபாயில் வாங்கிய எருதுகளை, இதுபொழுது 200, 300-ரூபாய் போட்டு வாங்கிப் பன்னிரண்டு மாதமும் கவலையிற் பூட்டி இறைத்து நீர்பாய்ச்சிப் பயிர் செய்கின்றனர். மாடுகள் மேய்வதற்கு முன்பு போல் மேய்ச்சல்தரை யில்லாமையால் ஒரு வருடத்தில் வாங்கிய எருதுகள் அந்த ஆண்டிலேயே துரும்புபோல் மெலிந்து வேலைக்குப் பயனற்றதாகி விடுகின்றன. முன்பு கிராமத்திற்குப் பொதுவாக இருந்த "கொஞ்ச நஞ்சம்" புல் தரைகளையும் அரசாங்கத்தார் கைப்பற்றிக் கொண்டனர். மாடுகள் மேய்வதற்கு "மேய்ச்சல் வரி" எனத் தனியே கொடுத்ாலன்றி உள்ளே நுழைய இயலாது. நிலத்திற்சென்று சமீபத்தில் உள்ள மலைகளிற் சென்று முன்பு போல் தழை கொண்டு வருதலும் இயலாது. அதற்கும் தனியே "வரி" கொடுத்தாக வேண்டும்.

ஃ

நிலங்களின் சாகுபடியைக் கவனிக்க வரும் "ரெவின்யூ இன்ஸ்பெக்ட"ரிடம் குடிகள்,

—"ஐயா! இந்த வருடம் ஏரி நீர் பாயவேயில்லை; தயவு செய்து பாசன வரியைக் குறைக்கும்படி சிபார்சு செய்ய வேண்டும்."

என்று கேட்டால்,

—"முடியவே முடியாது; உங்கள் நிலமெல்லாம் சாகுபடியாயிருக்கின்றனவே."

என்று கூறுகிறார் அந்த அதிகாரி.

குடிகள் :—"ஏரி நீர் பாயவில்லை ஐயா! 'கவலை'யை இழுத்து இழுத்து எங்கள் கையும் காலும் தேய்ந்துவிட்டதே."

அதிகாரி :—ஏரியின் பக்கத்திலுள்ள நிலங்களில் நீர் பாய்வதை நான் நேரிலேயே பார்த்தேன். நீங்கள் இல்லையென்கிறீர்களே ?

குடிகள் :—பொய் சொல்லவில்லை ஐயா! இந்த வாய்க்காலைப் பாருங்கள். கள்ளி முளைத்துக் கத்தாளை (கற்றாழை) பூத்திருப்பதை ! இதுவே சாட்சி சொல்லுமே எங்கள் நிலங்களில் நீர் பாயவில்லை யென்று."

அதி:—"ஓ! நல்ல சாட்சி காட்டினீர்கள்! நீங்கள் வாய்க்கால் வெட்டிச் சீர் செய்யாததனால் பாயவில்லை. அது உங்கள் தவறு !"

குடி :—"இல்லை ஐயா ! "அப்பனுக்கே ஒட்டுக்கோவணம், மகனுக்கு இழுத்துப்போர்த்து"என்றால் என்ன

ஒரு கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்கும் சுபாவத்தை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும். இந்த நல்ல குணம் ஆங்கிலேயரிட மிருந்து கற்றுக் கொள்ளலாம்.

செய்வோம்? ஏரிப்பக்கத்திலுள்ள நிலங்களுக்கே நீர் தாராளமாகப் பாய்வதற்கில்லை. எங்கள் நிலமெல்லாம் அவற்றின் கழிவுநீரைக்கொண்டே பாயக்கூடியவையன்றோ?"

அதி :—"இவையெல்லாம் சமாதான மாகாது; நீங்கள் வாய்க்கால் வெட்டிச் சீர்செய்திருந்தால் கண்டிப்பாகப் பாயும்" என்று தனது அதிகாரத்தை "மூறுச்சுந் திருக்கு"மாகக் காட்டிச் சொல்லிச் செல்கின்றார். மேலதிகாரிக்கு விண்ணப்பித்தாலோ அவர் இவருக்குமேல் "பெரிய சுழி" போட்டுக் காட்டுகின்றார். என்ன கொடுமை! உண்மையாகவே நீர் பாயவில்லை. அப்படிப் பாய்வதாயிருப்பினும் குடிகளே தங்கள் சொந்தச் செலவில் வாய்க்கால் முதலியன வெட்டி நீர் பாய்ச்சிக்கொண்டு, சர்க்காருக்கும் "வரி" செலுத்திவிட வேண்டும்.

ஃ

குடியானவர்களின் நிலையே இவ்விதமானால், அவர்களிடத்து வேலை செய்யும் கூலியாட்களின் நிலைமையெவ்வாறிருக்கும்? அவர்கள் ஒரு பக்கம் குடியானவர்களிடத்து "கூலி அதிகம் வேண்டும்; இது கட்டாது என்று முறையிடுகின்றனர். கூலியாட்களின்றிக் குடியானவன் என்ன செய்ய முடியும்? அவன் கேட்டதைத் தரச் சம்மதிக்கிறான். கூலியாட்கள் அவ்வளவோடு திருப்தி அடைவதில்லை. ஓராண்டு கழிந்த மறு வருடத்தில் "இப்பொழுது கொடுப்பது போதாது; இன்னும் சிறிது உயர்த்த வேண்டும்" என்கின்றனர். "எருதுப் புண் காக்கைக்குத் தெரியுமா?" குடியானவன் மயங்குகிறான்.

ஃ

இந்நிலையில் ஒரு முரட்டுச் சட்டையும் தங்கப்பட்டமும் பூட்டிக்கொண்டு, கூலியாட்களிடத்தில் வந்து, "நீங்கள் ஏன் இவ்வளவு கஷ்டப்படவேண்டும்? கஷ்டப்பட்டும் மிச்சம் ஒன்றும் காணோமே? வாங்கள், வாங்கள் சிலோனுக்கு; தினம் ஒன்றுக்கு 8 அணா 10 அணா அவரவர்கள் சக்திக்குத் தகுந்தபடி பணம் குவிக்கலாம்" என்று பசப்பு வார்த்தை காட்டி மயக்குகின்றார்கள்—"கங்காணிகள்" என்று பெயர் வைத்துக்கொண்டு சிலர். ஏழைக் கூலிகளும் அவர்கள் பேச்சை நம்பிப் புறப்படுகின்றனர். இந்தக் காட்சி சேலம் திருச்சி ஜில்லாக்களில்தான் மிக அதிகம். கங்காணிகள் சொன்ன "சக்திக்குத் தகுந்தபடி" என்பதன் பொருளைக் கூலிகள் அறிவதில்லை. இங்கே (நம் நாட்டில்) பலஹீனனாயினும் "வயிறு வளர்த்து"விடலாம். அங்கே (சிலோனில்) முடியாது. எங்ஙனமோ கூலியாட்களும் மந்தை மந்தையாகச் சிலோனுக்குச் சென்றுவிட்டனர். மீதியிருக்கும் ஒன்று இரண்டு கூலியாட்களும் "சம்பளம் அதிகம் கொடுக்காவிட்டால் சிலோனுக்குப் போய்விடுவேன்" என்று பயமுறுத்துகிறார்கள். 'இருப்பதா, இறப்பதா' என்ற நிலையில் இருக்கின்றனர் ஏழைக் குடியானவர்கள்.

'நிலம் வாங்குவதின் அநுபவம்' எவ்வளவு ருசிகரமாயிருக்கிறது பாருங்கள்!

பெ. இராமாநுஜ ரெட்டியார்.

எல்லாம் பணத்தின் மகிமையடா அப்பா! எந்த ஊரில் குடி புகப்போனாலும் கையில் பணமிருந்து விட்டால் உதவிக்கு மனிதர்களும், வேலைகள் செய்ய வேலைக்காரர்களும் கூடி விடுவர். பணத்தின் மகிமை எங்கும் தன் கொடி பறக்க வைக்கும். பணமில்லாதவனையோ?—அது ஒரு கண்ராவி!



1. தலையாட்டிகள் :—இருவருக்கும் ஹிதமாகப் பேசி, இங்கொரு சமாதானமும், அங்கொரு சமாதானமும் கூறி, இருபக்கத்திலும் சரி, சரி, ஆம், ஆம், என்று தலையசைத்து, தங்கள் அபிப்பிராயத்தை நெஞ்சுக்குள்ளேயே வைத்து, எதிலும் பட்டுக்கொள்ளாமலும், எவருக்கும் விரோதமாகாமலும், நியாயம் பேசுகிற தன்மையில் நின்றுகொண்டும் பெரிய மனிதர்களாகக் காட்டிக்கொள்ளும் தந்திரப் பிசாசுகளுக்குத் தலையாட்டிகளென்று பெயர்.

வெளியூர் உத்தியோகம் :—இது உள்ளூருக்கு வாசனை காட்டும். என்னவோ பிரமாதமாகச் சம்பாதிக்கிறவன்போல் நினைக்கவைக்கும். தன் ஊர் வரும்போதெல்லாம் தேவேந்திரலோகத்திலிருந்து வந்ததுபோல் ஒரு புது நடை போடச்சொல்லும். பகல் வேஷம் காட்டும். கடைசியில் நாலு காசு மிச்சப்படுத்த வழியிருக்காது.

3. குள்ளநரி :—தான் சாமர்த்தியமாய்ப் பேசுவதாக அது நினைத்துக்கொள்ளும். தான் நல்ல பிள்ளையாய்க் காட்டிக்கொள்வதும் வேறு. ஏதும் தெரியாதவனென்று இந்தக் குள்ளநரியை ஊரிலிருந்து வந்த ஸதிபதிகள் தங்கள் பக்கத்தில் அன்புடன் சயனிக்க வைத்துக்கொண்டால், இரவின் எல்லா விஷயங்களையும் இந்தக் குள்ளநரி கூர்ந்து கவனித்துவிடும்!

4. நுழைநரி :—இது வேறு தினுசு. இதற்கு சாமார்த்தியம் அதிகம். எந்நேரமும் சிரித்து நிற்கும். பகைத்துக்கொண்டால் அண்டையிலிருந்தே கெடுக்கும். அறிந்த விஷயங்களை வெளியே காட்டாது. தெரியவேண்டியவற்றைச் சாமர்த்தியமாகத் தெரிந்துகொண்டுவிடும். இது காது அறுத்தாலும் அறுக்கும், பேனை எடுப்பினும் எடுக்கும்.

5. வஞ்சகநரி:—ஐயோ! இதைப் பகைத்தால் வந்தது மோசம்! தனக்கு நஷ்டம் வந்தாலும் பிறர் கஷ்டப்பட்டால் அதற்குப் போதும். பிறரிடம் சென்று அங்கும் தூண்டிவிட்டு, இங்கும் கிளப்பிவிட்டுத் தன் காரியத்தையும் முடித்துக்கொள்ளும். இது தனக்கும் சுகம் தேடாது, பிறருக்கும் சுகம் தேடாது.

6. மனப்போக்கு:—மனைவியின் வீட்டாரிடம் சிலருக்கு அபார அபிமானம். அவர்கள் வந்ததும் உடம்பு பூரித்துவிடும். ஒரு புதிய ஊக்கம் எழும். ஓயா விருந்துதான். தன்னைச் சேர்ந்தவர் வரினோ மனக்கசப்பு, சோம்பேரித்தனம், பணம் இல்லாமை —எல்லாம் கூடிவிடும்.

பண்டிட் K. விஜயராகவ ஐயங்கார்.

II

7. விடிந்தபிறகோ?:—இராவெல்லாம் நாடகம் ஸினிமா தான்! விளை

பொடி போட்டால் அது கூட ஒரு தப்பிதமா? என்கிறார் ஒரு "பொடி மனிதர்." இவ்விதமே வாய்க்குப் புகையிலை போடுவது ஒரு கெட்ட பழக்கமா? என்கிறார் ஒரு வாய்ப் புகையிலைக்காரர். தன் பிழைகளை யுணர்வது கஷ்டம்!

யாட்டு தமாஷ்கள் தான்! பலவித படிப்புகள் தான்! விடிந்தபிறகோ வந்துவிடுகிறது பெரிய மனக்கவலை!

8. வைத்தியரின் மௌனம்:—வைத்தியர் நோயாளியின் கையைப் பார்த்துவிட்டு ஒன்றும் பேசாமல் இருந்துவிடுகிறார். நோயாளியோ என்ன என்னவென்று கேட்டபிறகு ஏதோ ஒன்றை உளறிவிட்டுத் தன் வீட்டுக்கு ஆள்விட்டு அலையட்டும் என்று போய்விடுகிறார். இதில் ஒரு கௌரவம் இருக்கிறதென்று அவர் எண்ணம்போலும்! வைத்தியர் வராமல் மோசம் செய்கிற நோத்தில் கடவுளே துணைவந்து பிணியைக் குணப்படுத்திக் காப்பதும் உண்டு.

9. சமயபேதம் தெரிவதில்லை:—ஒருவன் ஒரு வேலையையோ, புஸ்தகத்தையோ அவசரமாகப் பார்த்துக் கொண்டிருக்கும்போது சில நண்பர்கள் வந்து பழய கதைகளைப் பேச உட்கார்ந்துவிடுகிறார்கள். இதற்கு என்ன செய்ய? எவ்விதம் விலகுவது?

10. புதிய சந்தா சேர்க்கும் வழி:—"அமிர்த குணபோதினி"க்குச் சந்தாதாராகச்சேருங்கள் என்று சொல்வதைவிட, நான் ரூபாய் அனுப்புகிறேன், நீங்கள் சும்மா வாசித்துப் பாருங்கள் என்றாலோ, உடனே யாவது, இரண்டு மாதப் பத்திரிகைகளைப் படித்தபிறகாவது சந்தாவைக் கொடுத்துவிடுகிறார்கள். இது நேரில் கண்ட அநுபவம்.

N. சங்கரநாராயணன்.

மூளைக்கு வேலை.

1. மும்மூன்று எழுத்துக்களுள்ள ஆறுவரிகள். நடுவெழுத்துக்கள் ஆறும் திருமாலின் ஒரு அவதாரமாகும். ஆறு வரிகளில் முதல் வரி ஒரு சதுரங்கக் கருவி. இரண்டாம் வரி உடன் பிறந்தவரின் மனைவி. மூன்றாம் வரி அரும் பொருள். நான்காம் வரி அவிழ்தச் சரக்கு. ஐந்தாம் வரி ஓர் பாஷை. ஆறாம் வரி விவாகத்துக்கு முன்னுள்ள நிலையாகும்.

2. மூன்று எழுத்துக்களாலான ஐந்து வரிகள். அவற்றின் நடுவெழுத்து ஒரு மலையாகும். ஐந்து வரிகளில் 1-ம் வரி ஸ்ரீராமரின் அருள் பெற்ற ஸ்ரீமதி. 2-ம் வரி நீரோட்டத்தின் ஒரு பெயர். 3-ம் வரி ஒரு மாதத்தைக் குறிக்கும். 4-ம் வரி மரங்களில் ஒன்று. 5-ம் வரி இரத்தக்கலப்புள்ள உறவினன்.

நடுவெழுத்து ஐந்தையும் நீக்கிவிட்டால் 1-ம் வரி 'ஆம்' என்பதற்கு மாற்றுச் சொல். 2-ம் வரி 'அணை' என்பதன் மாற்றுச் சொல். 3-ம் வரி இரும்பாலாகிய சிறு கருவி. 4-ம் வரி ஐந்து யுகங்களில் ஒன்று. 5-ம் வரி 'வருந்து' என்பதன் மாற்றுச் சொல்லாகும். மாந்தை—சா. கிருஷ்ணய்யர்.

விடுவிப்பு:—1. பகடை, அண்ணி பணம், அபின், மராதி, கன்னி.
2. சபரி, அருவி, ஆவணி, கதலி, தம்பி.



பெரியாரின் மொழிகள்



(முன் பக்கம் 25-லிருந்து.)

510. The shortness of life should not be to any rational person a conclusive reason for washing, the space of it which may be granted him. RUSKIN.

மின்னின் நிலையிலது மன்னுயி ராக்கை என்பதே காரணமாகத் தனக் கென ஏற்பட்ட வாழ்நாட்களை வீணே கழித்துவிட அறிவுள்ள எவனும் விரும்பமாட்டான். ரஸ்கின்.

511. I believe that virtue shows quite as well in rags and patches as she does in purple and fine linen. DICKENS.

உயர்குணம் சற்றும் ஆடம்பரமில் லாத நிலைமையில் வெகு அழகிய தாய்ப் பிரகாசிக்கின்றது. டிக்கன்ஸ்.

512. The wanderings of this most intricate Universe Teach me the nothingness of things. TENNYSON.

மிகவும் சிக்கலான உலகியலை ஆழ்ந்து யோசிக்குங்கால் விஷயங்க ளின் முடிவான பயனற்ற தன்மை புலப்படுகிறது. டேனிசன்.

513. Every action down the drawing of a line or uttarance of a syllable, is capable of a peculiar dignity in the mauner of it. RUSKIN.

ஒவ்வொரு பேச்சும், ஒவ்வொரு செய்கையும் ரீதியை அனுசரித்து ஒவ்வொரு தனிப்பட்ட தன்மையுள்ள தாய்ப் பரிணமிக்க வல்லது. ரஸ்கின்.

514. But deep this truth impressed my mind—Through all His works abroad, The heart, benevolent and kind, The most resembles God. BURNS.

அன்பும் தயையும் பொருந்திய மனம்தான் தெய்வ சாந்நித்யம் வாய்ந்தது என்ற இந்தப் பெரிய உண்மை அவனது சிருஷ்டியிலெல் லாம் விளங்கி என் மனதில் ஆழமாய்ப் பதிந்துவிட்டது. பர்ன்ஸ்.

515. All great and unusual occurances wether of joy or sorrow lift us above this earth; and we should do well always to preserve this elevation. LONGFELLOW.

பெருத்த, அபூர்வமான சந்தோஷம் அல்லது துக்க சம்பவங்கள் யாவும் நம்மை பிரகிருதியினின்றும் உயர்த்தி விடுகின்றன; அக்காலங்களில், என் றும் அதேமாதிரி உயரிய தன்மை யில் நிலைத்து நிற்கப் பார்த்தல் நன்மையானது. லாங்பெல்லோ.

516. The right faith of man is not intented to give him repose, but to enable him to do his work. RUSKIN.

எந்த உண்மையான மதமும் மனி தனை சோம்பித்திரிய இடந்தரவில்லை.

வேலை வெகு கஷ்டமாய்ப்படினும் நல்ல உத்ஸாகம் அதிலிருக்கிறது.

அவனவன் சக்தியானுகுணமாய் பாடு படவே போதிப்பதாயிருக்கிறது.

ரஸ்கின்.

517. The truths of nature are one eternal change, one infinite variety. RUSKIN.

காலானுகுணமாய் ஓயாமல் மாறிக் கொண்டே இருக்கும் இயல்பிலும், அளவிடவொண்ணாத மாறுபாடுடைய தன்மையிலும் தான் இயற்கையின் உண்மை அடங்கியுள்ளது. ரஸ்கின்.

518. In every person who comes near you, look for what is good and strong: honour that; rejoice in it, and as you can, try to make it. RUSKIN.

உன்னிடம் நெருங்கிவரக்கூடிய ஒவ்வொரு மனிதனுடைய தன்மையிலும் நன்மையுடையதும் த்ருடமுள்ளதுமான விஷயங்களை மட்டும் கவனித்துக்கொள். அதன்பொருட்டு அவனிடம் கௌரவபுத்தி பாராட்டி சந்தோஷப்படு; கூடியவரை அம்மாதிரி இருக்க நீயும் யத்தனம் செய்.

ரஸ்கின்.

519. Your intelligence should always be for in advance of your acts. Whenever you do not know what you are about you are give to be doing wrong.

RUSKIN.

ஒரு காரியத்தைச் செய்வதில் உன்ன சுறுசுறுப்பைக்காட்டிலும் அது வெற்றியுடன் முடிவதற்கான வழிகளில் உன் யோசனை வெகுதூரம் சென்றிருக்கவேண்டும். முற்ற முடிய யோசித்துச் செய்யப்படாமல் மயங்கும் காரியம் அவசியம் தீமையிலேயே முடியும். ரஸ்கின்.

520. The part of a good woman is indeed strewn with flowers; but they rise behind her steps, not before them. RUSKIN.

உத்தமி ஒருவள் செல்லும் மார்க்கம் உண்மையில் மலர்களாலானது போன்று சுககரமானதே. ஆனால், அஃது அவள் செல்லச் செல்லத்தான் புலப்படுந் தன்மையதாய் இருக்கிறது.

ரஸ்கின்.

521. Neither a great faet nor a great man, nor a great poem, nor a great picture, nor any other great thing can be fathomed to the bottom in a moment of time. RUSKĪN.

ஒரு உயர்ந்த உண்மை, ஒரு மஹான், ஒரு சிறந்த கவிதை, ஒரு அழகிய சித்திரம், மற்றும் உலகில் அருமையானதாய்க் கொண்டாடப் படும் விஷயங்கள் இவற்றின் இயல்பைப் பூராவும் உடனே தெரிந்து கொண்டுவிட முடியாது. ரஸ்கின்.

522. He is rich or poor according to what he is, not according to what he has.

HENRY WARD BEECHES.

அவனவன் மனோநிலைமைக் கேற்பவே பணக்காரனாகவோ அன்றி ஏழையாகவோ ஆகிறானே ஒழிய முன்னமே அவனுக்கு உள்ளதைப் பொறுத்தன்று.

ஹென்ரி வார்டு பீச்சர்.

523. True greatness of soul sympathizes with true greatness of soul, all the world over.

DICKENS.

உலகம் எங்கணுமே ஆத்மாவின் உயரிய தன்மையானது உண்மையில் உயர்ந்த ரீதியுள்ளதாகவே இருக்கிறது. டிக்கன்ஸ்.

T. R. ஸ்ரீநிவாஸன், B. A.



ஏகநாதன்

IV

முன் குறிப்பு :—ஏகநாதன் தன் இல்லத்திற்கு வந்து பெற்றோர்களை வணங்கி ஆசி பெற்றான். பின்னர் திருமண முடித்துக்கொண்டு இல்வாழ்க்கையை நடத்திவரும் நாளில், அவனது பெற்றோர்களின் சிராத்தம் வர, அதன் நிமித்தம் அநேக பிராமணர்கள் அவன் வீட்டில் உணவுகொள்ள வந்து கூடியிருந்தனர். அச்சமயம் ஒரு தோட்டியும் அவன் மனைவியும் ஏகநாதனின் வீட்டின் பக்கம் வந்தனர். தோட்டி தான் இழிதொழிலைச் செய்பவனாயினும், கடவுள் தனக்கு இட்ட பணியை உயர்வாகக் கருதி நடத்தி அதில் திருப்தியும் ஒரு கௌரவமும் கொள்ளும் பக்குவ விவேகியாய் இருந்தனன். அவன் உள்ளத்தில் பூரித்து நின்ற தெய்வபக்தியை அவனது புன்னகையான வதனம் நன்கு உணர்த்திற்று. தோட்டி தன் மனைவியிடம் "உலகம் எத்தனை கேவலமாக நமது தொழிலைப் பழித்தாலும், நம் தொழிலுக்கு நிகரானது உலகில் இல்லை" என்கிறான். அவன் மனைவி அவன் வார்த்தைகளைப் பரிகசித்து, "நமது தொழிலை உயர்ந்ததென்று எவரும் சொல்லார்; சொல்லும், உம்மையும், ஏதோ பைத்தியம் பிடித்தவன்; என்னவோ படித்துவிட்டுக் கத்துகிறவன், என்றே கேவலப்படுத்துவர். இன்னும் பள்ளத்திலும் தள்ளி மண்ணை மூடிப் புதைத்தாலும் புதைத்து விடுவர். ஆனதால், உமது வாயை யடக்கும்" என்கிறாள்.

சத்தியவந்தனான தோட்டியோ தன் மனைவி கூறியதை மறுக்கிறான்' "நீ எப்படியாயினும் சொல்லு; நான் எண்ணும் எண்ணங்கள் நியாயமானதே. நாமோ கடவுளின் படைப்பு; இந்த உலகம் இறைவன் நமக்கு மனமுவந்து அருளிய பரிசு. இவ் வுலகில் காணப்படும் ஊர்களிலும் வீதிகளிலும் மற்றவர்களைப் போல நமக்கும் கை வீசி ஒய்யாரமாய் நடக்கும் சுதந்திரம் உண்டு. வீதிகள் எல்லாம் அழகும் சுத்தமுமாய்ப் பரிசுத்தப்படுவது எவரால் என்று கவனி. நமது வகுப்பினர் இல்லாவிட்டால் வீதிகள் எங்கும் குப்பையும் செத்தையுமாய், வழி நடக்கவே இயலாததாய், சுகாதார பங்கமாய், நம்மைத் தாழ்த்துகிற மாந்தரெல்லாம் தவித்துப்போவர். வீட்டைச் சுத்தி செய்தும், குழந்தைகளின் மல ஜலாதிகளை எடுத்தும், இல்லத்தை எத்துணையோ பரிசுத்தமாய்ப் பாவையர் வைத்திருப்பது போல், இவ் வுலகமாகிய இல்லத்தை நாமும் நமது ஸகோதரர்கள் சுகமாய் வாழ்ந்து உலாவிச் செல்லுமாறு சுசிகர

வேறு எதுவும் இல்லாமற்போய், கைவசம் இருப்பதே கதியென்று ஏற்பட்டுவிடும்போது அது பிறகு நன்றாயிருப்பதாகவேதான் மனதிற்குத் தோன்றிவிடும், அதை எவ்விதமும் ஒப்புக்கொண்டு திருப்திபட்டும்விடும்.

மாய் ஒழுங்காய் வைத்திருக்கிறோம். 'ஒரு பெண்ணால் இல்லம் விளங்குவது போல்' நம்மால் இவ்வுலகும் பரிமளிக்கின்றது. 'பெண்கள் சில சமயங்களில் அவமதிக்கப்படுவது போல்' நாமும் தாழ்த்தப்பட்டாலும், இறைவனின் மேலான பார்வையில் மங்கையரும் நாமும் உயர்வு உயர்வே. சுத்தி செய்வ தான நம் தொழிலினுஞ் சிறந்தது உலகில் ஏதுவுண்டென்று எவரையும் இறு மாப்புடன் கேட்பேன். கடவுள் படைத்த விசாலமான இவ் வுலகில் பிரதி மனிதனும் தன் தொழிலை எவ்வளவு உயர்த்திக் கொள்ளினும், எனது தொழிலை அன்னோர் சற்று உற்றுப்பார்க்கவே நேரும். நான் சுத்தி செய்வது போல் உலகினர் தங்களின் களங்கம் நிறைந்த உள்ளத்தையும் சுத்தி செய்து கொள்ள என்னைப் பார்த்தே கற்பாராயினர்'' என்று தத்துவ சாஸ்திர ரீதி யாய்த் தன் மனைவிக்குப் பதில் சொல்லுகிறான்.

"என்ன நீங்கள் பார்ப்பானைப் போல் தத்துவம் பேசுகிறீர்களே" என்கிறாள் அவன் மனைவி.

அதற்குத் தோட்டி சொல்கிறான் :—"இது உனக்கு ஓர் அதிசயமாகக் காணலாம். பார்ப்பனன் எதெதைச் செய்கின்றானோ அதனையே நாமும் அழகாய்ச் செய்ய முயலுவோம். அவன் செய்யும் ஈச்வர வந்தனை, பூஜை, தியானம் முதலிய சகலமும் நாமுங் கூடச்செய்து, அவனைப்போல் நம்மையும் உயர்த்திக்கொண்டு, நாமும் பார்ப்பனர்தாம் என்று மற்றவர்களிடம் போய்ச் சொல்லுவோம். பார்ப்பனன் மதுவுண்டு மயங்கி உணர்வு தடுமாறுவதில்லையா? அவ்விதமே நாமும் மதுவுண்டு கெடுகிறோம். 'பார்ப்பனன் மதுவுண்டால் பாதகமில்லை' என்று சொல்லப்படின், நாமும் மதுவுண்பதில் தாழ்ந்தவராகி விடுவதில்லையென எதிர்த்துப் பேசுவோம். 'அவன் செய்யும்போது நாமும் செய்வதற்கென்ன' என்று ஒவ்வொன்றுக்கும் அவனது செயல்களையே ஆதாரமாய் எடுத்துக் காண்பிப்போம். அவனையே நாம் செல்லும் பாதைக்கு ஒரு முன் வழியாக நமது வாழ்விலும், எண்ணத்திலும், நித்திரையின்போதுங் கூட வைத்துக்கொள்வோம். இவ்விதம் அவனது வழியையே நாம் பின் பற்றிச் செல்லுகையில், அவன் தன்னைப் பார்ப்பனன் என்னும்போது, நாமும் நம்மைப் பார்ப்பனர் என்று உயர்த்திப் பேசிக்கொள்வது குற்றமோ—மோசமோ? பரிசுத்தர் எவரோ அவரே பார்ப்பனர். நம் ஜாதியோ பரிசுத்தப் படுத்தும் ஜாதி. பரிசுத்தப்படுத்துகிறவர்கள் பரிசுத்தமாக இருக்கவும் முடியும். அவ்விதமே பரிசுத்தராகி நாமும் பார்ப்பனர் ஆகக் கடவோம்"—என்று தன் மனைவிக்குக் கூறுகின்றான்.

அதற்கு அவன் மனைவி, "உயரிய தத்துவங்களை மிகவும் ஆராய்ந்திடும் பார்ப்பனர். அவர்களின் வழியில் நீங்கள் செல்ல முயல்வதை ஒப்புக் கொண்டு பார்த்துச் சகிப்பார்களா?" என்று கேட்கிறாள்.

அதற்குத் தோட்டி, "தத்துவங்களும் சாஸ்திரங்களும், அநுஷ்டான ஆசார விதிகளும் எவ்வளவோ கிடக்கின்றன. அந்த நல்வழியே பார்ப்பனன் செல்லுகிறானா? அதுவும் இல்லை. அவனுக்கென்று ஏற்பட்ட உத்தம பாதை

களின் வழியே நம் வகுப்பினர் செல்லுகின்றனரா? அதுவும் இல்லை. அவர்களும் தங்கள் வழி செல்லாது கெடுகின்றனர். நாமும் அன்னோது பரிசுத்தமான வழியில் செல்லாது இழிந்தவற்றைப் புரிந்து கெடுகிறோம். இருவர் வழியும் ஒழுங்குள்ளதாக இன்றிக் கஷ்டமே படுகின்றனர்'' என்கிறான்.

அதற்குத் தோட்டியின் மனைவி, "இவ்வளவு பார்ப்பனர்கள் நம்மை எவ்வளவு காலமாகக் கேவலமாய் நடத்துகின்றார்கள். அவற்றைப் பொறுத்துக் கொண்டிருக்கவோ மனம் ஒப்பவில்லை'' என்கிறாள்.

அதற்குத் தோட்டி சொல்லுகிறான்:—"'நெஞ்சம் பொறுக்கவில்லை' என்று அவரைத் தூஷித்து நோவதில் ஆவது என்ன? முன்னோர் செய்த சூழ்ச்சியில் சிக்கி நாம் இந்தக் கதியாய் அலைகிறோம்; நமது மதியீனத்தாலேயே தரித்திரா தேவியின் மக்களாய் இழிநிலை யுற்றோம்; இந்தக் கேவல நிலைமைகளை நாம் புத்திசாலித்தனமாய் உதறி எறிந்து தலைதூக்க ஆரம்பித்து விட்டால், இப்போது நம்மைப் பழிக்கும் நாகரிகத்தந்திரமுடைய இவர்களெல்லாம் பிறகு பல்லை இளித்து ஏங்குவர். என்னவோ இன்றைக்கு இந்தப் பார்ப்பனர்கள் தாம் உயர்ந்தோரென்று ஜாதிப் பெருமையில் கர்வித்துள்ளார். தோட்டிகளாகிய நாம் அவர்க்கு அடிமைப்பட்டவரா?—அல்லது உண்மையில் உத்தம தொழிலைப் புரிந்து பரம சகாயஸ்தர்களாய் விளங்கும் நமக்கு அவர்கள் அடிமைகளா?—என்பதையும் அறிவதற்கு எப்போதாவது ஒருநாள் வரும். அந்நாள் வருமளவும் 'நாம் செய்யும் தொழில் ஈசன் நமக்கு அன்புடன் விதித்தது' என்று கருதி ஸன்மார்க்கமாய் நடந்து வரக்கடவோம். நமது எண்ணரிய துன்பங்களும், இந்தப் பாழும் தீண்டாமையும் பறந்துவிடுங் காலம் வரும் போது நமது தொழிலும் கௌரவமுள்ளதாய் நமக்கு உயர்ச்சியும் நன்மையும் தரும்'' என்று உரைக்கின்றான். அதன் பின் தன் உள்ளத்தே உண்டான பலபல எண்ணங்களைக் கருதியவண்ணம் மௌனமாய்ச் சிந்திக்கின்றான்.

இதுவரையுள்ள கருத்துகளையடக்கி இங்குப் பாக்களாகத் தரப்பட்டுள்ளன. வசனத்தைவிடக் கவிதைகள் மனத்தில் நன்கு பதியும். ப-ர்.]

ஏ க நா த ன்

இடம்:—ஏகநாதனின் வீட்டைக்கடக்குமோர் பாதை.
பாத்திரங்கள்:—தோட்டியும் அவன் மனைவியும்.
காலம்:—முற்பகல்.

தோட்டி:— "என்னதான் உலகம் சொன்னபோதிலும்நம்
உன்னதத் தொழிலுக் குயர்ந்ததா வொன்றிலை
உன்னிடில் உலகில்........''

வாழ்வின் கடைசிகாலத்தில் அமைதியான வாழ்க்கையைச் சம்பாதிப்பதற்காகவே குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கப்படுவதாய்ப் பலர் நினைக்கின்றனர்,

தோட்டியின் மனைவி:— "உளறும் உம் வாய்
புன்சொற் சிலவே புறத்தவர் செவிபடில்
என்சொலார் உம்மை? என்னவோய் இவனோர்
சுத்தப் பைத்தியன்: கத்தித் திரிகிருன்.
மெத்தப் படித்தவன்! பித்தன், சோம்பன்,
எனக்கடுத் துரைத்தே ஏற்றவா றடிடல
மனம்போல் தந்து மடுவாங் குழியில்
மகிழ்வோடு தள்ளி மண்ணும் இடுவர்".

தோட்டி :— "எதைநீ கூறினும் கூறுக ; எனினும்
பைத்திய மேனநீ பகர்தற் கோவ்வா:
தெருவழி செல்லும் ஒருவனைப் போலவே
எண்ணுதற் கேனக்குள எண்ணும் சுதந்திரம்
எனக்குமுண்டாமேன உனக்கும் உணர்த்துவன்
இணக்கமாயச் சொல்லும் கணக்கிலா வீதிவாய்
குப்பையுஞ் சேத்தையும் குப்பல் குப்பலா
குவிந்தே கிடந்திடும்: தவிப்பரிம் மனிதர்
ஒப்பிநாம் இங்கே இப்படி இல்லையேல்—
அதனு லன்றே இதனினும் உயரிய
தோழிலே இலையேன பழியிலா உண்மை
கழறுவன் யார்க்கும்......கடவுளும் ஆதியில்
சேவ்விய தோற்றமே விரிவாக் கோண்டு
ஒவ்வோரு மனிதனும் எவ்விதம் உயரினும்
எந்தன் தொழிலைச் சொந்தமாய்க் கோண்டே
விரிந்தவிவ் வுலகினைப் பரிந்தே சுத்தமா
விளங்கச் செய்பவும் களங்கமே நிறைந்த
உளமெனும் பேரிய உலகினைத் தூயதாக்
கோளவும் மனிதனைக் கண்டனர்"—

தோட்டியின் மனைவி :— "என்னநீர்
பார்ப்பான் என்பான் போலுரை செய்கிறீர்?

தோட்டி :— ஆம்,ஆம், இதிலோர் அதிசயம் போலும் !
'யாம்எது செய்திட விரும்பினும், பார்ப்பனன்
எவ்விதம் எண்ணுவான் எவ்விதஞ் செய்வான்
அவ்விதம் யாமும் அந்தமாய்ச் செய்ய
முந்துவம்: பூசை முடித்துப் பூண்பன
பூண்டு, புறத்தவ ரிடத்தே 'யாமே

எத்துணைச் செல்வ மிருப்பினும் தன் உழைப்பால் அதை அபிவிர்த்தி செய்துகொண்டு, அந்த உழைப்புக் கஷ்டத்துடன் உண்பவனே சன்மார்க்கனுவன். உழைக்கிறவனிடம் துன்மார்க்கர்கள் நெருங்கார்,

பார்ப்பனர்' என்றே பலகால் கழறுவம்:
பார்ப்பான் குடித்தே பதங்கெட் டழிந்தால்
பார்ப்பான் செய்கிறன் பாதக மில்லை ;
அவன் செய்போது நமக்கென வென்றே
அவனையே பெரிதா அவனியில் எண்ணி,
நினைவிலும் வாழ்விலும்-நித்திரைப் போதிலும்
அவனைநாங் கொள்வதால் அதிசய மாமோ?
அவனே நாமெனில் அதனல் மோசமோ?

தோட்டியின் மனைவி :—"தத்துவம் ஏனைய மெத்தவும் பார்ப்பான்
பாதையில் நீர்செலப் பார்ப்பனே எவனும்?"

தோட்டி :— "நம்வழி செல்வதும் இலையே அவனும்!
அவன்வழி செல்வதும் இலையே யாமும்—
இருவழி யாலும் கட்டமே—"

தோட்டியின் மனைவி :— "ஆம்!ஆம்!
இத்தனைப் பார்ப்பனர் எத்தனை காலமாய்
நம்மை எள்ளி நாயென நடத்துறர்
சும்மா இருக்கவோ துணியலை நெஞ்சம்."

தோட்டி :— "ஏதிக் கிதுசொல்? என்னநீ செய்வாய்?
அவரைச் சொல்லி ஆவ தென்ன?
பண்டவர் செய்த பாழுஞ் சூழ்ச்சியால்
கண்டவர் நகைக்கக் கலங்கி அலைகிறோம்
அறியாத் தனத்தால் வறியவோர் நிலையால்
நின்றுநாம் தவிக்கிறோம்: இன்றுநாம் உதறிடில்
என்னும் இவர்நிலை இளிப்பரிந் நரியரும்
ஏதோ இன்று இறுமாந் துள்ளார்!
நமக்கவர் அடிமையும் நாமவர்க் கடிமையும்
தெரியும் ஒருநாள்: அறிகுவம் அன்றே—
ஏதோ, ஈது ஈசன் அருளெனப்
பணிசெய் திருப்பம்: பறந்திடுங் காலம்
பணியும் நமக்கும் புரிந்திடும் நன்மை."

(மௌனம்.)

மூ. துரைப் பிள்ளை

சட்ட சபைத் தேர்தலில் இருவருக்குள்ளும் கக்ஷிப் போர் உண்டானல் அவர்களே தலையுடைத்துக் கொள்ளவிட்டு ஜனங்கள் வேடிக்கை பார்ப்பதே சரி. இந்த இருவரும் தாம் பெருமைப்படுவதற்காகவே இவ்வளவும் செல விட்டுப் பொது ஜன நன்மையை மேலெடுத்துப் போட்டுக்கொண்டு பாசாங்கு செய்கிறார்கள். காங்கிரஸின் பெயரால் பெரிய மனிதரானவர்களும் பலர்,

கணவனுக்கு இடக் கை சுருங்குதல்.

தன் கணவனுக்குத் தாராளமாய் வைக்கச் சில பெண்களுக்கு மனம் வருவதே யில்லை. "என் இப்படிக் கை சுருங்கிப் போகிறாய்?" என்று கணவன் கேட்பினோ, "நானா வைப்பதில்லை. நீங்களல்லவா 'போதும், போதும்' என்று சொல்லுகிறீர்கள்; எவ்வளவோ வைக்கிறேன்; அவ்வளவையும் விழுங்கிவிட்டு 'வைக்கவில்லை, வைக்கவில்லை' என்கிறீர்களே" என்று சொல்லித் தலையில் அடித்துக் கொண்டு சண்டைக்கு எழும்புகிறார்கள். இப்படியும் சில பாவையர் இருக்கிறார்கள். இந்தச் சரசாங்கிகள் மற்றவர்களுக்குத் தாராளமாய் இலைநிறைய வைத்து உபசரிக்கிறார்கள். தன் கணவனுக்கென்றால் கை வருகிறதே யில்லை. சட்டி நிறைய வறுத்திருக்க, கூட்டம் எவருமில்லாதிருக்கும்போதுகூட, தன் கணவனின் இலையில் இரண்டே இரண்டைப் போடுகிறார்கள். சட்டி நிறைய ஆக்கியதைப் பார்த்த கணவன் "என்ன இரண்டு தானா!" என்றால், எரிச்சலுடன் உள்ளே போய் நாலைந்தை எடுத்துவந்து இலையில் வீசி எறிந்து வெடுவெடு என்று பட்டு முகத்தைச் சிடுமூஞ்சித்தனமாக்கிக் கொள்ளுகிறார்கள். "இந்தச் சரசாங்கியின் வார்த்தைகளைக் கேட்பதைவிட, அதைப் புசிக்காமலே போய்விடுவது மேல்" என்று எழுந்துவிடுகிறார்கள். ஒருசமயம் அவ்வளவையும் தின்றுவிட்டாலோ, "அவ்வளவையும் விழுங்கி விட்டானே" என்கிறார்கள். "மறுவேளைக்கு ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டாலோ, "காலையில் அவ்வளவு வைத்தேனே" என்று கையைக் காட்டுகிறார்கள். பிறர் இரக்கப்பட்டு வாங்கிவந்து ஏதோ கொடுத்தால்கூட அதைக் கணவனுக்குத் தாராளமாய் வைக்க மனம் வருகிறதேயில்லை. இரண்டொன்றை வைத்துவிட்டு அவ்வளவுடன் கையைச் சுருக்கிக்கொள்ளுகிறார்கள். 'இன்னும் மறுபடி வைக்கமாட்டாளா' என்று கணவன் எதிர்பார்க்கிறான். அந்தப்பதிவிரதை வைப்பதேயில்லை. பிறகோ வாய்திறந்து கேட்கிறான். அதற்கு அவளோ, "மற்றவர்களுக்கு வேண்டாமா; அவர்கள் வருவார்கள், இவர்கள் வருவார்கள்; அவர்களுக்கு வைக்கவேண்டாமா?" என்று கடுகடுத்துப் பேச ஆரம்பிப்பான். அதற்குப் பிறகுங்கூட இலையில் ஏதாவது போடுவாளோ, அல்லது போடாமலே இருந்துவிடுவாளோ என்னவோ!

இவ்வளவுக்கும் அந்தக் கணவன் உழைத்துச் சம்பாதித்து உண்பவனே தவிர, மனைவியின் சோற்றுக்கேனும்

வாழ்வில் முன்னேற்றமே கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டும். ஆசிரியர்கள் பெற்றோர்களைவிடக் குழந்தைகளின் உணர்ச்சிகளையும் அபிப்பிராயங்களையும் நன்கு அறிய முடியும். ஆசிரியர்களிடமே பால்யம் கழிகின்றது.

வீணே உட்கார்ந்துண்ணும் தண்டச் சோற்றுக்கேனும் காத்துக்கொண்டிருப்பவனில்லை. தன் உழைப்பிலேயே தன் பணத்திலேயே புசித்து வாழுகிற மானிக்குங்கூட அவன் உப்பையே தின்று வாழுகிற அந்தப் பத்தினிகள் இப்படிக் கையைச் சுருக்கிக்கொள்ளுகிறார்கள். பொங்கல் சாதம் சமைத்த வீட்டில் கணவனுக்கு மனைவி கொஞ்சமே வைக்க, பல முறை கேட்டும் அவள் இன்னும் கொஞ்சங் கொஞ்சமே போட, இவன் பசியும் அடங்காமல், திரும்பிக் கேட்கவும் மனமின்றிப் பாதிவயிறுடன் எழுந்துவிடுகிறான். சமைத்த அந்தச் சாதம் மறுநாள்வரையில் கிடந்து பாசிப்போகிறது. ஒரு விசேஷத்தின் போது, வடைகள் சுட, கணவன் கேட்க, அதற்கு மனைவி "மற்றவர்களுக்கெல்லாம் வேண்டாமா" என, "என்னைவிடவா மற்றவர்கள் முக்கியம்" என்று கணவன் ஆத்திரத்துடன் கேட்க, ஒரு பெரிய கலகமாகிறது. வீட்டுக்குள்ளே விருந்துகள் தடபுடலாய் நடக்க, வீட்டுக்காரி தன் கணவனை கிழவனைத் தெருத்திண்ணையில் தகரக் குவளையுடன் பசியால் வாடிக் கிடக்கவிட்டிருந்த கண்றாவியையும் பார்த்திருக்கிறோம். எல்லாம் அந்தக் கிழவன் அரும்பாடுபட்டுத் தேடிய சொத்து தான்.

இவ்விதம் சரசாங்கிகள் மற்றவர்களுக்குத் தாராளமாக வைத்து உபசரித்தும், எதிர்வீடு பக்கத்து வீடுகளுக்குத் தட்டுத்தட்டுகளாகப் பக்ஷணங்களையும் மற்றவைகளையும் தூக்கிக் கொடுத்தும், அதில் ஒரு கௌரவம் வந்துவிட்டதுபோல் நினைத்துக்கொள்கிறார்கள். ஆனால், தங்களைத் தாலிகட்டிய கணவனுக்கு இடும் போதோ கை சுருங்கிப்போகிறது. இதை வெளியிற் சொன்னாலும் நம்பார்கள். இதை எழுதுகிற நாமே நம்ப முடியாது. ஆனால், இவ்விதம் நடப்பதென்னவோ பலகாலும் சில இடங்களில் நேரிற் கண்ட உண்மை. கொண்ட கணவன் வயிறு எரிந்த கொடுமை வீண் போகாது. வீண் போகாதென்று நாம் சொன்னாலுங் கூட, கடவுள் இந்தப் பத்தினிகளுக்குத்தான் எல்லாம் கொடுத்து ஆசீர்வதிக்கிறார். இது ஒரு விநோதக் கூத்துதான்! கொண்ட கணவனுக்கு அன்புடன் இட்டுத் தின்னாத சொத்தும்செல்வமும் இருந்தென்ன லாபம்?

"விதி, விதி" என்று வெதும்பிச் சாகும் மனிதனுக்கு 'விடுதலை' என்பது அர்த்தமாகாது. பக்கத்து வீட்டாளை இகழ்ந்து அயலானைப் புகழ்பவன் விடுதலை பெறான். அகவிலையின் கிராக்கியைப் போற்றும் மிராஸ்தார்களும் விடுதலை பெறார். பெண்ணைக் காமக்களஞ்சியமாகவே மதித்து விடுபவர்க்கும் விடுதலை அரிது. தன்னைநாடிய பெண்ணையும் மறுத்து, அவள் கற்பைக் காத்து, உதவியும் புரிகிற வீரனுக்கே விடுதலையுண்டு.

"நான் மறக்கவில்லை. மறந்துவிட்டவர்களை வீணே நினைத்து ஆசையூறுவதில் என்ன லாபமென்றே ஒதுங்கியதன்றி மறந்ததில்லை. அவர்களிடம் ஆசை வைத்துப் பெற்ற ஏமாற்றம் அத்தனை சுலபமாய் மறக்கத்தக்கதோ ?

இறைவனை எண்ணித் தொழுதல்.

என் இறைவா! உமது சித்தத்திற்கு நான் என்சிரம் தாழ்த்துகின்றேன். உமது சங்கல்ப ரகசியத்தைத் தெரிவதற்கு நான் அருகனல்லன். என் இருதயத்தில் உதிக்கும் எண்ணங்களை அறியவல்ல பெருமானே! அநியாயச் செய்கைகளினின்றும் என்னைக் காத்தருள்வீர். எனது எல்லாக் கஷ்ட காலங்களிலும் உம்மிடமே என் முழு நம்பிக்கையையும் வைத்துள்ளேன். ஒவ்வொரு கஷ்டத்தின்போதும் உம்மிடமே நான் ஆறுதல் தேடுகின்றேன். இதுவரை யடைந்த துன்பங்கள் போதாதா? இன்னமும் உமது சோதனை தாங்கத் திறனில்லேன். ஸர்வ ஞானமுள்ள கிருபாஸாகரமே! சகிக்கொணாத இச்சோதனை இன்னும் எத்தனை நாள்? உமது ஆக்ஞைக்கு நான் வணங்குகின்றேன். என் ஹிருதயமோ முன்னேற முயன்று முயன்று சோர்வடைந்து போயிற்று. விதிவசமோ நினையாத பல மாறுதல்களைச் செய்துவிட்டது. நண்பர்கள் வாக்குத் தவறினர். உள்ளதைச் சுற்றிக்கொண்டு போகவும், வஞ்சிக்கவும், ஏமாற்றவுமே பலர் இருக்கின்றனர். சத்தியவந்தனுயுள்ள ஒரு பந்துவையோ, நண்பனையோ, அறிமுகத்தையோ காண்கிலேன்! ஆயினும், என் இறைவா! நான் உம்மையே நம்பியிருக்கின்றேன். ஸர்வ பராக்கிரமமுள்ள உமது ஆதரணையிலேயே நான் ஜீவித்துவருகின்றேன். எனக்கு இடையூறு புரிபவர்களை வேருடன் சாய்ப்பதற்கு என் தலைக்குமேல் உமது சக்தியின் நிழல் எந்நேரமும் இருந்து வருகிறதென்ற தைரியமே இவ்வுலக ஜீவியத்தில் எனக்கு ஒரு துணிவைக் கொடுத்து, எதையும் சகித்துக் கொள்ளவல்ல பொறுமையையும் இதுவரையில் தந்திருக்கின்றது. ஜகத் ரக்ஷகா! நீரோ பரம கருணாநிதி. நீரே எனது இரட்சகர். நீரே எனக்கு இவ்வுலகில் ஸகலமும். உமது நாமத்தைப் பக்தி பூர்வமாய்த் தியானிக்கின்றேன். ஓம் தத்ஸத்.

தேவை! தேவை! தேவை!

ஒரு புது விளம்பரம்.

நன்ருக உலக நாடகத்தில் புண்பட்டுள்ளவர்கள் தாங்கள் நித்தியமும் கண்டும், பட்டும், நொந்தும், வெந்தும், உருகியும், தவித்தும், சோர்ந்தும், ஏமாறியுமுள்ள ஸம்பவங்களை ஒன்றும்விடாமல் தங்கள் தினசரியில் (Diary) எழுதி வந்திருப்பின், அவைகளிலுள்ளவற்றைப் பெயர் இடம் விவரங்களை நீக்கிப் பிரசுரிக்க ஒப்பி அந்த டயரியை நமக்கு அனுப்புவதானால், அதில் ஆங்காங்குள்ள அநுபவ மணிகளைத் திரட்டி "அமிர்த குணபோதினி"யில் பிரசுரிக்கச் சித்தமாயிருக்கிறோம். டைரியில் தான் அநுபவங்கள் அதிகம் அடங்கியிருக்கும். இன்னின்ன குறிப்புகள் வெளியிடக் கூடாதெனில், அதற்கும் அன்புடன் சம்மதித்து அவ்விதமே செய்யப்படும். பிரியமுள்ளோர் பத்திராசிரியருக்குப் பதிலுக்கு ஸ்டாம்புடன்எழுதிக்கொள்க.

பழமொழிக் குறிப்புகள்

2—அற்ப குணம்.

(முன்பக்கம் 20-லிருந்து.)

181. “விரல் நுழைக்க இடம் கொடுத்தால் தலையை நுழைப்பான்.”

அற்பர்களுடைய தன்மையை இது காட்டுகிறது. ‘அவர்கள் மிகவும் தெரிந்தவர்களாயிற்றே, பக்ஷமுடையவர்கள்போல் பேசுகிறார்களே’ என்று சற்று இடங்கொடுத்தால் வீட்டிற்குள்—சமையற்கட்டுவரைக்கும் தாராளமாய் நடைபோடத் தொடங்கிவிடுவார்கள். வீட்டிற்குள்ளேயும் குந்திக் கொள்வார்கள். வாடகைக்கு இருந்துவிடுவதாய்ச் சொல்வார்கள். வாடகையும் சரியாய்த் தரார்கள். வீட்டிலுள்ள பெண்கள்மீது மோப்பமும் பிடிப்பார்கள். அல்லது, குடித்தனத்தை இங்கும் அங்கும் கோள் கூறி இரு பிளவாய்ப் பிரியச்செய்து விடுவார்கள். சும்மா நமது பாட்டில் நாம் இருக்கையிலேயே ஒரு கலகத்தைத் தொடங்குவார்கள். ‘ஏனப்பா இவர்களை வீட்டிற்குள் வரவிட்டோம்’ என்று துக்கிக்கும்படியாகிவிடும். இந்தக் கர்ம சண்டாளர்களும் நன்றாக வாழ்வதுபோலத்தான் வெளிக்குக் காட்டிக்கொள்வார்கள். கடவுள் இல்லையா, தர்மம் இல்லையா, நீதியில்லையா, இவர்களின் படுபாதகச் செயல்கள் வீணாய்ப் போகுமா? அதற்கென்று ஒருகாலம் வரும்; அப்பொழுது ஸர்வநாசமாய்ப் போவார்கள். அதுவரைக்கும் இப்படுபாவிகள் துள்ளி நிற்கலாம். தங்களை எதிர்க்கக்கூடியவர்களுண்டாவென்று திமிர்பிடித்தும் திரியலாம். எவ்வளவு திமிரிருந்தாலும் காலத்தின் கோலத்தை இவர்கள் எதிர்க்க முடியுமோ? அடங்கும் காலம் வந்ததும் அடங்கிவிடுவார்கள். இத்தகையோரிடத்தில் நாம் ஆரம்பத்திலேயே அதிக விழிப்பாக இருந்துவிட்டோமானால், நமது வீட்டு வாசல் ஏறாதபடி செய்துவிட்டோமானால், அவர்களும்—‘அவன் ஜாக்கிரதையாய் இருக்கிறான்’ என்று கண்டுகொண்டு ஒதுங்கிக்கொள்வார்கள். ஏமாறாத இடத்தில் அற்பர்களுடைய ஜெபம் செல்லாது.

“விரல் நுழைக்க இடம் கொடுத்தால் தலையை நுழைப்பான்” என்பதை முக்கியமாகப் பெண்மணிகள் தங்கள் கற்புநெஞ்சில் ஆழமாய்ப் பதியவைத்துக் கொள்ளவேண்டும். எந்தப் பந்துவானாலும், எவ்வளவு சொந்த உறவினனானாலும் சரி, அப்படியே அன்னியரிடமும் சரி, அதிகப் பேச்சுகள், உறவு வார்த்தைகள் வைத்துக்கொள்ளவே கூடாது. அதிக சிரிப்புகள், அதிக பரிஹாசங்கள்

முகவுரை எப்போது எழுதுவது? நூலை எழுதி முடித்தபின்னரோ, அல்லது அந்த நூல் அச்சிட்டு ஆனபின்னரோ முகவுரை வரைதல் வழக்கம்.

இவைகளும் ஆகா. இந்த வகையில் பிறருக்கு விரல் நுழைக்க இடம் கொடுத்தால், அவர்களோ மெது வாய்க் கற்புமலரை நசுக்கிவிடுவார்கள். எந்தப் பெண் அதிகப் பழக்கமாக இருக்கிறாளோ, தாராளமாகப் பேசுகிறாளோ அவளை மென்று தின்று வெந்நீர் குடித்துவிடவே பல புருஷர்களுக்கும் எண்ணம். வெளிச்சுமட்டில் வெகு யோக்கியமாய்க் காட்டுவார்கள், வெகு உறவாக நிற்பார்கள். மற்றவர்களுக்கு ஒரு பங்கு கொடுத்தால் நமக்கு இரண்டு பங்கு தருவார்கள். இதில்நாம் மயங்கிவிடக்கூடாது. 'நம்மீது அவர்களுக்கு அதிகப் பிரியம்' என்று எண்ணிவிடுதல் கூடாது. அந்தப் பிரியம் என்பது நமது கற்பை விழுங்குவதற்குச் செய்கிற தந்திர நடிப்புகளே. நம்மீது நமது தந்தை, தமயன், தம்பி இவர்கள் வைத்திருக்கிற பிரியத்தைப்போலல்ல அது. இந்தத் தமயன்—தம்பி—தந்தை பிரியம் நமது உயிர்மேல் உண்டான பிரியம்; ஆத்மாவை ஆத்மா விரும்புகிற பிரியம்; அது தங்கக்கட்டியான பிரியம். அந்தப் பிரியத்தைப் போல் மற்றவர்கள் காட்ட முடியாது. அந்தப் பிரியம் போலத்தான் இது என்று ஏமாறிப் போய்த் தங்கள் கற்பை இழத்தல் கூடாது. விரல் நுழைக்க இடம் கொடுத்தால் தலையை நுழைத்து விடக்கூடிய அழகும் சிவப்புமுள்ள மனிதர்கள் மகா கம்பீர புருஷர்கள் போலவும், அரிச்சந்திரர்கள்போலவும் —ஏகபத்னிவிரதர்கள் போலவும் நளுக்குச் செய்கிறவர்கள் உலகில் நிறைந்திருக்கின்றார்கள். எந்த நிமிஷமும் பெண்களின் கற்புக்கு ஆபத்து இருக்கிறது. 'தங்கை' என்றும், 'தமக்கை' என்றும், 'அண்ணன்' 'தம்பி' என்றும் உறவு பிடித்துக் கொண்டு கற்பழித்துவிட்ட சண்டாளர்களைப் பலர் நேரிலேயே பார்த்திருக்கலாம். இன்றைக்கும் அவர்கள் உயிரோடிருக்கலாம். கற்பழிந்த பெண்ணின் சங்கதியை அந்தப் படுபாவிகளே தங்களுக்கு ஒரு பெருமையாக வெளியில் சொல்லிக்கொண்டு அதைப் பரவச்செய்துமிருக்கிறார்கள். இந்த நீசர்களே பிறகு கற்பழிந்த பெண்ணைக் கண்டபடி தூற்றி "விபசாரி, வெட்கங்கெட்ட மூளி" என்று பலர் அறிய அந்தரத்தில் இழுத்துமிருக்கிறார்கள். இவ்வளவும் செய்துவிட்டு ஆண்டவனே! இந்த அக்கிரமஸ்தர்கள் நாளைக்கும் யோக்கியர்கள்போல் வாழுகிறார்களே! நாலு பேருக்கு முன் தாங்களும் ஒரு மனுஷ்யர்களாய்ச் சபைத் தாம்பூலமும் பெற்றுக்கொள்கிறார்களே! இது தான் ஆச்சரியம்!! ஆகவே, பெண்மணிகாள்! எவருக்கும் விரல் நுழைய இடம் தாராதீர்கள். உங்களிடம் நெருங்கிப் பேசச் சந்தர்ப்பம் கொடுக்காதீர்கள். உலகில் உத்தமர்கள் பலர் இருக்கலாம். அவர்கள் பரமசாதுவாகவும், தர்மநெறி தவறாதவர்களாகவும் இருக்கலாம். அவர்களைவிட அதிக வேஷம் போடக்கூடியவர்களாக இந்தப் புருஷ சண்டாளர்கள் இருப்பதால், நல்லவர்—தீயவர் என்பதை இலகுவில் கண்டுபிடிக்க முடிவதேயில்லை. கற்பழிந்த பிறகுதான் அதைத் தெரிந்துகொள்ள முடிகிறது! இப்படி அழிந்து, கெட்டு ஸர்வநாசமாகித் தெரிவதைவிட, முதலிலேயே ஜாக்கிரதையாய் இருந்து கொள்வதும், அதிக நம்பிக்கை வைக்காது தூர ஒதுங்கி நிற்பதும், தனித்த இடத்தில் பேசாதொழிவதும் எவ்வளவோ மேன்மையாயும், தப்பித்துக் கொள்ள நல்ல வழியாயுமிருக்கும்.

ஃ

பெண் ஜன்மம் புண் ஜன்மம் என்று பிரஸவவேதனை சொல்லுகிறது.

விரல் என்பது இந்தப் பெரிய சரீரத்தில் எவ்வளவோ சிறிய அங்கம். அந்தச் சிறியது நுழைய இடங் கொடுத்தாலுங்கூடத் தங்களின் பெரிய தலையை நுழைக்க வழி தேடி விடுவார்களென்றால், அதற்கு நாம் எவ்வளவுக்குப் பயந்து தூரவிலகி நடுங்கவேண்டியதா யிருக்கும்?

ஃ

இன்னும் ஏழைப் பெண்மணிகளுக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். இந்த ஏழைகள் வயிற்றின் கொடுமையால் பல இடங்களில் வேலைக்காரிகளாகி வீட்டு வேலைகளைச் செய்கின்றார்கள். இவர்கள் குடும்ப ஸ்திரீகளானதாலும், 'நோய்நொடி' பிடிக்காதவர்களானதாலும், தாசிகளில் லம்புகுந்து அங்கு மேகரோகங்களைப் பெற்று வைத்தியரிடம் சென்று துன் பப்படுவதைவிட, ரோகங்கள் எதுவும் இல்லாத இந்தக் குலஸ்திரீகளிடமே தங்களின் ஆவலைத் தீர்த்துக்கொண்டால் அதுவெளிக்கும் தெரியாது; தங்களுக்கு ரோகமும் வராது; அவர்கள் தங்களின் அட்டூழியத்தால் கர்ப்பமானாலும், தங்களின் கணவர்களுக்கு ஆனதாக உலகம் சொல்லிக்கொள்ளும் என்று இப்படி வெகு சூழ்ச்சிகளும் தந்திரங்களும் செய்து வீட்டில் வேலை செய்யும் பெண்களைக் கற்பழித்துத் தங்களின் கையாளாக்கிவிடுகிறார்கள். படிப்பு வாசனை இல்லாத அவர்களும் ஏமாறிவிடுகின்றார்கள். கற்பழிக்கு முன்பு பிரமாதமாய் ஆதரிப்பதாகப் பேசிவிட்டுக் கற்பழித்த பின்பு கால் ரூபாயோ எட்டணாவோ தந்து பிறகு எல்லாம் தருவதாகச் சொல்லுவார்கள். "நானே இனி உனக்குச் சொந்தம் தானே'' என்று பசப்புவார்கள். அந்தப் பேதைப் பெண்களும் "இந்தச் சிறுபணத்துக்குத்தானா இப்படிக் கெடுத்தாய்'' என்று முகம் கோணுவார்கள். இன்னும் சில பெண்கள் "இவ்விதம் பணம் தந்ததை வீட்டில் சொல்லவேண்டாம்'' என்பார்கள்; "உங்கள் மனைவிக்கு இந்தப் பணச் சங்கதி தெரியக்கூடாது'' என்பார்கள். இந்தச் சண்டாளத்தனங்களை இன்னும் விவரிக்க இஷ்டமில்லை. ஆதலின், பிறர் வீட்டில் வேலை செய்யும் பெண்கள் அவ்வீட்டுப் பெண்களையே சுற்றிக்கொண்டிருக்க வேண்டுமேயன்றி, அவ்வீட்டு ஆடவர்களிடம் ஜாக்கிரதையாகவே நடந்துகொள்ளவேண்டும். மோசம்போய் விடுதல் கூடாது. தங்களின் மனைவியரையும் பெண்களையும் பிறர் வீடுகட்கு வேலைசெய்ய அனுப்புவோரும் இந்த எச்சரிக்கையைப் பெறக்கடவர். இதில் சிறிது ஏமாறி விரல் நுழைக்க இடம் தந்தாலோ உடனே பெண்களின் கற்பு ஸர்வ நாசம் தான்!

ஃ

இன்னும், அண்ணன் தம்பிகள் வகையில் அவரவர்களின் பத்தினிகளும் தங்கள் மானத்தைக் காத்துக் கொள்வதில் ஜாக்கிரதை பெறவேண்டும். தன் கணவனின் தம்பி யென்றும், தமயனென்றும் எண்ணி அதிகம் இடம் தருதல் கூடாது. விரல் நுழைக்க இடம் தந்தால் இங்கும் கூடக் கற்புமோசங்கள் நேரலாம். "காமம் பெற்ற மகளென்றும்பாராது, செத்த பிணமென்றும் பாராது'' என்பது பழமொழி. இவையெல்லாம் அற்பர்களுடைய காரியங்கள். அற்பத்தனம் எந்தப் பழிபாவத்துக்கும் தைரியமாய்த் துணிந்துவிடும். அற்பத்தன்மை உள்ளுக்கு மறைந்திருக்கையில் வெளிக்கு அதைக் கண்டு பிடிப்பது எப்படி? ஆகவே, நல்லவரோ, பொல்லாதவரோ—எவரிடமும் அதிக ஜாக்கிரதை வேண்டும்.

(தொடரும்.)

தம்பிக்கு அக்காவின் ஆசி.

என்னருந் தம்பி ! என்னருந் தம்பி !
பொன்னினுஞ் சிறந்த புரைதீர் குணத்தாய் !

மன்னிய விந்த மாண்புறு வருடம்
நுன்னரு வளமெலாந் தோன்றத் தருக !

எல்லாம் வல்ல இறையவ னருளால்
நல்லாய் ! நீதான் நலமுற வாழி !

கல்வி செல்வம் கதிக்க வாழி !
பல்வளம் பெருக பாரினில் வாழி !

குணமெலாம் படைத்த கொண்டால் வாழி !
தனமிகு சுற்றங் கதிக்க வாழி !

தினமிகு ஞானஞ் சிறக்க வாழி !
மணமிகு தாமரை வதன வாழி !

அருடரு புதிய வருட மூமக்கே !
திருவொடு மேன்மை திகழத் தருக !

ஆயுளும் செல்வமும் அணிதிட தேகமும்
தூயநன் மக்களும் சோர்விலா தோங்குக !

மிக்கநற் பதவியும் மேன்மேல் வாழ்வும்
இக்குநன் மொழியாய் இன்புறப் பெறுக !

மாதொரு பாகன் வளாருள் தன்னால்
தீதிலா வாழ்வு சிறக்கப் பெறுக !

கண்ண னனையாய் ! கவின்பெற வாழி !
வண்ண முருகன்போல வளம்பெற வாழி !

சிந்தை சிறந்த சீரிய வாழி !
நந்தா வனத்து நாவல வாழி !

முந்தார் மனைவி மொய்ம்புசேர் மக்கள்
பிந்தார் வன்பிற் பிறங்குறை ஞயார்

எந்த நாளும் இனிது
வந்தே சூழ வாழி ! வாழியே !

இவன் அவர்கள் வீட்டிற்கு வந்தபொழுது தந்திரமாகக் கை கடிக்காமல் நடந்துகொண்டிருந்தால், அவர்கள் இவன் வீட்டுக்கு வரும்பொழுதும் இவனும் தந்திரமாய்ப் பட்டும் படாமலும் நடந்துகொள்வான்.

கற்புகெடுக்கும் ஆடவரின் தொகையே மிகுதி. கற்பு காத்து உதவும் ஆடவர் பதினாயிரத்தில் ஒருவரோ, கோடிக்கு ஒருவரோ என்பது சந்தேகமாம்.



இன்று கூடிய நமது கடையில் இளைத்த பெருமாள் பிள்ளை "மலிவு கலியாண"த்தைப்பற்றி வெகு வேடிக்கையாகப் பேசினார். "நமது தெருவில் ஒரு மனிதன் இருக்கிறான். அவன் எது வாங்க வேண்டுமென்றாலும் மலிவானதும் உபயோகமற்றதுமான சாமான்களையே வாங்குவான். அழுகிப்போன வாழைப்பழமே அவனுக்கு அதிக பிரியம். ஏனென்றால், அது நயமாய்க் கிடைக்குமல்லவா? எந்தக் கடையில் சாமான் நயமாய்க் கிடைக்குமோ வென்று ஊர் முழுதும் சுற்றுவான். ஒரு அரையணா அதிகமாய்க் கொடுத்தாலும் நல்ல சாமான்களை வாங்க வேண்டுமென்ற எண்ணமே அவனுக்குக் கிடையாது.

ஃ

அவனுக்கு ஒரே பெண். அவளுக்குக் கல்யாணம் செய்ய வேண்டியிருந்தது. பெரிய இடத்தில் அந்தப் பெண்ணுக்கு மாப்பிள்ளை கிடைத்தார். ஆகையால், சுயமாகவே மலிவான வஸ்துக்களைத் தேடுகிற வழக்கமிருந்தும், கலியாணப் பத்திரிகையாவது படாடோபமாகப் போட்டுவிடுவோம் என்று எண்ணி எந்த அச்சாபீசில் நன்றாய் அச்சு போடுவார்களென்று ஒரு சிநேகிதரைக் கேட்டான். அவர் ஒரு பெரிய அச்சாபீஸைக் காண்பித்து, அங்கு போனால் செவ்வையாக அச்சடித்துக் கொடுப்பார்கள் என்றார். உடனே பெரிய அச்சாபீஸுக்குள் சென்று இந்த ஆபீஸ் மானேஜர் யார் என்று வெகு முறுக்காய்க் கேட்டான்.

"உள்ளே யிருக்கிறார், செல்லுங்கள்" என்று ஒரு குமாஸ்தா காண்பித்தார்.

"தாங்கள் தான் மானேஜரா?"

"ஆம் ஐயா, தயவு செய்து உட்காருங்கள். நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?"

"200-கல்யாணப் பத்திரிகை அச்சடிக்க உங்களுடைய குறைந்த சார்ஜ் எவ்வளவு?"

"உட்காருங்கள். கலியாணப் பத்திரிகை அநேகவித மாதிரிகள் நாங்கள் போட்டிருக்கிறோம். அவைகளைத் தாங்கள் பார்த்து, தங்களுக்கு வேண்டியதைத் தேர்ந்தெடுத்தால் அதன் விலையைத் தெரியப்படுத்துகிறோம்."

"இந்த ராமாயணமெல்லாம் நான் கேட்க இங்கு வரவில்லை. உங்கள் சார்ஜ் என்னவென்று கேட்டேன். அதற்குமட்டும் சுருக்கமாய் பதில் சொல்லும்."

"என்னை மன்னிக்க வேண்டும். தங்களுக்குப் போடவேண்டிய பத்

பெரிய மனிதர்கள் என்போருடைய கையொப்ப ஜாப்தாவினால் ஒருவர் கொண்டாடப்படினும், பொதுஜனங்கள் அந்த ஒருவரது சுயநல தந்திரங்களை அறியாமலில்லை.

திரிகையின் மாதிரி இன்னதென்று தெரியாமல் எப்படி நாங்கள் சார்ஜ் சொல்வது ?"

" நல்லது, இதோ இருக்கிறதே இந்த மாதிரிப் பத்திரிகை போட வேண்டும்."

" சந்தோஷம். இது மூன்று கலர் வேலை. மஞ்சள் காகிதம் உபயோகிக்க வேண்டும். 200-பத்திரிகை அச்சடிக்க ரூ. 5-8-0-ஆகும்."

" அப்பாடா! 5-8-0 ரூபாயா ? குறைக்க முடியாதா ?"

" நான் கணக்கு போட்டே சொல்லியிருக்கிறேன். குறைக்க முடியாததைப்பற்றி விசனிக்கிறேன்."

" என்ன ஐயா, அடுத்த தெருவு அச்சாபீஸில் காகிதம் நான் வாங்கிக் கொடுத்தால் 2-8-0-ரூபாய்க்கு அச்சடித்துக் கொடுப்பதாகச் சொன்னார்களே. இங்கே இன்னும் குறைவாயிருக்குமென்று நினைத்தல்லவோ வந்தேன்."

" என்னை மன்னிக்க வேண்டும்; எங்கள் சார்ஜ் 5-8-0 ரூபாய் தான்."

" சரி, இரண்டு ரூபாய் வைத்துக் கொள்ளுங்கள்."

" ஐயா என்னை மன்னிக்க வேண்டும்; இது மீன் கடையல்ல."

ஃ

ஓ! அப்படியா என்று வெகு கோபமாய்ப் போனான். அநேக அச்சாபீஸ்கள் சுற்றித் திரிந்தான். கடைசியில் ஒரு அச்சாபீஸில் 3-8-0-ரூபாய்க்கு இரண்டு கலரில் போடப் பேசி முடித்தான். ஃ

கலியாணத்திற்கு இன்னும் நாலு நாள் தான் இருந்தது. புரூப் கூட அச்சாபீஸில் தரவில்லை. பலதடவை அலைந்தான். கலியாணத்திற்கு இரண்டு நாள் முன்பு பத்திரிகை அச்சிட்டுக் கொடுத்தார்கள். அந்தப் பத்திரிகையின் அழகை என்னவென்று சொல்வது? மஞ்சள் கடிதாசி மக்கிப் போய் தோல் நிறமாய் இருந்தது. சிவப்பு இங்கி செம்மண் நிறமாய் மாறிற்று. பச்சை இங்கிக் கருப்பாய்ப் போயிற்று. போதாக் குறைக்கு மாப்பிள்ளையின் வெங்கடசாமி என்ற பெயரை எங்கடா சாம் என்று தப்பாய் அச்சடித்து விட்டார்கள். கலியாண தேதி 6-ம்தேதியாயிருக்க, அச்சில் 6-என்பது 9-ஆகத் தலை கீழ் மாறிவிட்டது. பிள்ளை வீட்டார் கோபம் கொண்டார்கள். அநேகருக்குக் கல்யாணம் நடந்த பின்பு பத்திரிகை சேர்ந்தது. பலர் 9-ம் தேதி தான் வந்து சேர்ந்தார்கள். நல்ல பதவியிலுள்ளவர்கள் பத்திரிகையை வாசிக்காமலே கீழே எறிந்தார்கள். எல்லா சாமான்களையும் மலிவு பார்த்தே வாங்கியிருந்ததால் கலியாணம் சிறப்பாகவே இல்லை. இன்னொரு கலியாணத்தில் கட்டியிருந்த வாழை மரத்தையே தன் வீட்டுக் கலியாணத்தில் கொண்டு வந்து கட்டி விட்டதால் வாடிப்போன அதைப் பார்த்துச் சிரித்தார்கள். கிழியாத எச்சிலை அகப்படவில்லை போலும்! பாவம்!!

எந்தக் காரியம் செய்தபோதிலும், எது வாங்கினபோதிலும், மலிவு என்று எண்ணி உபயோகமற்றதை ஒருபோதும் வாங்கவே கூடாது. ஒரு ரூபாய்க்கு 5-படி விற்கும் அரிசியை வாங்கி வயிறுநிறைய சாப்

யார் ஒதுங்கினாலும் நடக்கவேண்டிய வேலை நிற்காது. ஐயர் வரவில்லை யென்று அமாவாசை நிற்குமா? சிப்பு எடுத்து ஒளித்ததாலேயே கல்யாணம் நின்றுவிடுமா? எழுதிய கடிதத்தைக் கிழித்தாலும் எழுதிய நினைவு போகுமா?

பிட்டு வியாதியை வரவழைத்துக் கொள்வதைக் காட்டிலும், ரூபாய்க்கு 3½-படி விற்கும் நல்ல அரிசியை வாங்கி அறைவயிறு சாப்பிடுவதே உசிதம்'' என்று சொல்லி முடித்தார். மவிவுக்கதையை கேட்டு யாவரும் உருண்டுருண்டு சிரித்தனர்.

ஃ

உழைத்துத் தேடு

பவனின் ஸம்பாதனை யெல்லாம் சுற்றியுள்ள கழுகுகளுக்குச் செலவாகிறதே யன்றி, அவன் தன் வாய்க்கு ருசியாக ஒன்றை வாங்கி யுண்ண முடிகிறதில்லை. பிறர் எவராவது அவனுக்கு இட்டால் ஐயோ பாவம்! வெகு அருமையாக அதைப் ''புசிக்கிறான். உழைத்துத் தேடியும் தனக்குப் பயனில்லை. இப்படி வாயைக் கட்டியும் வயிற்றைக் காயப்போட்டும் அவனுக்கு ஒரு நற்பெயருண்டோ? வினைப் பவருண்டோ?

பேராசைக் கண்ணியார் அதன் பின் எழுந்தார். நான் பேசப்போவது வேறு சங்கதி. என் தாயாரின் விவாகத்தை நான் பார்க்கவில்லை. அதை எப்படியாவது மற்றொரு முறையேனும் கண்டு கண்குளிர அவா. நமது தாயாருக்குத் தலைசீவிவிட்டு, ரத்தின பில்லை வைத்து ஜடை போட்டு, முகத்திற்கு நல்ல பொட்டு இட்டு, நல்ல காசிச்சேலை கட்டி, நமது தந்தையை ஓர் அழகுள்ள மணாளனாய் வாலிபராய் மாற்றி நமது தாயின் பக்கத்தில் உட்கார வைத்து, இருவருக்கும் சஷ்டி பூர்த்தி கல்யாணத்தை நடத்திப் பூச்செண்டுகளாட வைத்து நலுங்கிட்டு, ஊஞ்சலில் வைத்து ஆட்டிப் பார்க்கவேண்டுமென்று ஆசை கொள்வது மக்களுக்கு எவ்வளவு இன்பமான பூரிப்பு'' என்றார். ''அவ்வளவுக்கு அவர்கள் நீண்ட காலவாழ்வு வாழுமாறு எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்திக்கக் கடவோம்'' என்றார். இத்துடன் நமது கடை முடிவுற்றது.

''பஹதூர்''

பொன்வண்டு செட்டியார்.

மகாத்மாவின் சிறைவாஸம்.

உலகம் போற்றும் காந்தியடிகள் மேமீ 4-ம் தேதி இரவு ஒரு மணிக்கு கராடியில் தமது கட்டிலில் அயர்ந்து தூங்கும் சமயத்தில் கைது செய்யப்பட்டு ஏரவாடா சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். கவர்ன்மெண்டார் இஷ்டப்படுகிறவரையில் அவர் சிறையில் இருக்கவேண்டுமென்று சர்க்கார் ஆக்ஞை. யாவும் பகவத் ஸங்கல்பம்.

குணபூஷணம் இல்லாவிட்டால் பொன்பூஷணம் சோபிக்குமா?



ஹாஸ்ய சஞ்சீவினி



விஜயன் :—" பெண்ணைக் கொண்டு பேயானேன்? வந்தவள் எமகாதகியாயிருக்கிறாள். அதைவிட இருமடங்கு அவள் தாய் வீடு. ஓயாத கலகம்!"

சீநிவாசன் :—" விடுகதையில் விடுவிப்புப் பொருள்கள் எவ்வாறு மறைந்திருக்கின்றனவோ, அப்படியே பெண்ணை வாங்குகிற—கொடுக்கிற இடங்களின் சங்கதியும் முதலில் மறைந்திருக்கிறது. பிறகு தெரிகிறது எல்லாம்!"

வேலன் :—" பத்து ரூபா நோட்டுக்குச் சில்லரை யிருக்கா? அதிக அவசரம்."

நீலன் :—" வேண்டிய சில்லரை யிருக்கிறது. ஆனால், கடன் தர முடியாது. 'கோர்ட்டுக்குப் போய் வாங்குகிற வழியில் வாங்கிக்கொள்' என்பவர்களே பெருத்துவிட்டதால் கண்டிப்பாகக் கடன் தர முடியாது."

வேலன் :—ஒரு ஐந்து ரூபா கடன் கேட்பதற்கல்லவா வந்தேன். முதலிலேயே வெட்டிப் பேசிவிட்டாயே."

புருஷன் :—" ஆபீஸுக்கு நேரமாய்விட்டதடி! கொண்டுவா உடுப்புகளை, கொண்டு வா காலர்."

மனைவி :—" நீங்கள் இவ்வளவு அவசரமாய் உடுப்புகளை மாட்டிக் கொண்டு, கழுத்தி லணியும் காலரை வெகு பரபரப்பாய்க் கட்டுவதைப் பார்த்தால் கழுத்தில் சுருக்குப் போட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொள்ளப் போவதைப்போல் இருக்கிறதே!"

மீனாக்ஷி :—" பெருத்த லேவாதேவி பாங்கிகளைப் போல் பணம் குவியும் இடங்கள் எது தெரியுமா?"

காமாக்ஷி :—" ஆஹா! தெரியும். நாடகம், சினிமா, காபி ஹோட்டல், குதிரைப் பந்தயம், மதுபானக் கடைகள், கேட்லாக் கம்பெனிகள்!"

ஹோட்டல் ஐயர் :—" ஓய்! வெளியே சும்மா போகிறீரே? நீர் புசித்ததற்குப் பில் (Bill) எங்கே?"

ஊருக்குப் புதியவர் :—"நான் காபி பருகும் வழக்கமில்லை. ஏராளமான ஜனங்கள் உள்ளே போகவும் வரவுமிருக்கிறார்களே; ஏதோ 'கோயிலுக்குள் உத்ஸவம் நடக்கிறதோ' என நினைத்து, 'ஸ்வாமியைத் தரிசித்துச் செல்லலாம்' என உள்ளே நுழைந்தேன். ஒரு சாமிக்குப் பதிலாக நூறு எச்சில் சாமிகளைக் கண்குளிரப் பார்த்துவிட்டுப் போகிறேன்!"

N. C. G. சீனிவாச வரதாச்சாரி.

II

ராதா :—" கடையில் சாமான்கள் வாங்கிவர ஜாபிதா கொடுத்துவிட்டீர்கள். பீங்கான் தட்டுகள் எவ்வளவு கொண்டுவந்திருக்கிறீர்கள்?"

" எந்த ஸ்திரீயைத் தாங்கள் உயர்வாகக் கொள்ளுகின்றீர்கள்?" என்று ஒரு பெண் நெப்போலியன் சக்கரவர்த்தியைக் கேட்டாள். அதற்கு அவர் " வெறும் பேச்சுப் பேசும் வம்புக்காரி புத்திசாலியாயிருப்பினும், எனக்குப் பிடிக்காது. எவள் அதிகமாகக் குழந்தைகளைப் பெற்றிருக்கிறாளோ அவளை நான் வணங்குவேன்" என்றாராம்.

சு. அ. சிவநாடார்.

சாரதா :—" பீங்கான் தட்டா? எதற்காக?"

நாரதா :—" நீங்கள் ஜாப்தாவில் வாழையிலை போடவில்லையே. சாப்பிடப் பீங்கான் தட்டுகள் கொண்டு வந்திருக்கிறீர்களோ வென்று கேட்டேன்."

தகப்பனார் :—" ரயில் அதற்குள் போய்விட்டதே அடடா!"

குமாரன் :—" திரும்பி இந்த மூட்டையை நான் வீட்டிற்குத் தூக்கிக் கொண்டு போகவேணுமே! அடடா!"

தாயார் :—" ரயில் தவறிவிட்டதா? நல்லதாச்சு. வீட்டில் இன்னொரு மூட்டையை மறந்து வைத்து விட்டேன். அதையும் எடுத்துக் கொண்டு வந்துவிடலாம்."

சீனு :—" என்ன அப்பா! இந்தத் தடவை உங்களிடம் வந்தபோது கொஞ்சம்கூடக் கவனிக்கவில்லையே! விலகித் தூரப்போய் ஜாடையாய் இருந்துவிட்டாயே? எங்கள் மீது என்ன கோபம் அப்படி?"

வேணு :—" விலகுதலும், தூரப் போய்விடுதலும், ஜாடையாய் ஒதுங்குதலும், அன்னிய மனுஷர்கள்போல் கண்டும் காணுமலிருந்துவிடுவதும் எல்லாம் உங்களைப் பார்த்துக் கற்றுக் கொண்டதுதான். நான் வேறு பள்ளிக்கூடத்தில் கற்கவில்லை ஐயனே!"

நாணு :—" என்ன ஸ்வாமிகளே! கொண்டுபோன புஸ்தகத்தை அனுப்பும்படி கடிதம் கண்டித்து எழுதியும் தரக் காணேமே? உன்ளுக்கு எப்பம்விடும் சங்கதியா? மாதத்திற்கு மேலாயிற்றே. எத்தனை இடங்களில் இப்படி வியாபாரமோ?"

கோபு :—" தாங்கள் அதை மறந்து விட்டீர்களென்றல்லவா நினைத்தேன். கொண்டுபோகும்போதே எனக்கு அது "இனும்" தான் என்று எண்ணினேன். இன்னும் ஞாபகம் வைத்திருக்கிறீர்களே அடடா!!"

நாணு :—" தங்களுக்குப் பிறரிடம் கடன் பாக்கியைத் திருப்பிக் கேட்க ஞாபகம் இருப்பதுபோல, எனக்கும் இரவல் கொடுத்து ஏமாறிய புஸ்தகத்திற்கு ஞாபகம் இருக்கிறது. விழுங்கிவிட வேண்டாம் ஸ்வாமிகளே!"

வைத்தியர் :—" என்ன காகிதத்துடன் மருந்தையும் சேர்த்து மெல்லுகிறீரே?"

நோயாளி :—" அப்படியே வாயில் போட்டுக்கொள் என்றீர்கள். பொட்டணத்தை அப்படியே போட்டுக் கொண்டேன். அதற்குள்ளிருந்தது கசந்ததால் துப்பிவிட்டுக் காகிதத்தை மட்டும் மெல்லுகிறேன்."

கணவன் :—" எப்படியடி நான் தாசி நீலா வீட்டுக்குப்போனதை யறிந்தாய்? வீட்டிலிருந்தபடியே ஊர் சங்கதிகளைச் சொல்லுகிருயே?"

மனைவி :—" அவள் வீட்டில் அழுக்கு எடுக்கப்போன நமது வண்ணாத்தி, 'நமது வீட்டின் குறியுள்ள வேஷ்டியும் ஜரிகை அங்கவஸ்திரமும் நீலா வீட்டில் அழுக்குத் துணியாய்ப் போட்டார்களே; அங்கு எப்படி வந்தது?' என்று என்னிடம் கேட்டாள். இவ்வளவு சாக்ஷியம் போதுமா?"

வரதன் :—" என்னடா ஏங்கி நிற்கிருய். ஒருமாதிரியாய்க் காணப்படுகிருயே? வியாதியா?"

ராகவன் :—அவளும் இசைந்தாள், நானும் ஒப்பினேன். 'அது ஆனபிறகு' இப்போது பெண் பாவமாயிற்றே என ஏங்குகிறேன்.

பிளாஸிடஸ்

(ஞான ஜோதி கண்ட பெரியார்.)

ரோமன் நகரம் (City of Rome) எல்லாத் தேசங்களையும் தன் கீழ்ப்படுத்தி, பூமி தேவிக்கு ஒரு திலகம்போல் விளங்கி வந்தபொழுது, ஓர்கால் டிரோஜன் (Trojan) சக்ரவர்த்தி அரசு புரிவதானான். இவனுடைய சேனைகளுக்கு பிளாஸிடஸ் (Placidus) எனும் வீரன் தலைவனா யிருந்தான். இச் சேனாதிபதி மிக்க நல்லவன்; ஒரு சுத்தவீரன். ரோமன் நாட்டுக் குடி ஜனங்களிற் சிலர் கிறிஸ்தவ மதத்தை அநுசரித்தார்களேனும், இவனும் இவன் மனைவியும் பூதர்களாகவே (Heathens) இருந்தனர்.

ஃ

பிளாஸிடஸ் வேட்டையாடுவதில் மிகுந்த தேர்ச்சியுடையவன். ஒரு நாள் அநேகம் பெயர்களுடன் மான் வேட்டையாடுவதற்காக வனத்திற்குச் சென்றான். அங்கு அழகிய ஆண் மான் ஒன்று எதிர்ப்பட்டது. அது அதிகம் பருத்தும் பலமுள்ளதாயும் காணப்பட்டது. பிளாஸிடஸ் அதைப் பார்த்த கொஞ்சநேரத்திற்குள் அதைத் தொடர்ந்து புதர்களிடையே சென்று மறைந்துவிட்டான். இதற்குமுன் இதைப்போன்ற ஒரு மானை அவன் கண்டதில்லை. மானோ இவனது கைக்கு அகப்படாமல் இவனை வெகுதூரம் இழுத்துச் சென்றது. கடைசியாக இந்த அரிய மிருகம் ஒரு சிறிய கற்குன்றின்மீது பாய்ந்துத் திரும்பித் தன் அழகிய கண்களால் இவனை எறிட்டுப் பார்த்தது.

ஃ

பிளாஸிடஸ் தன் குதிரையை நிறுத்தி இம்மான் தன் இருப்பிடத்திற்கு எவ்விதம் செல்லுமென்பதை அறிய விரும்பினவனாய் அதனை உற்று நோக்கினான். இவ்விதம் பார்த்திருந்த பொழுது ஒரு அற்புதமான காட்சியைக் கண்டான். அதாவது:— அந்த மானின் தலைமீது ஒரு சிலுவை (Cross) தோன்றிற்று. பின் அது கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிரகாசத்தை யேற்றுக் கடைசியில் அதிக பளபளப்பை யடைந்து, களங்கமற்ற ஆகாயத்திலுள்ள சூரியனைப்போல் ஒரு ஜோதிமயமான உருவுடனும் விளங்கிற்று. பிளாஸிடஸ் இதைப் பார்க்க முடியாதவனாய் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துக் குதிரையினின்றுங் கீழே விழுந்தான். சற்று நேரத்தில் மூர்ச்சை தெளிந்து எழுந்து, முழங்காலிட்டுப் பணிந்து, நடுக்கங் கொண்ட குரலுடன், "தெய்வமே! உன் விருப்பம் யாதென்றும், நான் என்ன செய்யவேண்டுமென்றும், உன்னிடம் நான் நம்பிக்கை கொள்ளுமாறு சொல்லவேண்டும்" என்று கேட்டான். ஃ

இவர்கள்தான் தங்கள் வீட்டு விஷயங்களை அவர்களிடம் போய்ச்சொல்லி ஒப்பாரி வைக்கிறார்களே யன்றி, அவர்கள் தங்கள் சங்கதிகளைக் கடுகளவும் இவர்களிடம் வெளியிடுவதில்லை, வெளியிட்டுக் கேவலப்படுவதுமில்லை.

சிலுவையின் மீதிருந்த உருவம் பின் வருமாறு சொல்லிற்று :—

"பிளாஸிடஸ்! நான்தான் கிறிஸ்து (Christ). ஆகாயத்தையும் பூமியையும் படைத்தவன் நானே. சூரியன் உதயமாவதும் அஸ்தமன மாவதும் என் ஆக்கினையால்தான். நானே நாட்களையும், காலங்களையும், வருஷங்களையும் உண்டாக்கினேன். மண்ணிலிருந்தும் மனிதர்களை உற்பத்தி செய்வன என் கைகளே. இம் மனித ஜன்மங்கள் நற்கதியை அடையச்செய்வதற்காகவே நான் இந்த அவ்தாரத்தைக் கொண்டேன். என்னை மரத்தில் கட்டி ஆணிகளை அறைந்தார்கள் (Crucified). பின் என் சரீரத்தைப் புதைத்தார்கள். இதற்கு மூன்றாம்நாள் மறுபடியும் இப் பூமியில் தோன்றினேன்" என்பதேயாம். ஃ

பிளாஸிடஸ் மிகப் பயந்தவனாய்த் தான் இதுவரையும் இகழ்ந்துவந்த கிறிஸ்துவிடத்தில் மிக்க நம்பிக்கையும் பக்தியும் உண்டாயிருப்பதாகக் கூற, அதற்கு அவ்வுருவம் "நகருக்குச் சென்று ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்தவனாவாயாக" என்றது. ஃ

தன் மனைவியின்பாலும் குழந்தைகளிடத்தும் அன்பு அதிகம் கொண்ட பிளாஸிடஸ் அவர்களுக்கும் இக்கடவுளிடத்துப் பக்தி யுண்டாகுமாறு, தான் வனத்தில் கண்டனவற்றை அவர்களுக்குச்சொல்ல, கிறிஸ்துவின் உத்தரவைக் கேட்டான். அவ்வுருவம் அவனை அவ்விதமே செய்யும்படி அநுமதித்தது மன்றி, ஞானஸ்நானமானபின் இன்னுமொருமுறை அம் மலைக்கு வரும்படிக்கும் கட்டளையிட்டது. பிளாஸிடஸ் மிகச் சந்தோஷித்தவனாய் வீட்டிற்குத் திரும்பிவந்தான். அங்குத் தன் மனைவி அவள் கண்ட ஒரு ஸ்வப்பனத்தில் கிறிஸ்துவமதத்திற்குத் திருப்பப்பட்டாளென்பதை அறிந்தான். ஆகவே, இவன் தன் மனைவியுடனும், இரு குழந்தைகளுடனும் ரோம் நகரத்திற்குச் சென்றான். குரு மனமகிழ்ந்தவராய் இவர்களுக்கு ஞானஸ்நானம் செய்வித்து, வழக்கப்படி இனிமேல் இவர்கள் புனைந்துகொள்ள கிறிஸ்தவர்களுக்குரித்தான புதிய பெயர்களை இட்டார். பிளாஸிடஸ், யூஸ்டேஸியஸ் (Eustacius) எனும் நாமத்தையும், அவன் மனைவி தியாஸ்பீடா (Theosbyta) என்ற பெயரையும், அவன் இரு புத்திரர்கள், தியாஸ்பீடஸ் (Theosbytus), அகபீடஸ் (Agapetus) என்ற பெயர்களையும் பெற்றார்கள். (மற்றவை மற்றநில்.)

> அநுபவ மென்பது அவரவருக்குச் சொந்தமான சொத்து. அதைக் குறிப்பிடலாம், ஆனால், ஊட்ட முடியாது. சொல்லலாம்; காட்ட முடியாது. அநுபவத்தைக் கண்டு கொள்வதற்குக் கஷ்டத்திற்கு அஞ்சாத தன்மை வேண்டும். "ஸம்சாரம் துக்கம்" என்று கேட்டிருந்தும், தன் அநுபவத்தில் அதைக் காண மனமுடிக்கிறான். பிறகு உண்மையை அறிகிறான். இவ்விதம் துணிந்தவனுக்கே அநுபவம் கிடைக்கும், அநுபவி ஒரு பக்குவவி.

பிரபஞ்ச நவீனங்கள்



1. சென்னையில் மத்தியானம் 12-மணி அடிக்கையில் மற்றத் தேசங்களில் என்ன மணி?

	ம. நி.
பாரீஸில்-முற்பகல்	6-38
ஆதென்-முற்பகல்	9-39
பெர்லீன்-முற்பகல்	7-33
பம்பாய்-முற்பகல்	11-31
கல்கத்தா-பிற்பகல்	12-33
எருசலேம்-முற்பகல்	8-14
லண்டன்-முற்பகல்	6-29
மேல்போரன்-பிற்பகல்	4-19
ரோமாபுரி-முற்பகல்	7-19

2. வேஷ்டியில் படுகிற மசிக்கறையில் சிறிது பாலை விட்டால் அது நீங்குமாம்.

3. வியாபார விருத்திக்குப் பத்திரிகைகளில் விளம்பரம் முக்கியமென்பதை 18-ம் நூற்றாண்டில்தான் அறிந்தனராம். பத்திரிகையில் முதல் விளம்பரம் இங்கிலாந்தில் 1642-ம் ஆண்டில் வெளியிடப்பட்டதாம்.

4. வாத்துகள் சீன தேசத்தில்தான் மிகுதியாம். உப்பிட்ட வாத்து மாமிசம் எங்கும் விற்பதுடன் ஏற்றுமதியும் செய்கிறார்களாம். வாத்து முட்டை சீனர்களுக்கு ஒரு முக்கிய உணவாம்.

5. அமெரிக்காவில்தான் பயாஸ்கோப் படங்களின் தயாரிப்பு அதிகமாம். 5000-மைல் நீளத்திற்கு ஒரு வருஷத்தில் படங்களைத் தயார் செய்கிறார்களாம். இதில் பாதியை இங்கிலாந்து வாங்குகிறதாம்.

6. ஐர்லாந்து தேசத்தில் இறந்தவர்களின் கல்லறையில் பேய் பிசாசுகள் நெருங்காதிருக்க ஒரு மாதம் வரை வாத்தியங்கள் வாசிப்பார்களாம்.

7. ருஷியாவில் ஒரு நற்சாக்ஷிப் பத்திரத்துடன் வைத்துப் புதைப்பார்களாம். அந்த நற்சாக்ஷி ஸ்வர்க்க வாசலில் தர உதவுமாம். ஆஸ்திரேலியாவில் இறந்தவர்களுக்கு நகங்களை வெட்டிப் புதைப்பராம். நகங்களிருந்தால் பூமியைத் தோண்டிக்கொண்டு பிசாசுகளாக வெளியே வந்துவிட நேருமாம். கிரீன்லாண்டில் மறு உலகத்துக்கு வழி தெரிவிப்பதற்காக ஒரு நாயுடன் சேர்த்துப் புதைப்பராம். அராபிக்கதையில் இறந்தவன் மனைவியுடன் புருஷனையும் வைத்துப் புதைப்பதாக எழுதப்பட்டுள்ளது. திபேத்து தேசத்தில் இறந்தவர்களை வெட்டி நதியில் எறிந்து மீன்கள் உண்ணும்படி செய்வார்களாம். பார்ஸிகள் இறந்தவர்களைக் கோபுரத்தில் வைத்துக் கழுகுகள் கொத்தித் தின்னவிடுவர்.

8. ஒரு மனிதனுக்குக் கெட்ட காலம்—சூழ்வினை அவன் நினையாவாறு ஒரு கணப்பொழுதில் நேர்ந்துவிடுகின்றது. பிரான்சுதேசத்தின் முக்கிய நகரமான பாரீஸ் நகரத்தில் ஒருநாள் ரீசர்ட் என்பவன் பில்லியர்ட் என்னும் செண்டாட்டம் ஆடிக்கொண்டிருந்தான். மேஜையின்மேல் எலுமிச்சம் பழத்தைப்போலுள்ள தந்தகோளியை நீண்ட கழிகளின் நுனியால் தொடுவது இந்த ஆட்டத்தின் லக்ஷணம்.

அதிகமாகக் கபடம் உள்ளவர்கள் அதிகமான வறுமை கொள்வதன்றி, சீக்கிரம் தங்களின் வேலையையும் இழந்துவிடுகிறார்கள்.

ரிசர்ட் கழியின் முனையால் கோளியைப் பலமாய்க் குத்தித்தள்ளவே, அது மேஜையிலிருந்து தெறித்து ஜன்னலின்வழியே போய் அண்டை வீட்டு ஜன்னலின் கண்ணாடிகளையுடைத்து அதற்குள்ளிருந்த மேஜையின்மேல் வைத்துள்ள ஒரு கண்ணாடித் தட்டில்பட்டு அதையும் உடைத்துவிட்டது. உடைந்துபோன சப்தத்தைக்கேட்டு ஒரு பூனை எழுந்து பயத்துடன் ஓடினதால் அங்கே எரிந்துகொண்டிருந்த ஒரு தீபஸ்தம்பம் விழுந்து தொங்கிக்கொண்டிருந்த திரைச்சீலையில் தீப்பற்றிக்கொண்டது. அந்நெருப்பை யணைக்க ஸர்க்காரார் வரவேண்டியதாயிற்று. அந்த வீட்டில் ரோகத்தோடு படுத்திருந்த ஒரு கிழவி இந்தச் சந்தடியை ஸகிக்க முடியாமல் உயிரை விட்டாள். இவளுக்குப் பந்துவாயிருந்த ஒரு பெண் அவள் பக்கத்தி லுட்கார்ந்து உபசாரம் செய்துகொண்டிருந்தாள். மேற்கண்ட ரிசர்ட் என்பவனை இவள் கலியாணம் செய்துகொள்வதாய் வாக்களித்திருந்தாள். அவள், 'கிழவி இறந்ததற்கு அவன்தான் காரணன்' என்று அறிந்து 'அவனைக் கல்யாணம் செய்துகொள்வதில்லை' என்று திரஸ்கரித்துவிட்டாள். இப்பால், கிழவியின் தாயாதிகள் 'அவள் மரணத்துக்கு இவன்தான் காரணம்' என்று கேட்டு அவன்மேல் நஷ்ட வியாஜ்யம் கொண்டுவருவதாயினர். இந்த பில்லியர்ட் என்னும் ஒரு கோளியின் விளையாட்டுக் காரியத்தால் எத்தனை விபரீதங்கள் உண்டாயின பாருங்கள்.

அதிக மரியாதையுடன் நடப்போரைப் பரீக்ஷிக்க!

வெகுவான அடக்கமும் வணக்கமும் பயந்த தன்மையும் உணர்த்தி, நாம் உட்காரும்படி சொல்லியபின்பு உட்கார்ந்து, மிகத் தாழ்மையுடன் பேசி, நம்மை மஹா பெருமையில் உயர்த்திப் பரம சாது சிரோன்மணியாகத் தோன்றுவோரிடத்தில்தான் அதிகமாக மயங்கிப்போக நேரும். ஆயினும், அத்தகையோரைப் பரீக்ஷிக்க ஒரு சந்தர்ப்பமும் கிடைக்கும். அவர்கள் நம்மை வேண்டிக்கொண்ட ஒரு காரியத்தைப் பாதி வரை செய்து, பிறகு முடியாதென்று விட்டால், அவர்களின் சாதுத்தன்மை யொழிந்து தீதுத்தன்மையில் சீறித் தமது ஆத்திரம் காட்ட முற்பட்டுக் கொள்வர். அத்தருணத்தில் அவர்களின் குணங்களை முழுதும் அறிந்து அதுமுதல் விலகிக்கொண்டு ஒரு "நல்ல" பாம்பின் வலையிற் படாது தப்பினோமென்று சந்தோஷிக்கலாம். காரியம் முழுதுக்கும் மறுக்காமல், பாதி காரியத்தைச் செய்து மறுபாதி காரியத்துக்கு மறுத்தால் அப்போதுதான் இந்த "நல்ல" பாம்பு வெகு திவ்யமாகப் படமெடுத்தாடும். நாமும் அச்சமயம் குண பரீக்ஷை செய்து முற்றிலும் விலகிவிட வழி பிறக்கும்.



ஸ்ரீரங்கநாத ஸ்வாமி முத்தங்கி ஸேவை :—

ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் நல்லான் சக்ரவர்த்தி ஜி. ஸ்ரீநிவாச வரதாச்சாரியார் அவர்கள் இயற்றியது. விலை அணா 1.

ஸ்ரீரங்கநாதருக்கு வைகுந்த ஏகாதசியின்போது சாத்தும் "முத்தங்கி" என்னும் விலைமதிப்பேறப்பெற்ற அங்கியைக் குறித்த பூர்வ வரலாற்றினைச் சாரசங்கிரகமாக விளக்கியுள்ளது. முக்கியமான விவரங்கள் இதில் காணப்படுகின்றன. உயர்ந்த கடிதத்தில் அழகாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. 307, வடக்குச் சித்திரை வீதி, ஸ்ரீரங்கம் என்ற விலாஸத்திற்கு ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெறலாம்.

பால விவாகங்களைத் தடுக்கும் சட்டம் (சாரதா ஆக்ட்) :—

திருவள்ளூர் "அகில இந்தியா லா ஜர்னல்" பத்திராதிபர் ஸ்ரீமான் எம். எஸ். பார்த்தசாரதி ஐயங்காரவர்கள் இயற்றியது. விலை அணா 8.

இந்நூலில் புதிய சாரதா விவாகச் சட்டத்தின் சகல விவரங்களும் தெளிவாய் அடங்கியிருப்பது மாத்திரமன்று; அந்த சட்டத்தின் ஒவ்வொரு விதிகளுக்கும் தெளிவான விளக்கமும், ஆராய்ச்சிக் குறிப்புகளும், சில இடங்களில் விதிகள் சந்தேக மயக்காய் மூடுமந்திரமாய் இருப்பனவற்றின் விவரங்களும் விவகார நடப்பத்துடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வளவு தெளிவான நூல் வேறெதுவுமில்லை. சாரதா சட்டம் அநுஷ்டானத்திற்கு வந்துவிட்ட இந்நாளில் இந்நூல் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது அவசியமென்போம்.

கோபால ரத்னம் :—

"ஜகன்மோஹினி" பத்திராசிரியர் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் அவர்கள் இயற்றியது. விலை அணா 14.

இப்புஸ்தகத்தை வாசிக்கத் தொடங்கியபின் கீழே வைக்க மனம் வரவில்லை. அவ்வளவு அழகாய் ஸ்வாரஸ்யமாய் நம் கண்ணெதிரிலேயே நடப்பதுபோன்றும் அர்த்த புஷ்டியுடன் அநுபவமயமாய் வரைந்துள்ளார். தாய்தந்தையர்கள் நன்கு கற்ற அறிஞர்களான தம் மக்களை மிருகத்தினுங் கேடாகநடத்தி வசைமாரிகளை வாரித்தூற்றி அவர்களின் மனத்தைப் புண்ணாக்குவதைக் குறித்து இந்த நாவலில் காணப்படும் ஸம்பவங்களை நாம் உண்மையென்றே வற்புறுத்துவோம். என்னதான் தாம் பெற்ற குழந்தைகளாயினும், அவர்கள் இப்பொழுது பால்குடிக்கும் குழந்தைகளல்லவென்பதை மனதிற்கொண்டு, அவர்களிடம் ஒரு கௌரவத்தையும் மதிப்பையும் வைத்து நடத்திவர வேண்டியது பெற்றோர்களின் கடமை. வீணாகத்தமது குமாரர்களைத் தூற்றி அவர்கள் வெந்து சாகும்படி செய்வதில் இவர்கள் வாரிக்கொண்

தியாகம் என்பது சயநல வெறுப்பும், 'பொதுநல' விருப்புமே.

லும் லாபமென்னவோ? இந்தப் பாகத்தை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். மருகியர் படும் பாடும், வரதக்ஷிணையின் கொடுமையும், சாந்தி முகூர்த்தத்திற்குப் பணம் கேட்கும் நாசமாய்ப்போன வழக்கமும் இதில் அநுபவபூர்வமாய்க் காட்டப்பட்டுள்ளன. கோபாலன் வேலை கிடைக்கப் பெறுமல் படும் துயர் ஒரு கண்ராவி. பிராமணரல்லாதாரின் கிளர்ச்சியில் பிராமணர்களுக்கு வேலை கிடைக்கப் பெறுமல் அலையும் அவதிகளை வாசித்து மனமுருகி நின்றேம். கதா நாயகியான இரத்னம்பாள் ஒரு தங்க விக்கிரகம். அவ்வனிதாமணியின் பதிபக்தியும் பொறுமையும், புத்தி தீக்ஷண்யமும் இந்த நாவலை உயர்தரமுள்ளதாக்குகின்றது. பெண்மணிகள் படிக்கத்தகுந்த நூல். இதன் ஆசிரியர் பல நாவல்களின் பிரபல கிரந்தகர்த்தா ஆவர்.

குடும்பவிநோதக் கதைகள் :—

இது குடும்பங்கள் சீர்பெறப் பல ஆசிரியர்களும் ஒன்றுசேர்ந்து இயற்றிய மாபெரும் நூல். எண்ணற்ற படங்களும், எண்ணூறு பக்கங்களும், உயர்ந்த காலிகோ பைண்டுமுள்ள ஒப்பற்ற அநுபவஞானக் கடலாகும். இதனுள் கதைகள் மட்டும் அடங்கியதெனக் கூறவொண்ணுது. கதைகளும் புதுவிதமாய் வெகு ருசிகரமே. அதற்குமேல் அநுபவங்களும், புத்திபோதனைகளும் அபரிமிதமாகிப் பன்முறை வாசித்தறியவேண்டிய உலகஞானப் பொக்கிஷமாய் இது விளங்குகின்றது. இந்நூல் இல்லாதவீடு இருக்கவே கூடாது. இது ஒப்பற்ற ஒரு மாணிக்கமென்று சுருக்கமாய்ச் சொல்லிவிடுகிறேம். இந்நூலிலுள்ள எந்தக் கதையும் கட்டுக்கதைகளல்ல. ஒவ்வொரு கதையும் தினசரி அவ்வக்குடும்பங்களில் நடந்தேறும் சம்பவங்களேயாகும். வாசித்துப் பயன்பெறத் தகுந்த நூல்களில் இதுவுமொன்று. விலை ரூபா இரண்டுதான். அதிக நயமான விலை.

ஸ்ரீ வேங்கடேச பத்மாவதி பரிணயம் :—

ஸ்ரீமான் ஒய். ஸ்ரீநிவாசன் அவர்கள் இயற்றியது. விலை அணு 4.

திருவேங்கடத்தின் பூர்வ வரலாறும், அங்கு வீற்றுள்ள பரந்தாமனின் திருவிளையாடல்களும் பக்திபூர்வமாய் வெகு தெளிவாய் விளக்கி, சிறுவர் சிறுமியர்க்கும் பயன்படுமாறு பெரிய அக்ஷரங்களில் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. திருப்பதிக்குச் செல்லுவோர் முதலில் இந்நூலை வாசித்தறிந்து கொண்டால் பக்தியின் சுவையை நன்குணர்ந்து பருகி ஆநந்தபரிதர்களாகலாம். வாசகநடை பாலர் பாலிகளை மனதில் வைத்து வெகு சுலபமாய் வரையப்பட்டுள்ளது. இந்நூலை நாம் பாராட்டுகின்றேம்.

இமிடேஷன் பட்டுத்துண்டு :—

சென்னை வேப்பேரி நம்மாள்வார் செட்டித் தெருவு 24 நெ. உள்ள எஸ். எஸ். ராமாச்சாரி கம்பெனியாரிடமிருந்து இமிடேஷன் பட்டுத்துண்டு ஒன்று வரப்பெற்றேம். விலை ரூபா 3. அதை நாம் உபயோகித்துப் பார்த்ததில், துவைக்காமல் வைத்துக்கொள்ளும் பக்ஷத்தில் பட்டைப்போன்று பளபளப்புடன் நன்ருகவும் மதிப்பாகவும் இருக்குமென்று தெரிந்துகொண்டோம். 6-முழமுள்ள இத்துண்டு பார்வைக்கு மிக்க ரம்யமாக இருக்கின்றது.

[இவை யாவும் "அமிர்த குணபோதினி" ஆபீஸில் கிடைக்கும்.]

பத்திரிகை ஆராய்ச்சி.

கள்ளுக்கடைகளில் கறிக்கடைகள்.

ஒவ்வொரு கள்ளுக்கடைக்கு முன்னால் கறிக்கடைகளிருக்க வேண்டுமென்ற முறை சையாண்டுவந்து வெகு நாளாகிறது. இதுசமயம் இந்தக் கறிக்கடைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. அந்தக் கடைகளுக்கு லைசென்ஸ் கிடையாது. இதற்கு சுகாதார விதிப்படி சாக்குகளும், கறிகளும் விற்கப்படுகிறதா வென்ற கண்காணிப்பும் கிடையாது. இதில் செத்த கோழியையும், மீத்தையையும் எங்கிருந்தாவது பொருக்கி யெடுத்து வந்து மசாலை வர்க்கங்கள், மஞ்சள் வர்ணங்கள், மேலே கொஞ்சங் கொழுப்புகள் வாங்கிப் போட்டுவிட்டு அம்மாமார்களும், பல்லைக்காட்டி, குலுக்கி, மினுக்கி, ஒய்யாரமாய் உட்கார்ந்து ஊருக்குத் தக்கமாதிரியாய் பேசிப் பசப்பி அண்ணாத்தைமார்களிடம் விலையாக்கிக் கொண்டு வருகிறார்கள். இதில் சுகாதாரம் சிறிதும் கிடையாது. யார் கவனிப்பது?

கருணாகரன். (இ.மி.)

II

ஓடும் மோட்டார் வண்டியிலிருந்து கிளம்பும் தெருப்புழுதிகளெல்லாம் இப்பலகாரத்தின் மேல் தான்; எரிக்கும் வெயில்களெல்லாம் இப்பண்டத்தின் மேல்தான். குடித்துக் காறி உமிழும் எச்சில்களெல்லாம் இதன்மேல் தான். பறக்கும் ஈக்கள், கொசுக்கள், ஊர்ந்து செல்லும் எறும்புகள் நொய் என்று ரீங்காரம் செய்வது வெகு வேடிக்கை! விநோதன்.

(இந்திய மித்திரன்)

வருமான மில்லாத வக்கீல் :—

பிராங்போர்ட்டு வக்கீலான ஹெர் லிண் ஹீமர் என்பார் சுமார் ஒரு வருட காலமாகப் போனவிடம் தெரியாமல் மாயமாய் மறைந்திருந்தபோதிலும் சமீபத்தில் அவர் ரிவீரா ஹோட்டல் ஒன்றில் வேலைக்காரனாக அமர்ந்து அமைதியாகக் காலம் கழிப்பதை அவருடைய நண்பரொருவர் தற்செயலாய்ச் சந்தித்துத் தெரிந்து கொண்டார். ஹெர்லிண் ஹீமர் கெட்டிக்கார வக்கீலாயிருந்தும் சரியான சம்பாத்தியமின்றிச் சங்கடப்பட்டு அவ் வாழ்க்கையில் வெறுப்படைந்து புதிய தொழில் செய்யத் தீர்மானித்து, தம்மை யறியாதவர்களுக்கு மத்தியில் ஹோட்டல் வேலைக்காரனாயிருக்கவும் இணங்கியதாய்த் தெரிகிறது. ஹெர் ஹீமருக்கு வயது 39-தானாகின்றது.

சுதேச பரிபாலினி.

ஜீவஸத்துப் பொருள் :—

பிருகிருதியில் கிடைக்கும் ஆகார வஸ்துக்களை வெகுநேரம் வேக வைப்பதினாலாவது, அவற்றை உலர்த்துவதினாலாவது, ஊறுகாய் போடுவதினாலாவது, அழித்துவிட்டால், அவற்றிலுள்ள ஜீவஸத்துக்களை இழந்து நாம் வருந்த நேரும்.

ஜீவஸத்துப் பொருள்கள் அகப்படக்கூடிய இடம் மார்க்கெட்டில் ஒழிய மருந்து ஷாப்பில் இல்லை என்பதைக் கவனிக்கவேண்டும். பாலிலும், கொழுப்புகளிலும், மாமிசம், பழம், பச்சை மரக்கறிகள், முழுக் கோதுமை, சூரிய வெளிச்சம் இவைகளிலும் ஏதோ ஒரு ஜீவஸத்துப் பொருள் இருந்துகொண்டேயிருக்கிறது. பப்ளிக் ஹெல்த் இலாகா.

ஓரெழுத்துப் பதங்கள்.

1. அ—(முதலெழுத்து) அஃறிணைப் பன்மை யீறு.
2. ஆ—பசு, வியப்பு
3. இ—சுட்டு. (இக் கொற்றன், இது).
4. உ—சுட்டு. (உக் கொற்றன், உவன்)
5. ஊ—ஊன்.
6. எ—வினா (எவன், எக்கொற்றன்).
7. ஏ—ஈற்றசைச் சொல், எண்ணின் குறிப்பு. வினாக் குறிப்பு.
8. ஐ—அரசன், அழகு, ஆசான்.
9. ஓ—மயில்.
10. ஓ—அதிசயவிரக்கச் சொல்.
11. கா—காத்தல், சோலை
12. கீ—கிளிக்குரல்.
13. கு — நான்கனுருபு, பூமி.
14. கூ — கூவென்னேவல், பூமி.
15. கை—ஒப்பனை, ஒழுக்கம், கை, சிறுமை.
16. கோ—அம்பு, அரசன், பசு.
17. சா—சாதல்.
18. சீ—இகழ்ச்சிக் குறிப்பு, லக்ஷ்மி.
19. சே—இடபவிராசி, எருது, சிவப்பு.
20. சை—இகழ்ச்சி.
21. சோ—அரண்.
22. தா—தரும்படி கேட்டல், தாண்டுதல், பகை, வருத்தம், வலி.
23. தீ—அக்கினி, அங்காரகன், தித்திப்பு.
24. து—துவ்வென்னேவல்.
25. தூ—புள்ளிறகு, வெண்மை.
26. தே—கடவுள், கிருபை.
27. தை—ஓர் மாதம், தைத்தல், பூசநாள்.
28. நா—நடுநாக்கு.
29. நே—அன்பு.
30. நோ—துன்பம், நோய்.
31. நோ—நேர்தல், நோவென்னேவல்.
32. பா—கவி, செய்யுள்,
33. பூ—புட்பம், பூமி, பொலிவு.
34. பே—நுரை.
35. பை—அழகு, நிறம், பச்சை, பாம்பின் படம், பை.
36. போ—போவென்று சொல்லுதல்.
37. மா—அழகு, ஆண் குதிரை, லக்ஷ்மி, செல்வம், பெருமை, மாமரம்.
38. மீ—ஆகாயம், மேல், உயர்ச்சி.
39. மூ—மூப்பு
40. மை—அஞ்சனம், கறுப்பு, குற்றம், செம்மறியாடு, நீர், மலடு, மேகம்.
41. மோ—முன்னிலையசைச் சொல். (கேண்மோ)
42. யா—ஓர் மரம், சந்தேகம், யாவென்னும் வினா.
43. வீ—சாவு, நீக்கம், மறவை.
44. வே—வேவு.
45. வை—கூர்மை, வைக்கோல், வையென்னேவல்.

இல்லறம் கனிந்து இன்பம் மிகுந்து இசைமணம் ஓங்குக. கவலையொழிக. காருணீகனுருக. களிப்பு மிகுக. நல்ல காதல் செய்க. குற்றமொழிக. குணமே நாகர்க. செல்வ மக்கட்பேற்றுடன் வாழ்க.

க்ஷவரம் செய்வதைக்கூட நிறுத்திக் காசை மிச்சப்படுத்திச் செட்டாய்ச் செலவிடவேண்டிய தரித்திர சமயமும் ஒவ்வொரு வேளைகளில் வருகிறது.



பந்நா தேவி.

35-ம் பக்கத் தொடர்ச்சி.)

III

பந்நாதேவி பலகணியில் வைத்த கையை மீண்டும் எடுத்து, கவலை மிகுதியால் தலை கவிழ்ந்தவாறிருந்த தந்தைபாற் சென்று, "அன்புள்ள தந்தையே! அப்பலகணியருகிற் சற்றுத் தயைகூர்ந்து வருவீர்களா?" என்று மெதுவாய்க் கூறினள்.

ஃ

தந்தை எழுந்து அவ்வாறே பலகணியருகிற் செல்ல, அவருக்கு முன் சென்ற பந்நாதேவி, எதிரிலுள்ள மலையைக் காட்டி "என் அருமைத் தந்தையே! அரிகந்த்ராஜன் தங்களை அவமதித்ததுண்டோ?" என வினவினள்.

மன்சிங்கு :—"இல்லை, இல்லை".

பந்நா :—"அவர் நல்லவரோ?"

மன்சிங்கு :—"மகளே, அவன் என்னிடம் அதிக அன்புடையவன். எத்தனையோ முறை இங்கு வந்து விருந்துண்டவன். நானும் இவனை என் மகனென மதித்து மகிழ்ந்ததுமுண்டு. ஆயினும் சில நிலங்களைப் பற்றி எங்களிருவருக்கும் வழக்குண்டாகிக் கொஞ்சக் காலமாய்ப் பேச்சில்லை. அந்நிலங்களோ ஆதிமுதல் நம்முடையவையாதலால், விட மனமின்றி உன் அண்ணன்மார் வந்தவுடனே அவனோடு போர்புரிய எண்ணியுள்ளேன். நல்லது, நீ இப்போது இதைப்பற்றிப் பேசுவதேன்?"

பந்நாதேவி:—"தந்தையே! என் கைவளையைக் கழற்றி அரிகந்தராசனை உமேத்சிங்குக்கு அனுப்புகிறேன். அவர் அதனை அங்கீகரித்து நமக்காகும் உதவி செய்வார்."

என்று உரைத்தனள். தந்தை சினங்கொண்டு, "நீ சின்னஞ் சிறியவள்; உலகநடை அறியாதவள்.

பெண்ணுருவாகிய மாதாவினிடத்தில் வைத்த பற்றுதலினால், பகவானை மறந்துவிட்டதாக இதுவரையில் எவரும் சொல்லவில்லை. அந்தத் தாய்ப் பாசத்தை விட்டுவிடும்படி எந்த வேதசாஸ்திரமும் கூறவில்லை. அன்னையை 'முன்னறி தெய்வம்' என்று போற்றுகிறது.

என்னை அவமதித்து, எனக்கு எதிர் கூறி, என் பொருளைக் கவர்ந்தவனை, எனக்குக் கஷ்ட முண்டானபோது உதவிக்கு அழைப்பது அழகா? இவ் வீண் எண்ணத்தைவிடு. நான் வயது முதிர்ந்து நடைமெலிந்து ஆண்மை குன்றியவனேனும் க்ஷத்திரிய குடும் பத்தில் பழைய குடியைச் சேர்ந்தவன் என்பதை அறிவாய்'' என்றார். கோபத்தால் அவருக்குக் கண்கள் சிவந்தன. மீசை துடித்தது. பெரு மூச்சு வந்தது.

ஃ

பத்மாதேவியோ படித்த மேதாவி. எதையும் பகுத்தறிந்து நடக்கும் விவேகி. மனதிலுள்ளதை விளக்கிக் கூறிப் பிறரைத் தன்வசம் செய்யும் மதியூகி. அவள் மன்சிங்கை நோக்கி, "தந்தாய்! தங்கள் சிறுமி கூறுவ தைச் சற்றுக் கவனியுங்கள். அர சிளங்குமரிகள் தம் வளைகளை வேற்று மதஸ்தர்களான அன்னிய ருக்கு அனுப்பவும் கேட்டுள்ளோம். ஆகவே, என் கைவளையை உத்தம குலத்திற் பிறந்த அரசகுமாரனுக்கு அனுப்புவதால் ஆம் பிழையென்ன? சத்துருக்களை எவ்வாறேனும் எதிர்த் துப் பகைமுடித்து மானம் காத்துக் கொள்வது ராஜபுத்திருடைய தர்ம மாகும். தாங்கள் வைத்துள்ள மன வேற்றுமையை இன்றுடன் மறவுங் கள். அரிகந்தராஜன் நல்லவராதலால் நமக்கு உதவிசெய்யச் சிறிதும் பின் னிடார். மேலும், நமக்கு உதவி செய்வது அவருக்கும் நன்றாகும். இன்று நமது கோட்டை எதிரிகள் வசமாயின், நாளை அரவிந்தம் அவர்கள் வசமாகாதென அறையவல்லா ருண்டோ? அன்புள்ள தந்தையே! தாங்கள் என்பொருட்டேனும் கோபத்தை விடுங்கள். தயவுசெய்து என் இஷ்டத்தை நிறைவேற்றுங்கள்'' என்று மெதுவாகவும் இனிமையாக வும் எடுத்துக்கூற, மன்சிங்கின் மனம் கரைந்தது. அவர் வேறு சொல்லக் கூடவில்லை. பிறகு அவள் தன் கைவளையைக் கழற்றி உமேத்சிங் குக்கு ஓர் ஆள்வசம் அனுப்பினாள்.

IV

இவ்வளையோ தங்கத்தாலாகி நவமணிகள் பதித்தது. இதன் ஒளி யால் நள்ளிரவாயினும் பட்டப்பகல் போலத் தோன்றும். இதனைக் கொண்டுபோகிறவன் பன்னிரண்டு வயதுள்ள பையன். இவன் எடுத்த காரியத்தைப் பிடித்துச் சாதிக்கும் சமர்த்தன். இடையூறுகளை எட்டுணை யும் இலட்சியஞ் செய்யாத மனத்தன்.

ஃ

எதிரிகள் கோட்டை வாயிலைச் சூழ்ந்துள்ளாராதலால், அச்சிறுவனை இராம்சிங்கு கோட்டை மதிலேறி ஓர் கயிற்றைவிட்டு அக்கயிற்றின் வழி யாகக் கீழ் இறங்கினான். எதிரிகள் யாவரும் தூங்கிக்கொண்டிருந்தனர். காவலாளரும் கைத்துப்பாக்கிகளைக் கீழூன்றி உறங்கியவாறிருந்தார்கள். நள்ளிரவு. நிலவில்லை. நிர்ச்சப்தம். இராம்சிங்கு சந்தடி செய்யாமல் சற் றுத்தூரம் நடந்து அப்பால் மலை மானைப்போல் வழியிலுள்ள கற்களை யும் காறுகளையும் குன்றுகளையும் மலைகளையும் தாண்டிப்போனான்.

(மற்றவை மற்றதில்.)

ப. சி. கோவிந்தசாமி ராஜா.

வரிகொடாத ஏழையின் வீட்டுக் கதவைப்பிடுங்கும் வலிமை படைத்த முனிசிபாலிட்டி, ரயில்வே கம்பெனியார் ரஸ்தாவையடைத்து மேல்பாலம் போட்டால், அது, கூடாதென்று காகிதத் தீர்மானங்கள்மட்டும் செய்து மவுனமாகிறது. அந்தப் பாலத்தை இடிக்க அதற்கு சக்தி காணோம்! ஏனோ?

விவேகம் விநோதம் விசித்திரம் விகடம் | விகடப்ரதாபன் | அநுபவம் அற்புதம் ஆச்சரியம் ஆநந்தம்

REGISTERED TRADE MARK

எல்லாம் முதல் தடவை தான்!



ஆமாம் அப்பா எல்லாம் அந்த முதல் தடவை தான்! விகடன் நீள நெடுக நீட்டி நினைத்துப் பார்த்தேன். காசி ராமேஸ்வரம் வரையில் என் யோசனைகளை விட்டுப் பார்த்தேன். பிட்டும் பார்த்தேன். அலசியும் பார்த்தேன். பல சிக்குகளை நீக்கியும் தடவியும் பார்த்தேன். மறைக்கிற திரையைத் தூக்கியும் தொட்டும் பார்த்தேன். இந்த முதல் தடவைக்கே ஒரு முக்கிய மகத்துவம் இருக்கிறதென்று தோன்றுகிறது. அந்த முதல் தடவையில் தான் கனத்த மரியாதைகள் நடக்கின்றன! முதல் தடவை சந்திக்கிற சந்திப்பின் வந்திப்பின் நோத்து யோகம் எப்படியிருக்குமோ அதற்குத் தகுந்தது போலத்தான் பின்னால் ஒன்றுபடுவதும் பிரிவதும் எல்லாம் அடங்கியிருக்கின்றது! நீங்கள்தானு அவர் என்று தழுவிக்கொள்வதும் அந்த முதல் தடவை தான். கண்ணே! காதலா! என்று கட்டியணைப்பதும் அந்த முதல் தடவைதான்! "என்ன, என் ஆசைக்கு வருகிறாயா" என்று இந்த சுந்தரான் ஒரு துணிந்த நெஞ்சுடன் அந்தப் பங்கஜத்தை அழைத்து விடுவதும், அந்தப் பங்கஜமும் "உம்" என்று தலையசைப்பதும், அப்பால் இருவரும் ஆசையும் மோகமும் மிதமிஞ்சிப் போக இணங்கிக் கொள்வதும், அந்த இனிப்புக் கட்டிகளெல்லாம் அந்த முதல் தடவைதான். பிறகு இருக்கிற தாறுமாறு—விளக்கமாறுகளைப்பற்றி விகடன் சொல்லித் தான் தெரிய வேண்டுமென்பதில்லை! தாலிமுடிச்சு இல்லாதவர்கள் பிறகு சேருவது எது? குழந்தையைப் பெற்றாலுங் கூட அதை உலகம் ஒப்பாதே!

ஃ

அக்கிரமத்தில் கை தேறுவது எப்படி? அந்த முதல் தடவை துணிந்து பழகிக் கொள்வதிலிருந்து தான்! பெண்மணியைக் கெடுப்பது எப்படி? அந்த முதல் தடவை ஒரு நங்கையை ஏமாற்றிக் கற்பைக் குட்டிச் சுவராக்கித் தேறிவிடுவதில் அந்தக் கை பிறகு எதற்கும் தைரியப்

ஒரு வியாபாரி தன் கையாளுக்கு ஜனங்களை மோசம்செய்யக் கற்றுக் கொடுப்பது, கடைசியில் அந்தக் கையாளால் தானே மோசம்போகவும் செய்து விடுகிறது. ஊரை ஏமாற்றுகிற பாவம் விடுமா?

பட்டுப் போகிறது! இந்தக் கர்ம சண்டாளர்களின் சங்கதியும் வெளிக்கு வருவதில்லை! கற்பழிந்த காரிகையரும் தங்களின் சின்ன புத்திக்கு ஏங்கி வெளியிற் சொன்னால் தங்களுக்கே இழிவு என்று கால முழுதுக்கும் கண்ணீர் விட்டபடியே நாளைக் கடத்தி விடுகின்றனர்! ரகசிய சண்டாளத்தனம் ரகசியமாகவே போய் விடுகிறது! புதிதாக ஒரு காரியத்தைச் செய்து அதில் ஒரு அநுபவம் பெறுவதும் அந்த முதல் தடவையில் ஆரம்பிக்கிற மாதிரியிலிருந்து தான்! தனி வழியே போக முதல் தடவை தைரியப்பட்டுக் கெட்டிப்பட்டுவிட்டால், பிறகு எந்த இருட்டிலும் ஒண்டியாகச் செல்லப் பழகிப் போகிறது! அந்த முதல் தடவைக்குக் கணவனை எதிர்க்கப் பழகிப்போனால், காலமுழுதுக்கும் அவனை எதிர்க்கக் கற்றுக்கொண்டு விடுகிறாள்! ஆனால், இப்படி அவனை எதிர்த்து இவள் கோட்டை கட்டியதென்னவோ அது தான் விகடனுக்குத் தெரியவில்லை! இவ்விதம் எதிர்க்கிற எமகாதகிகள் தான் நீண்டநாள் மஞ்சள் குங்குமத்துடன் இருக்கிறார்கள் என்பதையும் விகடன் சொல்லவேண்டியிருக்கிறது! ஆனால், இந்த எதிர்ப்பில் அந்த ஆண்மகன் நொந்து படுகிற பாவமும், வெந்துபடுகிற பெருமூச்சும் பின்னுக்கு எமகாதகியை வெகுவாய் நோக வைத்து விடுகிறதென்பது விகடன் பல குடும்பங்களிலும் கண்ட உண்மை!

ஃ

முதல்தடவை பார்த்த பார்வையில் இருவர் மனமும் பொருந்தாவிட்டால், அவர்கள் ஆயிரம் கடிதங்கள் எழுதிக்கொண்டவர்களாயினும், அந்த சந்திப்புக்கு அப்பால் எல்லாமுமே சுருங்கிப்போகின்றன! இப்படி நோராதிருப்பதற்குத் தான் பழங்காலத்து மகாயோசனையுள்ள பெரியோர்கள் மாங்கல்யதாரணம் ஆனபிறகே பெண்ணையும் மாப்பிள்ளையையும் சந்திக்க விடுவதும், அந்த சந்திப்புநோத்தில் கூட இருவர் மனமும் பொருந்திக் கொள்ளும்படி பெண்ணுக்கு ஆணும், ஆணுக்குப் பெண்ணும் நலுங்கிடுவதும், பூச்செண்டாடுவதும், வெற்றிலை மடித்துக் கொடுக்கிற தாம்பூல சரசங்கள் நடத்துவதும், பல்லாங்குழி விளையாடுவதும், ஒரு பானைக்குள் இருவரும் கையிட்டு உடம்போடு உடம்பு தேய்த்துக்கொண்டு மோதிரம் எடுப்பதுமான இந்த சிருங்காரங்களையெல்லாம் ஏற்படுத்தி தூரப்பட்ட இருவர் மனமும் ஒன்றுபட்டுப் போகும்படியான சடங்குகளையும் விவாகத்தோடு சேர்த்து வைத்தார்கள்! அத்துடன் போகாமல் படுக்கையறைக்கும் இழுத்துப்போக வைத்துக் கதவை மூடி அங்கே ஒரு புதிய இன்பத்தையும் கண்டுகொண்டு ஒன்றுபட்டுப்போகும்படியும் செய்துவிட்டிருக்கிறார்கள்! இவ்விதம் முதன் முதலாகப் பெறுகிற அந்த சோபன விசேஷத்தின் அநுபவம் என்றைக்கும் ஞாபகத்தைவிட்டு அகலுவதேயில்லையாம்! முதன் முதலில் கண்ட அநுபவத்தின் ருசியே பெரிய ருசி. அந்த ருசிநயம் பிறகு ஒருபோதும் வாழ்நாளில் ஏற்படுவதேயில்லை. அந்த ருசிக்கு முதன்முதலில் எதிர்பார்த்த அவ்வளவு ஆவல் பிறகு தோன்றுவதுமில்லை. இவ்வளவு ஏற்பாடுகளும் அந்த முதல்தடவை இருவருக்கும் பிணக்கு ஏற்படாமல் மனது சம்மதித்து ஒப்புக்கொண்டு இணங்கிச் செல்லும்படி செய்துவைத்த மஹா முன்யோசனையான தந்திரங்கள்தான்! பிறகு கறுப்பைச் சிவப்பாக மனது

சிலர் தாம் சண்டையிட்டுக்கொண்ட விரோதத்தை வெகுகாலபரியந்தம் சாதிக்கின்றனர், அவர்கள் பட்ட மனப்புண் அப்படிச் செய்கிறது போலும்!

யினைத்துப் பக்குவப்பட்டுப் போகிறது! ஆ! எவ்வளவு சூக்ஷ்ம சங்கதி.

ஃ

இன்னொரு ஈனச் செய்கையில் பழகிவிடுகிறார்களே, அது என்ன தெரியுமா? அது இத்தனை அருமையாய்க்கொண்ட மனைவியரை அடி உதை குத்து கும்மா கொடுக்கப் புகுவதுதான்! முதல்தடவை மனைவியை யடிக்கப்புகுந்த கை சுடுகாடு போய்ச் சேருமட்டும் ஓய்வதேயில்லையடா அப்பா! நல்ல புத்தி சொல்லித் திருத்தவேண்டிய சந்தர்ப்பங்களிலும் கூட அதைச் செய்யாமல் தடியடிப் பிரசாதத்தால் திருத்தப்போய் விடுகிறார்கள்! இன்னும் கர்ப்பிணியா யிருக்கும்போது எட்டியுதைக்கிற உதைகளும் வேறே! இப்படிக் கொண்டவன் செய்யும்போது அந்தப் பாவியைப் பெற்ற மாபாவி கண்குளிரப் பார்த்து, அவன் ஆணுவத்திற்கு அப்படித்தான் வேண்டும் என்கிறாள்! இப்படிக் கைதேறிவிடுவதும் அந்த முதல்தடவை பழகிப்போகிற தன்மையிலிருந்துதான்! முதல்தடவையாய் கைநனைத்த துர்ப்புத்தியும் தீய செய்கையுமே கடைசி வரையும்!

ஃ

இன்னொரு குட்டிச்சுவர் சங்கதி இருக்கிறதே! அதாவது, ஒருவனுக்கு இன்னொருவன் ஜாமீன் கையெழுத்துப்போடுவது! இதில் முதல்தடவையாக ஒருவனுக்கு ஒரு கையெழுத்து போட்டுவிட்டால், பிறகு என்றைக்கும் இந்தக் கை அதிலேயே பழகிக் குடும்பச்சொத்தை யெல்லாம் ஜாமீன் போட்ட கடனுக்கு இழந்து நடுத் தெருவில் அலைய வைத்து விடுகிறது! முதல்தடவையாக ஒரு கோயிலுக்குப் போன இடத்தில் அங்கே மனம் பிடித்து நெஞ்சு வெகுவாய்ப் பரமனைப் பற்றிக்கொண்டு பக்தி பெருகுவதானால் பின் அடிக்கடி அந்தக் கோயில் திருவிழாக்களுக்குப் போகப் பிரயாண மூட்டை தூக்கிக்கொண்டு ஓடவைக்கிறது! காதல்—நேசம்—பகை—விரோதம் எல்லாம் அந்த முதல் தடவையில் ஏற்படுகிற மாதிரியைப் பொறுத்துத்தான்! அந்த முதல் தடவை மனது பொருந்தி அன்பானால் என்றும் அன்புதான். அல்லது கசப்பாயின் என்றும் கசப்பே!

ஃ

ஒரு தொழிலுக்கோ, ஒரு ஜீவனார்த்தத்துக்கோ அந்த முதல்தடவை எதில் புத்தி பாய்கிறதோ அதையே கடைசிவரைக்கும் தொட்டுக்கொள்ள எண்ணம் போகிறது! முதலில் தொட்டதையே கடைசிவரைக்கும் அநுசரித்துக்கொண்டு அதிலேயே பணம் பணமாக வாருவதற்கு நல்ல அதிர்ஷ்டமும் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. பலருக்கு முதலில் தொட்டது தேறாமல் போகிற சங்கதியுமுண்டு! பிறகு நாணயஸ்தன் என்று பேர்பெறுகிறதெல்லாம் அந்தமுதல்தடவை நடந்து காட்டிய சங்கதியிலிருந்தே தொடங்குகிறது! முதல்தடவையிலே மூன்று காசு முதலுடனே செய்த வியாபாரம் வெகு உற்சாகமாயிருக்கும். அதை வெகுகாலம் இந்த மனது மறவாது.

ஃ

பிறகு எத்தனை தடவை ஆணும் பெண்ணும் சந்தித்துக்கொண்டாலும் அந்த முதல்தடவையில் இருவரையும் சேர்த்து உள்ளுக்கு அனுப்புகிற வைபவத்துக்கே சோபனம் என்றும், சாந்தி

"எந்த அனுபவமும் முதல் முதல் கிடைப்பதற்குச் சமானமாகாது. சந்தோஷத்திலும் சரி, துக்கத்திலும் சரி—"

ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.

முகூர்த்தம் என்றும் ஒரு சிறப்பு கொடுத்து உயர்த்தப்படுகிறது! பிறகு எத்தனை விருந்துகள் நடந்தாலும் முதல்தடவை நடக்கிற விருந்துதான் நெடுநாளைக்கு நெஞ்சிலே இருக்கிறது. முதல் நாள்தான் வாழையிலே! இரண்டாம் நாளோ தையிலே! மூன்றாம் நாளோ கையிலே! நான்காம் நாளோ—இதென்ன கஷ்டம் இன்னும் தொலைந்துபோகாமல் வலிய வந்து உட்கார்ந்துகொண் டிருக்கிறானே என்கிற வார்த்தைகள் புறப்பட்டுக் கொள்ளும்! முதல் மருமகனுக்கும் முதல் பெண்ணுக்கும்தான் அதிக சீர் வரிசைகள்! முதன்முதல் தொட்டுக் கொள்ளும்போதுள்ள ருசி பிறகு இருப்பதில்லை.

ஃ

ஒருவன் ஒரு சபையில் பேசத் தேறுவதும், அந்த முதல்தடவை துணிந்த நெஞ்சாய் சபைக்கோழை யின்றித் தைரியப்பட்ட நெஞ்சாய்ச் செய்த பிரஸங்கத்திலிருந்துதான்! பிறகு கடன்காரனாகித் திண்டாடுவதும் அந்த முதல்தடவை கடன் வாங்கப் பழகிய பழக்கம்தான்! முதல் தடவையில் ஒருவன் ஒரு கடன்காரனுக்குக் கடுக்கா காண்பித்து ஏமாற்றித் தேறிவிட்டால், பிறகு அவன் என்றைக்கும் வாங்கிய கடனைத் திருப்பித் தராத ஜோர் பேர்வழியாகிவிடுகிறான்! முதல்தடவை ஒரு சாமிக்கோ, மனிதனுக்கோ கும்பிடுபோடப் பழகினால், அடுத்ததடவைக்குக் கைதானே கும்பிடுபோடத் தூக்கிக் கொடுக்கிறது! முதலில் போட்ட மூன்று முடிச்சுதாண்டா அப்பா! கடைசி வரையும் விடமாட்டேன் என்கிறது! அந்த முடிச்சுபக்கமே கோர்ட்டாரும் சேர்ந்துகொண்டு ஜீவனாம்சம் கொடுக்கும்படி தீர்ப்பும் எழுதிவிடுகிறார்கள்! முதல்தடவையில் வருகிற தீபாவளி பொங்கலுக்குத்தான் புது மாப்பிள்ளையை அழைத்துக் கனத்த உபசாரம் செய்வது! அதற்கு அடுத்து வருகிறவைகளுக்கு ஒரு கோவணத் துணியும் வாங்கிக்கொடுப்பதுகூடக் கிடையாது! முதல்தடவை காட்டிய விரோதம் கடைசிவரையும் விட்டேனா என்று உறும வைக்கிறது! முதல் தடவை கொண்ட சிநேகம் நெஞ்சை விட்டுப் போகிறதில்லை. முதல் தடவை தொட்டுக்கொண்ட மூக்குப் பொடி, மதுபானந்தான் கடைசி வரையும்!

ஃ

முதல்தடவை கட்டிய வீடுதான் மனதுக்கு மெத்தப் பிரியமானதாகிறது! முதல்தடவையில் எழுதுகோல் பிடித்து எழுதிய நூலின் மேல்தான் நூலாசிரியர்கள் வெகு பிரியம் வைக்கிறார்கள். பின்னுக்கு அவர்கள் எத்தனை நூல்கள் எழுதினாலும் முதல் தடவையில் எழுதிய நூலில்தான் அதிக ருசி இருக்கிறது! அதிக அபிமானமும் இருக்கிறது! முதல் தடவையாக வந்த முதல் பெண்டாட்டியைத்தான் எந்தத் தேசத்திலும் முதல்தாரமாய்க் கொண்டாடுகிறார்கள்! முதல்தடவை பெற்ற பிள்ளைதான் புஷ்டியா யிருக்கிறது! அந்த முதல் பிள்ளைதான் அரசாளவும் யோக்கியனாகிறது. அந்த முதல் பிள்ளைக்குத்தான் எல்லா செல்வமும் கொடுத்து வளர்க்கப்படுகிறது. பிறகு போடும் குட்டிகளுக்கு அத்தனை மகிமை இல்லை; நகைபூஷண—தின்பண்டங்களுமில்லை! தலைச்சன் பிள்ளைதான் மருந்துக்கு உதவுமாம். அந்தப் பிள்ளையின் கையால் மருந்து வாங்கியுண்டால் வியாதி தீர்ந்துவிடுமாம்! எல்

பெரிய மனிதர்களுக்கும் சின்ன புத்திக்கும் வெகுதூரம். ஆனால், பெரிய மனிதர்களிற் சிலர் அந்த "சின்ன" புத்தியைக் கொண்டுவிடுகிறார்கள்.

லாம் அந்த முதல்வகைக்கு ஏற்படுத்திய மகத்துவமே!

ஃ

முதல்தடவையில் ஒரு வைத்தியரிடம் மருந்து புசித்து அவ்வாது மருந்து மனதுக்குப் பிடித்துப் போனால் கடைசிவரையும் அந்த வைத்தியரிடமே நம்பிக்கை கொண்டு விடுகிறார்கள்! முதல்தடவை செய்த வியாபாரம்தான் கடைசிவரைக்கும்! முதல்தடவை ஒரு பக்ஷணத்தையோ ஒரு ஊறுகாயையோ ஒரு காய்கறியையோ வாயிற்போட்டபோது உண்டாகிற ருசியே முதல்தரமானது. பிறகு என்னதான் நாக்கை சப்பிச் சப்பிப் பார்த்தாலும் அந்த முதல் தடவை கண்ட ருசி வருகிறதேயில்லை! தென்படுவதுமில்லை! முதல் தடவை காதலுடன் கொடுத்த முத்தம்தான் முத்துக்குச் சமானம்?

ஃ

முதல்தடவை பிரிந்துவிட்ட பிரிவு, பிறகு ஒன்றுகூடினாலும் கடைசிவரையும் பிரிவுதான்; பேதப்பட்ட மனம்தான்! இவ்விதமே முதலில் ஏமாற்றியதே கடைசிவரைக்கும் வரும்! முதலில் பேசிய பொய்யோ மெய்யோ அதுவே கடைசிவரையும் பழக்கம்! முதல்தடவை போன மனப்போக்குதான் பிறகு என்றைக்கும்! முதல்தடவை ஏற்பட்ட கோணல்தான் பிறகு முழுமைக்கும்! முதல்தடவை ஒருவரையொருவர் கண்டும் பேசாமற்போனால் கடைசிவரைக்கும் அப்படித்தான்! நம்பிய அந்த முதல்தடவையிலேயே மோசம் செய்கிற பாவி கடைசிவரைக்கும் அவ்விதமே! ஆகவே, விகடன் முதல் தடவைக்கே ஒரு மகத்துவமும் முக்கியமும் இருப்பதைப் பார்த்துவிட்டுத்தான்—"எல்லாம் முதல் தடவைதான்" என்று மொத்தமாய்ச் சொல்லிவிட்டேன். முதல்தடவை போகிறவழி நல்லவழியாகவே இருக்கப் பாருங்கள்; அப்பொழுது நீங்களும் நன்றாக வாழலாம். முதலில் துணிகிற கைதான் என்றைக்கும் தொடரும்! விகடன் சொல்ல வேண்டியதைச் சொல்லி படி அளந்துவிட்டேன்! அள்ளுவதை அள்ளிக் கொள்ளுங்கள்! ராம் ராம்! சுபம்! ஞ! சுவாஹா!!


புது வருட வாழ்த்து.

நான்காம் ஆண்டு நிறைந்தைந்தாம் பருவமுற்று மானிடரின்
சிந்தாகுலநீக்கக் கீர்த்தியுடன்—வந்தார்வம்
பொங்கி வளரமிர்த குணபோதினியே! நீ என்றும்
மங்களமாய் வாழ்க மகிழ்ந்து.

சென்றதிசைதோறும் தீதகற்று மமிர்தத்திற்(கு)
ஒன்றும் நிகரில்லை யுள்ளபடி—என்றுமிதைச்
சந்தா குறைத்து தமிழ் வளர்க்கு மாசையினால்
தந்தார் இராஜகோபாலர்தான்.

நல்லான் சக்கரவர்த்தி ஜி. ஸ்ரீநிவாஸ வரதாச்சாரி.

ஒருவன் கடிகாரத்தைப் பார்த்து அந்தக் கணக்கின்படி நடப்பானானால் மற்றவர்களும் அவன் போக்குப்படியே நடப்பர். 9-மணிக்கு உத்தியோகத்திற்குப் போகிறவனுக்கு அந்த நேரத்திலேயே சாதம் தயாராய்விடுகிறது. வேலையற்றவனுக்கும், வீட்டில் கிடப்பவனுக்கும் 3-மணிக்குதான் சாதம்.



பெண்கள் விட்டுவிட்ட மஞ்சள் பூசுவதை இனி புருஷர்கள் உபயோகிக்கப்போகிறார்களாம்!

ஃ

இனி புருஷர்களும் பிள்ளை பெறுவதற்காக அவர்களின் வயிற்றில் கழுதையின் கருப்பையை வைத்துத் தைத்துவிடும் முறையை எமலோகத்து டாக்டர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறாராம்!

ஃ

அமாவாசையை ஆவலுடன் எதிர்பார்ப்பது தோலசை பலகாரத்திற்குத்தானும்!

ஃ

தான் பிறரை ஏமாறவிட்டதற்குப் பதிலாக மற்றவர் தன்னை ஏமாற்றிவிடும்போது தன் நெஞ்சின் கபடம் தன்னையே குத்துகிறதாம்!

ஃ

கிழவயதில் ஒருத்தியிருக்க இன்னொருத்தியையும் கட்டிக்கொண்டு ஒரு பெண்ணைப் பெற்றால், அந்தப் பெண்ணுக்கு வருகிற மாப்பிள்ளைக்கு மூத்தவள்—இளையவளான இந்த இருமாமிகளும் அந்தரங்க ஆசைக் கண்ணாட்டிகளாவார்களாம்!

ஃ

"கிறிஸ்தவர்கள் ஒரு மனைவியிருக்க இன்னொரு மனைவியை விவாகம் செய்யக்கூடாது" என்ற சட்டத்தை மீறுவதற்கு இந்துக்களாகிவிட்டால் அப்போது சட்டம் ஒன்றுஞ் செய்யாது" என்று அநியாயபுரம் வக்கீல் கூறுகிறார்.

ஃ

"ஒண்டியாகக் கிடந்துஉறங்குகிறவர்களின் மதன ரோகத்தை நிவர்த்தித்து அவர்களை ஆற்றித்தேற்ற, அந்தத் துயரம் தெரிந்து உருகி உதவும் இளநெஞ்சுள்ள கோகிலங்கள் ஆங்காங்கிருந்து வலிய வந்து உபசாரம் செய்தால் அது ஒரு மகா புண்ணிய கைங்கரியமாகும்" என்று விகட சித்தர் விளம்புகிறார்!

ஃ

தேவை தேவை :—(1) அடைக்கலமென்று நம்பி வைத்த சொத்தை அபக்கென்று விழுங்கிவிடும் வல்லாள கண்டர்களும், (2) ஒரு கக்ஷிக்காரனை —"எங்களை நம்பி சாக்ஷிபோடு, நாங்கள்சாக்ஷியம் சொல்லுகிறோம்" என்று சொல்லிவிட்டு, நெருக்கடியான சமயத்தில்"5-10-கொடுத்தால்தான் நாங்கள் சொல்வோம்" என்று எதிரி தரப்பில் 4--2—வாங்கிக்கொண்டு மோசம் செய்கிற கருணையாளர்களும், (3) குரூரனுக்கும், துரோகிக்கும், முரடனுக்கும், பொய் வழக்காடுவோனுக்கும், தேகத் திமிர் காட்டுவோனுக்கும் வேண்டிய ரிகார்டு ஆதாரங்கள் எடுத்துக்கொடுத்தும் இச்சகம் பேசி, ஏழைகளாயுள்ளவனுக்கும், தன்னை நம்பினவனுக்கும் நயவஞ்சகமாய் நடந்து மோசம்செய்கிற உண்மையாளர்களும் தேவையா யிருப்பதால் பிரியமுள்ளவர்கள் நடுக்கடலில்உள்ள வஞ்சகப் பேய்களின் மகா சபைக் காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளலாம்.

ஃ

"மதுவிலக்குப் பிரசாரமும் செய்ய வேணும், மதுக்கடை ஏலத்தையும் நடத்தவேணும்" என்பது, தாய் மாமனுக்கு ரகசியத்தில் உடம்பைக் கொடுக்கவும் வேணும், இனி ஒரு புதியவனைக் கல்யாணம் செய்துகொள்ளப் போவதைக் கர்ப்பமாகிக் கெடுத்துக் கொள்ளாதபடியும் இருக்க வேணும் என்பதைப்போல இருக்கிறதாம்!



Letter XXIV.

(From a young Gentleman to a Lady with whom he was in the love.)

Madam,

I have three times attempted to give you a verbal relation of the contents of this letter; but my heart has as often failed. I know not in what light it may be considered, only if I can form any notion of my own, heart, from the impression made on it by your many amiable accomplishments, my happiness in this world will, in a great measure, depend on your answer. I am not precipitate madam, nor would I desire you hand, if your heart did not accompany it. My circumstances are independent, and my charecter hitherto unblemished, of which you shall have the most undoubted proof. You have already seen some of my relations at our aunt, sin Bond—Street, particularly my mother, with whom I now live. Your aunt will inform you concerning our family, and if it is to your satisfaction, I shall not only

24-வது கடிதம்.

(ஒரு கனவானின் குமாரன், தான் காதல் கொண்ட ஒரு பெண் மணிக்கு எழுதியது.—)

பெண்ணே!

இந்தக் கடிதத்தில் அடங்கிய சங்கதியை உன்னுடன் நான் வாய் மொழியாகச் சொல்ல மூன்று தரம் எத்தனித்தாலும், அத்தனை தரமும் எனக்கு மனம் துணியாதிருந்தது. விரும்பத்தகும் உன் அழகு முதலிய பல குணாதிசயங்களைக் கண்டு எனது உள்ளத்தில் ஓர் இச்சை கொள்வே னாகில் அது என்னென்று எண்ணப் படுமோ தெரிகிலேன். ஆயினும் நான் இவ்வுலகத்தில் சுகித்து வாழ்வது மிகுதியும் உன் உத்தரவையல்லவோ தழுவியிருக்கின்றது. பெண்பாவாய், நான் இதை யோசியாமற் சொல்லவு மில்லை. நீ கொடுக்கும் ஹஸ்தத்துடன் மனதும் ஒத்திராவிட்டால் எனக்கு அது வேண்டியதுமில்லை. என் காரி யங்களுக்கு என்னையன்றித் தலைவர் யாருமில்லை. என் கீர்த்திக்கு இதுவரை யில் பழுதுமில்லை. இதை நீ தீர்க்கமாக விசாரணையும் பண்ணிக்கொள்ளலாம். 'பாண்டு' தெருவில் இருக்கும் உனது அத்தையம்மாள் வீட்டில் என் பந்துக் களிற் சிலரையும் என்னுடன் இப் போது இருக்கும் என் தாயாரையும் நீ பார்த்தே யிருப்பாய். அந்த அம் மாள் எங்கள் குடும்பத்தின் வரன் முறையை உனக்குத் தெரிவிப்பாள்.

உபாத்தியாயர் தனது மாணவனின் குமாரனுக்கும் உபாத்தியாயராகிறார். அவரது மாணவனே அவருக்குச் சம்பளம் தரக்கூடிய நிலைக்கு உயர்ந்து விடுகிறான். உபாத்தியாய ஏணி பிறரை உயர ஏற்றுமே தவிர தான் ஏறாது.

consider myself as extremely happy, but shall also make it the principal study of my future life to spend my days in the company of her, whom I prefer to all others in the world. shall wait for your answer with the utmost impatience, and am.

Madam, your real admirer

M. Wilson.

அது உனக்கு இஷ்டமாயிருந்தால் என்னை மிகுந்த பாக்கியவானாக எண்ணிக் கொள்வதுமல்லாமல், உலகத்துள்ள மற்ற பெண்களுக்கெல்லாம் சிரேஷ்டமாக நான் எண்ணியிருக்கும் உன்னுடன் கூடி நாள்விடுவதே எனக்கு முக்கிய கவலையாயும் ஆக்கிக் கொள்வேன். ஆகையால் உனது பிரதியுத்தரத்துக்கு மிகவும் ஆவலோடு காத்திருக்கிறேன்.


இப்படிக்குப் பெண்ணே!

உண்மையாக உன்மீது அதிசயிப்பவனாகிய எம். வில்ஸன்.

ஆத்திரம் எப்படி உண்டாகிறது?

தான் ஒரு காரியத்தைச் செய்திருந்து அதை மறைக்கும் போது, அந்த மறைத்த சங்கதியை அப்படியே ஒருவர் சொல்லி விடுகையில், தன்னை அறியாமலே ஆத்திரம் பொங்கிக் கொள்கிறது. தான் மறைத்தது வெளியில் வந்து விட்டதே என்று அதிக ரோஷமும், அதிக கோபமும் எழுகின்றது. "சாதம் சமைக்கவில்லை; பழைய சோறு அதிக மிருக்கிறது" என்கிறாள் மனைவி. "நீ அடுத்த வீட்டுக்காரர்களுக்கும் சேர்த்து அரிசியைப் போட்டிருக்கலாம்; அவர்களோ மரியாதையை உத்தேசித்து உடனுக்குடனே தங்கள் வீடுகளுக்குச் சென்றுவிட்டாலும், நீ திரும்பத் திரும்ப வலிய அழைப்பதால், வாவேண்டியதாகித் தங்கியிருக்க, நீயும் அவர்களுக்கென்று மூன்றுவது வேளைக்கு அதிக அரிசியைப் போட, அவர்கள் அந்த வேளைக்குத் தங்காமல் மரியாதையை எண்ணித் தங்கள் வீடுகளுக்குப் போய்விட, சாதமும் மிச்சப்பட்டு விடுகிறதாக்கும்"— என்கிறான் கணவன். இதைக் கேட்டதும் மனைவி ஆத்திரத்துடன் "நானா அவர்களுக்குச் சொல்லி யனுப்பினேன்" என்று அருகிலுள்ள குழந்தையை ஓங்கி அறைய, அது கதறுகின்றது! இதைக் கண்ட கணவன், "நீ சொல்லி யனுப்பாமலிருந்தால், இத்தனை ஆத்திரம் உனக்கு உண்டாகாது; நீ இவ்வளவு ஆத்திரப்படுவதைப் பார்க்கையில் 'நீ சொல்லி யனுப்பியிருக்கலாம்' என்றே தோன்றுகிறது; மறைத்தது வெளியில் வந்து விட்டதே என்பதில் தான் உனக்கு அதிக ஆத்திரம்" என்கிறான். ஆத்திரம் வருகிற பல வழிகளில் இதுவும் ஒன்று போலும்! ஆத்திரம் தோன்றியதும் சட்டிபானையைப் "பொத் பொத்" என்று போடுவதோ, குழந்தைகளுக்கு அடியோ, கலகமோ புறப்பட்டுக்கொள்கிறது! உள்ளதைச் சொன்னால் எரிச்சலே!

பிரபஞ்ச தரிசனம்



நல்ல வாழ்வுக்கு நல்ல உணர்ச்சிகளை வெளிக்குக் காண்பித்தல் வேண்டும். உறுதியுடன் வாழ நாம் எப்பொழுது கற்றுக்கொள்வது? மனிதனுடைய உயிருக்கு மூலதனம் அவனுடைய ஜீவதாதுவாகும். வாழ்வுக்கு அருந்தனம் அருமையான அன்பாகும். அன்பும் அறிவும் உடலில் பின்னிக்கொண்டு உயிரை விளங்க வைப்பது போல, சத்தியமும் அன்பும் சரியான பக்குவத்தில் கூடிக் கலந்து வாழ்வையும் சாவையும் தூய்மைப் படுத்த வேண்டும். அன்புக்கும், நன்மைக்கும் வாழ்ந்தபின் சாவோம். வீண்சாவு சாவதற்கும், தரித்திரத்திற்கும், வெறுமனே சோம்பிக் கிடக்கவும்—வாழவேண்டாம்.

ஃ

குமாஸ்தா என்றால் கை என்று அருத்தம். தலை என்று அருத்தமில்லை. தற்போது பயிலுவது குமாஸ்தா படிப்புத்தான். உலகத்தில் மற்ற ஜாதியார் பயிலும் படிப்பின் நோக்கமென்ன? படர்ந்த நெற்றியும், உயர்ந்த தோளும், விரிந்த மார்பும், நேர்த்தியான உருவமும், விசாலமான கண்களும், அழகு வாய்ந்த அருள் நிறைந்த முகமும், அஞ்சா நெஞ்சும், அளவிலா அன்பும், மிகுந்த பொறுமையும், கூரிய புத்தியும், குலத்திலே மதிப்பும், கல்லை யுருக்கும் கானமும், உறுதிமொழியும், உறக்க மில்லாத ஊக்கமும் உள்ள மனிதர்களாக்குதல் எல்லாத் தேசத்துப் படிப்பின் நோக்கமாகும். அப்படியிருக்க, எழுதுகோலைப் பிடித்துக் கைத்தொழிலை முற்றிலும் மறந்துபோன படிப்பின் குணமும் நோக்கமும் எவ்விதமிருக்கும்? குமாஸ்தாவுக்கு நாற்காலி மேஜை கிடைப்பதோடு, கூலிக்காரனைவிடச் சற்று அதிகச் சம்பளந்தான் இருக்கும். பணம் விஷயம் போகட்டும். அதைப் பெரிதாய் எண்ண வேண்டாம். பெரிய கைத்தொழில் விஷயங்களில் கவலையும் ஊக்கமும் உண்டாக்காத படிப்பு இருந்தென்ன? படிப்பைவிட்டுத் தொழில் பிரியக் கூடாது. தொழிலைவிட்டுப் படிப்பொன்றையே கற்பதும் சரியாகாது.

ஃ

சத்தியம் இருக்குமிடத்தில் பரிசுத்தமும் இருக்கும். பரிசுத்தமான ஹிருதயமுள்ளவனே உண்மையான பலசாலி. அவன் எந்தக் கஷ்டத்திற்கும் தாங்குவான். அரிச்சந்திரனின் பரிசுத்தம் அவரை எதற்கும் சமாளிக்க வைத்தது. பரிசுத்தனாயுள்ள ஒருவன் ஒரு சிறு களவிலோ, ஒரு வியபிசாரத்திலோ சம்பந்தப்பட்டுவிடின், தக்ஷணமே அவனது பரிசுத்தம்

குடும்பத்தில் அதிர்ப்தி பரவும்படி செய்து அதிலிருந்தும் தாங்கள் லாபம் காண நினைப்பது சிலரது வேலை, இவர்கள் உன் அருகிலேயே உள்ளார்,

ஸர்வ நாசமாகிவிடுகிறது. அதே நிமிஷம் அவன் பலக்குறைவடைந்து பெருமூச்சுவிடுகிறான். பரிசுத்தத்தின் அபார சக்தி அவனைவிட்டுப் போய் விடுகிறது. தவறுதலைச் செய்து ஒருவன் சந்தோஷப்பட்டதில்லை. அவன் நெஞ்சே அந்தத் தவறுதலுக்கு அவனைக் குத்தித் துளைக்கின்றது. எனவே, பரிசுத்தமே பலம்; சத்தியம் அதற்குத் துணை. நாம் பிறரை எமாற்றாமலும் வஞ்சிக்காமலும் சத்தியமும் பரிசுத்தமுமான வாழ்வு வாழ்கின்றோமா என்பது வினா?

ஃ

நம்முடைய சொந்த பாஷைகள் போதிய உயிர்கொண்டு உலாவவில்லை. படித்தவன் புசிப்புக்கு எங்குகிறான். வீட்டுக்குள் பஞ்சங்கள் மிகுதி. அதைவிட குடும்ப சச்சரவக் குழிகள் அதிகம். இந்த மங்களங்க(!)ளின் மத்தியிலே, பிறந்து வளரும் நம்முடைய குழந்தைகள் எட்டடி உயரமும், நாற்பது அங்குலமுள்ள மார்பும், கருணையுள்ள பார்வையும், ஊடுருவிச் செல்லும் உள்ளன்பும், உறுதியுள்ள மொழிகளும், தளராத் தீர்மானமும், தாழ்விலா நடையும் உள்ளவர்களாய் உயிர்வாழ முடியுமா? நமது குழந்தைகள் நற்குணங்களோடும் கம்பீரமாய்த் தைரியசாலிகளாக நடந்து வாழ அவர்களைப் பழக்குவதே நாம் அவர்களுக்குச் சம்பாதித்துக் கொடுக்கும் அருந்தனமாகும்.

ஃ

மாயையின் குணங்கள் வெவ்வேறு. அது உண்டாக்கும் குறிகள் அநேகம். காமிகளுக்கு மாயை ஸ்திரீ உருவம்; பணக்காரனுக்கு மாயை செல்வம்; ஏழைகளுக்கு எல்லோரும் தங்களைவிட உயர்ந்தவர்களென மாயை தோற்றுவிக்கும். தாழ்ந்தவகுப்பினரை அநியாயமாய் மனித உருவங்கொண்டவர்கள்போல மாயை காட்டும். அவர்களைத் தொட்டால்சாபமும் பாபமும் ஒட்டிக்கொள்ளும் என்று மாயைசொல்லும். மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயென்பது போல மனோநோக்கத்தைப் பொறுத்து மாயை எடுக்கும் உருவமும் அது செய்யும் வேலையும் இருக்கும். பயமும் அறிவின்மையும் குடிகொண்ட மனதுக்கு சதுப்பு நிலத்திலிருந்து எழும் தீ கொள்ளிவாய்ப் பிசாசுபோலத் தோன்றும். மாயையை வெல்லத்தகுந்த கருவி அகத்தூய்மையே. அகத்தூய்மை ஏற்படாத ஒருவனுக்குப் புறமெல்லாம் வெறும்பொய்தான்; மாயையின் வியாபகம்தான். தன்னுடைய ஒரு வயிற்றுப்பசி தீர்வதற்கு மனைவி, மக்கள், உறவினர் எல்லோரையும் சுமந்துகொண்டு பல செலவுகள் செய்து குட்டிக்காரணங்கள் போடுகிறானே; அதுவும் ஒரு மாயைதான். தன்னால்தான் குடும்பத்துக்குக் கால்வயிறு கஞ்சி கிடைக்கிறதென நினைப்பதும், அவர்களுக்குச் சொத்து சேர்ப்பதும் கூட ஒரு பெரிய மாயை தான்!

தான் கடிதம் எழுதப்போகிறவர் இன்னும் இவ்வுலகில் சுகஜீவியாய் இருப்பதாக நம்புகிற தன்மை, இவ்வுலக நிச்சயத்தைப் பற்றிக் கொண்ட பேதமையான எண்ணத்தால் தான் உண்டாகிறது.

" அமிர்த குணபோதினி "

பிரமோதூத வருஷத்திய வைகாசி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்.	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள் முதலியவை.
				[அசுபம், சூன்யதிதி, ஜில்ஹேஜ்மீ 14உ அஹஸ் 31-29.
	மேமீ (4—28)			
அ-சி	14	1	பு	துவி 44-22, அநு 7-22, ரிஷபரவி 13-56, துவிதியை
பி-சி	15	2	வி	திரி 47-1, கேட் 10-45, 3-வது திதி.
அ-பி	16	3	வெ	சது 50-53, மூல 15-30, 4-வது திதி.
சி	17	4	ச	பஞ் 55-48, பூரா 21-19, கஞ்சி-பூவிருந்தமல்லி-ரதம்,
அ	18	5	ஞா	ஷஷ் 60-0, உரா 28-6. [உத்திராடம் அசுபம்.
அ-சி	19	6	தி	ஷஷ் 1-26, ஸ்ரவ 35-20.
சி-ம	20	7	செ	ஸப் 7-18, அவி 42-32,
				கரிநாள்.
சி-அ	21	8	பு	அஷ் 12-55, சத 49-10,
				மிதுனயனம் 45-36.
சி	22	9	வி	நவ 17-43, பூட் 54-46, தசமிதிதி. [அசுபம்.
சி-அ	23	10	வெ	தச 21-18, உட் 58-55, அதிதி, அஹஸ் 31-40, ரேவதி
பி	24	11	ச	ஏகா 23-11, ரே 60-0, ஏகாதசி திதி. [துவாததி அசுபம்.
அ-சி	25	12	ஞா	துவா 23-15, ரே 1-21, சாஸ்வதீ புஷ்கரம், பிரதோஷம்,
சி	26	13	தி	திர 21-30. அசு 2-1, திதிதுவயம், சிவராத்திரி. [விரதம்
சி-அ	27	14	செ	சசி 18-4, பர 1-3, உப 57-29, அமா திதி, கிருத்திகா
சி	28	15	பு	● 13-13, ரோ 54-50, கத்திரி முடிவு, கலிகிஜயந்தி,
				[அஹஸ் 31-44.
ம	29	16	வி	பிர 7-19, மிரு 50-16, ஜ்யேஷ்டம், கரிநாள்.
சி	30	17	வெ	துவி 0-37, உப 52-53, ஆரு 45-12. கரிநான், 1349ஞு
சி	31	18	ச	சது 46-16, புந 39-59. [மோஹரமீ 1உ, துவி-அசுபம்.
	1930ஞு ஜூன்மீ			
சி	1	19	ஞா	பஞ் 39-15, பூச 34-56.
சி-ம	2	20	தி	ஷஷ் 32-40, ஆயி 30-19, ஷஷ்டிவிரதம், அஹஸ் 31-49,
				சிங்கப்பெருமான் கோயில் கருடன். [ரதம்.
சி	3	21	செ	ஸப் 26-48, மக 26-27, ஸப்தமிதிதி, ஆவடையார்கோயில்
அ	4	22	பு	அஷ் 21-53, பூர 23-29, திதிதுவயம், புதாஷ்டமி.
ம-சி	5	23	வி	நவ 17-57, உத் 21-25, தசமிதிதி, தஞ்சை கருடன்.
அ-சி	6	24	வெ	தச 14-56, ஹஸ் 20-25, கஞ்சி ஏகாம்பரநாதன் கருடன்,
				கங்காவதாரம். [கூர்மஜயந்தி.
ம-அ	7	25	ச	ஏகா 12-59, சித் 20-20, ஸர்வ ஏகாதசி, அஹஸ் 31-52,
சி-உ	8	26	ஞா	துவா 11-57, ஸ்வா 21-16, சென்னை சேக்கிழார் சுவாமி
				சந்திப்பு, பிரதோஷம், துவாதசி அசுபம்.
ம-சி	9	27	தி	திர 11-57, விசா 23-10, ஸ்ரீ நம்மாழ்வார்.
சி-உ	10	28	செ	சசி 12-58, அநு 26-0, பூர்ணிமா திதி, சித்திரகூட உத்ஸ
				வம், திருப்பாபுலியூர் திருமுலைப்பால், திருவள்ளுவர்.
சி-ம	11	29	பு	○ 14-55, கேட் 29-51, பிரதமதிதி, பவுச்சியமன்வாதி.
சி	12	30	வி	பிர 17-52, மூல 34-43, துவிதியா திதி, அஹஸ் 31-54,
பி-சி	13	31	வெ	துவி 21-50, பூரா 40-29, அதிதி. [திருஞான சம்பந்தர்

	செ, ரா	சு, பு	கு, சு
—	15உக்கு ராசி.		—
ச		கே	